# சர்வதேச, பிராந்திய அமைப்புகள்

(INTERNATIONAL & REGIONAL ORGANIZATIONS)



வெளியீடு
முசலி வாசகர் வட்டம்
Readers Circle of Musali (RCM)

முகுசீன் றயீசுத்தீன்

# சர்வதேச, பிராந்திய அமைப்புகள்
## International & Regional Organizations

முகுசீன் றயீசுத்தீன்
**BA PGDE MEd.**

## நூலின் விபரம்


| | |
|---|---|
| நூலின் தலைப்பு | : சர்வதேச, பிராந்திய அமைப்புகள் |
| நூலாசிரியர் | : முகுசீன் றயீசுத்தீன் BA, PGDE, MEd. |
| பதிப்புரிமை | : நூலாசிரியருக்கு© |
| முதலாம் பதிப்பு | : 2021 மார்ச் |
| பிரதிகள் | : 500 |
| வெளியீடு | : முசலி வாசகர் வட்டம் (RCM), முசலி. |
| பக்கங்கள் | : 209 + XII |
| விலை | : 600.00 |
| அச்சகம் | : IPC, கொழும்பு |
| ச.த.நு. இல | : 978-955-7555-04-1 |

| | |
|---|---|
| Title of the book | : SARVATHESE PIRANTHIYE AMAIPPUHAL (International & Regional Organizations) |
| Author | : MUHUSEEN RAISUDEEN BA, PGDE, MEd. |
| Copy right | : To Author© |
| First edition | : 2021 March |
| Copies | : 500 |
| Publisher | : Readers Circle of Musali (RCM), Musali. |
| Pages | : 209 + XII |
| Price | : 600.00 |
| Press | : IPC, Colombo |
| ISBN | : 978–955–7555–04–1 |

# சமர்ப்பணம்

என் அன்பு மனைவி

றழீனா பேகத்திற்கு

இந்நூல்

சமர்ப்பணம்

## முன்னுரை

'சர்வதேச - பிராந்திய அமைப்புகள்' எனும் தலைப்பிலான இந்நூல் எனது 3 ஆவது ஆக்கமாகும். அமைதி, பாதுகாப்பு, அரசியல், பொரு ளாதாரம், வர்த்தகம், சமூக கலாசாரம், விஞ்ஞான தொழில்நுட்பம், உரிமை, சுதந்திரம் போன்ற நோக்கங்களின் அடிப்படையில் தாபிக்கப் பட்ட சர்வதேச, பிராந்திய அமைப்புகள் பற்றிய அடிப்படைத் தகவல்கள் இந்நூலில் விபரிக்கப்பட்டுள்ளன.

உற்சாகமாகவும் ஆக்கபூர்வமாகவும் இயங்கிக் கொண்டிருக்கின்ற அமைப்புகள், சாதாரண நிலையிலும் பெயரளவிலும் செயற்படுகின்ற அமைப்புகள், செயலிழந்து போன பிரசித்தமான அமைப்புகள் ஆகி யன இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவை சர்வதேச, பிராந்திய, அரச, அரச சார்பற்ற வகையிலான அமைப்புகளாகும்.

குறித்த ஒரு வரையறையைப் பேணுமுகமாக இந்நூலின் தலைப்பு களை விபரிப்பதற்கு வரலாற்று அணுகுமுறை பின்பற்றப்பட்டுள்ளது. மேலதிக ஆய்வில் ஈடுபட விரும்புபவர்களுக்கு வசதியாக முக்கியத்து வத்திற்கேற்ப அமைப்புகளின் ஒப்பந்தங்கள், மாநாடுகள், உலக நிகழ் வுகள் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. சரியான உச்சரிப்பைப் பேணுமுக மாக சில பெயர்கள் ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ளன.

நம்பகத் தன்மையை உறுதிப்படுத்தும் நோக்கில் அதிகமான தகவல் கள், குறித்த அமைப்புகளின் இணையத்தளங்களிலிருந்து பெறப் பட்டுள்ளன. உலக விவகாரங்கள் சிலவும் தேவை கருதி குறிப்பிடப் பட்டுள்ளன. இலங்கை அங்கம் வகிக்கும் அமைப்புகள் தொடர்பாக சற்று கூடுதல் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அரசியல் விஞ்ஞானம், சர்வதேச உறவுகள், மனித உரிமைகள், முரண்பாடும் சமாதானத் தீர்வும், புவியியல், பொருளியல் போன்ற துறைகளில் கற்போருக்கும் பல்வேறு போட்டிப் பரீட்சைகள், தடை தாண்டல் பரீட்சைகள், பொது அறிவு போன்றவற்றிற்கும் இந்நூல் உதவுமென எதிர்பார்க்கிறேன். மறுபதிப்பில் இன்னும் சில அமைப்பு கள் சேர்த்துக்கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

இந்நூலுக்கு அணிந்துரை எழுதியுள்ள கலாநிதி M.S. அனீஸ்

அவர்களுக்கும் நூலில் என்னைப் பற்றி எழுதியுள்ள கலாநிதி பரீனா ருசைக் அவர்களுக்கும் நூலுக்கு வெளியீட்டுரை எழுதியுள்ள சட்டத் தரணி M.S. ஹஸ்மி அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியி னைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விசாலமான பரப்பைக் கொண்ட தலைப்பாக இருப்பதால் பொருத்த மெனக் கருதும் ஆலோசனைகளைத் தெரிவித்தால் மறுபதிப்பில் சீரமைத்துக் கொள்ள உதவியாக இருக்கும். சிறந்த சிந்தனைகளை யும் ஆரோக்கியமான ஆக்கங்களையும் சமூகத்துக்கு சமர்ப்பித்திட வேண்டும் என்ற அவாவில் அவற்றை நூலுரு வடிவங்களாக்க உதவிய இறைவனுக்கே புகழனைத்தும் உரித்தாகும்.

முகுசீன் றயீசுத்தீன்

2021.02.25

Mr. Muhuseen Raisudeen
Water Tank Road
Chilavathurai (41004)
Mannar

Contact: 0094714443619
Email.: m.raisudeen@yahoo.com

## அணிந்துரை

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவரும், அரசியல் விஞ்ஞானத்தினை மிக நீண்டகாலமாக கற்பித்துவரும் ஆசிரியரும், மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேச சபையின் தற்போதைய உப தவிசாளருமான என் அன்பிற்குரிய மாணவன் முகுசீன் றயீசுத்தீன் அவர்கள் எழுதி வெளியிடும் “சர்வதேச, பிராந்திய அமைப்புகள்” எனும் இந்த அழகிய நூலுக்கு அணிந்துரை எழுதுவதினையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

க.பொ.த. உயர்தரத்திலும், பல்கலைக்கழகங்களிலும், பட்டப்பின் படிப்பிலும் என இன்று அரசியல் விஞ்ஞானம் மற்றும் சர்வதேச உறவு களை ஒரு பாடமாகவும் கற்கை நெறியாகவும் கற்கும் மாணவர்க ளின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துக் கொண்டே செல்லும் ஒரு காலமிது. மாணவர்கள் மாத்திரமின்றி அரசியல்வாதிகள், இராஜதந்தி ரிகள், ஊடகவியலாளர்கள், அரசியல் மற்றும் சர்வதேச விடயங்கள் தொடர்பான ஆய்வாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், சமாதான செயற்பாட்டாளர்கள் என பலதரப்பட்ட பிரிவினரும் இன்று இந்தப் பாடங் களை கற்றுவருகின்றனர். இந்தப் பாடங்களை கற்கும் போது சர்வதேச மற்றும் பிராந்திய அமைப்புகள் என்பன முக்கிய இடத்தினைப் பெறு கின்றன. இவற்றை விடுத்து கற்கும் எந்தவொரு கற்கையும் அரசியல் விஞ்ஞானம் மற்றும் சர்வதேச விவகாரங்கள் தொடர்பான ஒரு பூரண கற்கையாக இருக்க முடியாத அளவிற்கு இவை இன்று முக்கியத்துவம் பெறுகின்றன.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை சர்வதேச மற்றும் பிராந்திய அமைப்புகள் என்பன உலக நாடுகளின் நடைமுறை அரசியலில் அவ்வளவு தூரம் முக்கியம் பெறவில்லை என்றே கூற வேண்டும். முதலாம் உலக மகா யுத்தத்தின் (1914-1918) பாரிய அழிவுகளும் அதனால் ஏற்பட்ட பொருளாதார பின்னடைவுகளும் ஒரு சர்வதேச அமைப்பின் அவசியத்தை வலியுறுத்தியதன் விளைவே “சர்வதேச சங்கம்” தோன்ற வழிவகுத்தது எனலாம். இரண்டாம் உலக மகா யுத்தம் (1939-1945) முடிவடைந்த போது தான் யுத்தமற்ற ஒரு உலக சமா தானம் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக சர்வதேச நாடுகளால்

உணரப்பட்டது. இதன் விளைவாகவே இன்று உலகில் அதிகம் சக்தி வாய்ந்த அமைப்பாகக் கருதப்படும் ஐ. நா. சபை 1945 இல் உருவாக் கப்பட்டது.

இன்று உலக சமாதானம், நாடுகளிடையே நட்புறவு, சர்வதேச மற்றும் பிராந்திய பாதுகாப்பு,பொருளாதார அபிவிருத்தி, சர்வதேச வர்த் தகம், வறுமை ஒழிப்பு, நோய்த்தடுப்பு, கலை, கல்வி, கலாச்சாரம், தொழில்நுட்பம், பயங்கரவாத தடுப்பு, போதைப்பொருள் கடத்தல் தடுப்பு, ஆயுதக் கடத்தல் தடை, மனித உரிமைகள், சூழல் பாதுகாப்பு, என பலதரப்பட்ட விடயங்கள் தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள அரச சார் மற்றும் அரச சார்பற்ற முன்னூறுக்கும் அதிகமான சர்வதேச மற்றும் பிராந்திய அமைப்புகள் காணப்படுகின்றன. இவை தவிர பல பல்தேசிய கூட்டுத்தாபனங்களும் செயல்பாட்டில் உள்ளன. நடைமுறை யில் அதிக மாகப் பேசப்பட்டு வரும் பூகோளமயமாக்கல் செயன்முறை யின் கீழ் இந்த அமைப்புகளின் இயக்கமின்றி உலகம் ஒருநாள் கூட செயல்பட முடியாது எனக் கூறுமளவிற்கு அவற்றின் முக்கியத்துவம் இன்று காணப்படுகின்றது.

பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் தமிழ் மொழி மூலம் இந்த பாடங்கள் தொடர்பாக கற்போருக்கும், இந்த விடயம் தொடர்பான ஆழமான அறிவினைப் பெற முனைபவர்களுக்கும், மேலதிக ஆய்வுகள் செய்ய விரும்புபவர்களுக்கும் உள்ள அடிப்படை பிரச்சினைகள் நன்கு உணரப்பட்டுள்ளதாலேயே ஆசிரியர் 'முகுசீன் றயீசுத்தீன்' அவர்கள் இந்த நூலினை எழுதியுள்ளார்கள் என எண்ணத் தோன்றுகிறது. இதன் விளைவாகவே சர்வதேச மற்றும் பிராந்திய அமைப்புகள் பற்றிய அடிப்படைகளை விளக்கக் கூடிய விதத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில அமைப்புகள் பற்றிய குறிப்புகளுடன் இந்த நூல் எழுதப்பட்டுள்ளது. தமிழ் மொழியில் போதுமான அளவு ஏற்கனவே எழுதப்பட்டுள்ள நூல்கள் நம் நாட்டில் இல்லை என்பதனை அவர் இந்த நூலினை எழுதுவதற்காகப் பயன்படுத்தியுள்ள மூலங்களின் பட்டியல் தெளிவுபடுத்தி நிற்கின்றது. இந்தியாவில் இத்துறை தொடர்பாக எழுதப் பட்டுள்ள நூல்கள் ஓரளவு இருக்கின்ற போதிலும் நமது நாட்டில் அவை இல்லாத குறையினை இந்த நூல் ஓரளவேனும் நிவர்த்தி செய்யும்,

செய்ய வேண்டும் என்பது எனது ஆழமான எதிர்பார்ப்பும் நம்பிக்கையு மாகும்.

கடந்த காலங்களைப் போலல்லாது இப்போது பல இளம் ஆசிரியர் கள் இந்தத்துறைகள் தொடர்பான நூல்களை எழுதி வருவது மனதுக்கு பெரும் ஆறுதலாய் உள்ளது. அந்த வகையில் ஆசிரியர் முகுசீன் றயீசுத் தீனின் மூன்றாவது நூலாக வெளிவரும் இந்த நூலினை பலரும் கற்று பயன்பெற வேண்டுமென உளப்பூர்வமாக எதிர்பார்ப்பதோடு அவரது எழுத்துப் பணியும் கற்பித்தல் பணியும் நீண்ட காலம் தொடர வேண்டுமெனவும் வாழ்த்தி அவரது நீண்ட ஆயுளுக்கும் நோயற்ற வாழ்வுக்கும் பிரார்த்தித்தவனாக விடை பெறுகிறேன்.

நன்றி

கலாநிதி எம்.எஸ். அனீஸ்
BA (Hons) (Peradeniya-SL), MA & Ph.D (Nagoya-JPN)
சிரேஸ்ட்ட விரிவுரையாளர்,
அரசியல் விஞ்ஞான மற்றும் பொதுக்கொள்கைத் துறை,
கொழும்புப் பல்கலைக்கழகம்.
முன்னை நாள்:
ஈரானிய இஸ்லாமிய குடியரசுக்கான இலங்கைத் தூதுவர்
தலைவர் - இலங்கை தரநிர்ணய கட்டளைகள் நிறுவனம்

## வெளியீட்டுரை

'முசலி வாசகர் வட்டம்' (RCM) என்பது முசலிப் பிரதேசத்தை மையமாகக் கொண்டு இயங்கும் ஒரு தன்னார்வ அமைப்பாகும். இதன்மூலம் முசலிப் பிரதேசத்திலுள்ள புத்திஜீவிகளை ஒன்றிணைத்தல், கற்றவர்கள், மாணவர்கள், பொதுமக்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்தல், மாதாந்த வாசிப்பு மன்றங்களை நடாத்துதல், எழுத்தாளர்களை ஊக்குவித்தல், எழுத்தாளர்களை உருவாக்கல், வெளியீட்டு நிகழ்வுகளை நடாத்துதல் போன்ற மையச் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வருகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் அரசியல் விஞ்ஞான பாடக் கற்பித்தலில் நீண்ட அனுபவமுடையவரும் அரசியல் கற்கைசார் நூல்களை எழுதி வருபவரும் பத்திரிகை எழுத்தாளருமான ஆசிரியர் 'முகுசீன் றயீசுத்தீன்' அவர்களால் எழுதப்பட்ட 'சர்வதேச, பிராந்திய அமைப்புகள்' என்ற நூலை முசலி வாசகர் வட்டம் தனது கன்னி வெளியீடாக வெளியீடு செய்து வைப்பதில் பெருமிதம் அடைகின்றது.

இந்நூல் உயர் தரத்தில் அரசியல் விஞ்ஞானம், புவியியல், பொருளியல் போன்ற பாடங்களைக் கற்கின்ற மாணர்வகளுக்கு பெரும் உதவியாக இருக்கும் என்பதோடு துறைசார் ஆசிரியர்களுக்கு சிறந்த உசாத்துணையாகவும் போட்டிப் பரீட்சைகளுக்குத் தோற்ற ஆயத்தமாகுபவர்களுக்கு சிறந்த அறிவுத் திரட்டாகவும் அனைத்து வாசகர்களுக்கும் அறிவுக்கு விருந்தாகவும் அமையுமென திடமாக நம்புகிறேன்.

இந்நூலினை வெளியிட்டு வைப்பதற்கான சந்தர்ப்பத்தை எமக்கு வழங்கிய இந்நூலாசிரியரை வாழ்த்துவதோடு பயனுள்ள பல நூல்களை மென்மேலும் வெளியிட வேண்டுமென கேட்டுக்கொண்டு நூலாசிரியரின் பணி தொடர்வதற்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

சட்டத்தரணி M.S. ஹஸ்மி BA (Econ), LLB
தலைவர் - முசலி வாசகர் வட்டம் (RMC)

## உள்ளடக்கம்


| விடயம் | பக்கம் |
| --- | --- |
| ▸ முன்னுரை | iv |
| ▸ அணிந்துரை | vi |
| ▸ வெளியீட்டுரை | ix |
| ▸ உள்ளடக்கம் | x |
| **சர்வதேச உறவுகள் அறிமுகம்** | **01** |
| 1. சர்வதேச, பிராந்திய அமைப்புகள் | 02 |
| 2. இலங்கையின் வெளிநாட்டு உறவுகள் | 05 |
| **ஐக்கிய நாடுகள் தொடர்பான அமைப்புகள்** | **14** |
| 3. ஐக்கிய நாடுகள் சபை (United Nations) | 15 |
| 4. சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) | 24 |
| 5. உலக வங்கி (World Bank) | 26 |
| 6. சர்வதேச நாணய நிதியம் (IMF) | 29 |
| 7. உணவு, விவசாய அமைப்பு (FAO) | 31 |
| 8. ஐ.நா. கல்வி, விஞ்ஞான, கலாசார அமைப்பு (UNESCO) | 33 |
| 9. உலக சுகாதார அமைப்பு (WHO) | 35 |
| 10. உலக வர்த்தக அமைப்பு (WTO) | 37 |
| 11. ஐ.நா. சிறுவர் நிதியம் (UNICEF) | 39 |
| 12. ஐ.நா. அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் (UNHCR) | 41 |
| 13. ஐ.நா. அபிவிருத்திச் செயற்றிட்டம் (UNDP) | 43 |
| 14. ஐ.நா. சனத்தொகை நிதியம் (UNFPA) | 45 |
| 15. ஐ.நா. மனித உரிமைகள் பேரவை (UNHRC) | 47 |
| 16. சர்வதேச அணுசக்தி முகவரகம் (IAEA) | 50 |
| 17. சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICC) | 52 |
| 18. சர்வதேச புலம்பெயர்வுக்கான அமைப்பு (IOM) | 55 |
| 19. குழு-77 கூட்டமைப்பு (G-77) | 59 |
| **சர்வதேச அரசு சார்பு அமைப்புகள்** | **61** |
| 20. பொதுநலவாய அமைப்பு (Commonwealth) | 62 |
| 21. கொழும்புத் திட்டம் (Colombo Plan) | 67 |
| 22. பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு (OPEC) | 70 |
| 23. அணிசேரா இயக்கம் (NAM) | 72 |

24. ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) 81
25. இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு (OIC) 85
26. அணு விநியோகக் குழு (NSG) 87
27. குழு-7 கூட்டமைப்பு (G-7) 90
28. குழு-15 கூட்டமைப்பு (G-15) 92
29. ஷங்காய் கூட்டுறவு அமைப்பு (SCO) 95
30. பிரிக்ஸ் (BRICS) 98
31. குழு-20 கூட்டமைப்பு (G-20) 100
32. மிக்டா (MIKTA) 103
33. பசிபிக் கடந்த பங்காளர் (TPP) 105
**பிராந்திய அரசு சார்பு அமைப்புகள் 107**
34. அரபு லீக் (Arab League) 108
35. வட அத்லாந்திக் ஒப்பந்த அமைப்பு (NATO) 108
36. ஐரோப்பிய ஒன்றியம் (European Union) 114
37. அமெரிக்க அரசுகளின் அமைப்பு (OAS) 119
38. ஆபிரிக்க ஒன்றியம் (AU) 122
39. தென்கிழக்காசிய நாடுகளின் சங்கம் (ASEAN) 126
40. கரீபிய சமூகம் (CARICOM) 130
41. கிழக்கு கரீபிய அரசுகளின் அமைப்பு (OECS) 135
42. தென்னாசிய பிராந்திய ஒத்துழைப்புக்கான அமைப்பு (SAARC) 137
43. ஆசிய - பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு (APEC) 145
44. வட அமெரிக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (NAFTA) 147
45. கரீபியன் நாடுகளின் சங்கம் (ACS) 149
46. மேர்கோஸர் (MERCOSUR) 151
47. இந்து சமுத்திர கரையோர சங்கம் (IORA) 153
48. பிம்ஸ்டெக் (BIMSTEC) 157
49. கருங்கடல் பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பு (BSEC) 159
50. எமது அமெரிக்க மக்களுக்கான பொலிவேரியன் கூட்டணி (ALBA) 161
51. மத்தியதரை ஒன்றியம் (UfM) 164
52. தென் அமெரிக்க நாடுகள் ஒன்றியம் (UNASUR) 166
53. பசிபிக் கூட்டணி (Pacific Alliance) 168

54. லத்தீன் அமெரிக்க, கரீபியன் நாடுகளின் சமூகம் (CELAC) 170
**செயலிழந்த பாதுகாப்பு அமைப்புகள்** 172
55. சர்வதேச கழகம் (LN) 173
56. அன்சஸ் (ANZUS) 177
57. சியாடோ (SEATO) 179
58. சென்டோ (CENTO) 181
59. வார்ஸோ (WARSAW) 183
**சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகள்** **185**
60. சர்வதேச செஞ்சிலுவைக் குழு (ICRC) 186
61. சர்வதேச மன்னிப்புச் சபை (AI) 192
62. மனித உரிமைகள் கண்காணிப்பு (HRW) 196

- உசாத்துணைகள் 199
- மாதிரி வினாக்கள் 203

# சர்வதேச உறவுகள் - அறிமுகம்

1. சர்வதேச, பிராந்திய அமைப்புகள்
2. இலங்கையின் வெளிநாட்டு உறவுகள்



உலகளாவிய அரசு முறையில் பலதரப்பட்ட விடயங்களிலும் தொடர்பாடல் மேற்கொள்ளப்படும் ஒரு வடிவமாக சர்வதேச, பிராந்திய அமைப்புகள் தாபிக்கப்படுகின்றன. சர்வதேச சமூகம் தமக்கிடையிலான பல்வேறுபட்ட உறவுகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளும் ஒரு வழியாக ஒப்பந்தம் அல்லது சாசனம் மூலம் அரசுகளாலோ, தனிநபர்களாலோ பிராந்திய ரீதியில் அல்லது சர்வதேச மட்டத்தில் இவ்விதம் அமைப்புகள் உருவாக்கப்படுகின்றன.

# 01

## சர்வதேச, பிராந்திய அமைப்புகள்
(International & Regional Organizations)

*நாடுகள் தமக்கிடையே கூட்டமைப்புகளை உருவாக்கிக் கொள்ளும் போக்கு 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே அவதானிக்கப்பட்டது. தத்தம் அதிகாரங்களை நிலைப்படுத்திக் கொள்ளும் முயற்சியில் நாடுகள் முனைப்புக்காட்டிய போது முதலாம், 2 ஆம் உலக மகா யுத்தங்கள் ஏற்பட்டன. யுத்தத்தை நிறுத்தவும் மீண்டுமொரு யுத்தம் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொண்டு உலக சமாதானத்தை உறுதிப்படுத்தவும் சர்வதேச கழகம் (Leaque of Nations), ஐக்கிய நாடுகள் சபை (UN) என்பன உருவாக்கப்பட்டன.*

*இதில் பூரண திருப்தி காணப்படாததால் பாதுகாப்புக் கருதி பிராந்திய ரீதியில் அமைப்புகள் உருவாகின. குறிப்பாக அணு சக்தி, இரசாயன, உயிரியல் ஆயுதங்களிலிருந்து பாதுகாப்பும் கொம்யூனிச, முதலாளித்துவ சித்தாந்த போட்டியும் விஸ்தரிப்பும் இதற்கு முக்கிய காரணங்களாகும். முதலாளித்துவ சித்தாந்த*

அணுகுமுறை மூலம் ஐக்கிய அமெரிக்கா தலைமையில் NATO இராணுவக் கூட்டமைப்பும் கொம்யூனிச கோட்பாட்டின் அடிப் படையில் சோவியத் றஷ்யா தலைமையில் WARSAW இராணுவக் கூட்டமைப்பும் உருவாகின.

*2* ஆம் உலக மகா யுத்தத்தின் பின்னர் ஐக்கிய அமெரிக்கா வும் ஐரோப்பாவுமே உலக விவகாரங்களைத் தீர்மானித்தன. ஐக்கிய அமெரிக்கா மேற்கு ஐரோப்பாவையும் சோவியத் றஷ்யா கிழக்கு ஐரோப்பாவையும் தத்தமது கட்டுப்பாட்டில் வைத்து உலகை இரு பெரும் முகாம்களாக்கின. ஐக்கிய அமெரிக்கா வும் சோவியத் றஷ்யாவும் தத்தம் நலன்களுக்காக உருவாக்கிய இராணுவக்கூட்டமைப்புகளைக் கொண்டு நிழல் நாடுகளில் பனிப் போர் (Cold War) நடத்தின. கொரிய யுத்தம், வியட்னாம் யுத்தம் என்பன பிரசித்தமானவை.

*2* ஆம் உலக மகா யுத்தத்தின் பின்னர் புதிய அரசியல் சிந்த னைகள், சுயாதிபத்தியம் உருவாகின. காலனித்துவ நாடுகள் பல சுதந்திரமடைந்தன. ஐக்கிய நாடுகள் சபை இதற்கு உதவியது. பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட ஐரோப்பாவைக் கட்டி யெழுப்ப ஐரோப்பிய பொருளாதார சமூகம் (EEC) மூலம் ஐரோப்பிய நாடுகள் சில ஒன்றிணையத் தொடங்கின.

ஐக்கிய அமெரிக்கா, சோவியத் றஷ்யா ஆகியவற்றின் போட்டி நிலையையும் தனிப்பெரும் ஆதிக்கவாதத்தையும் விரும்பாத ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த *3* ஆம் மண்டல நாடுகள் பல அணிசேரா இயக்கத்தை (NAM) தோற்றுவித்தன. தொடர்ந்து ASEAN, SAARC என பிராந்திய ரீதி யில் சமூக, பொருளாதார, வர்த்தக நோக்கங்களின் அடிப்படை யில் அமைப்புகள் உருவாகின.

*1990* இல் சோவியத் றஷ்யா பிளவுபட்டு கொம்யூனிச அணி பலவீனமடைந்ததோடு இருதுருவ உலக ஒழுங்குமுறை மேற்கு நோக்கிய அதிகாரக் குவிப்புக்கு வழிவகுத்தது. எனினும் அண்மைக் காலங்களில் சீனா, இந்தியா, பிரேசில்,

தென்னாபிரிக்கா, றஷ்யா இணைந்த BRICS உருவாக்கம், ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) எழுச்சி போன்ற பொருளாதாரக் கூட்டுக்கள் பல்துருவ உலக ஒழுங்கை வெளிக்காட்டுகின்றன.

சர்வதேச அரசு சார்பு அமைப்புகள் (International Governmental Organizations), பிராந்திய அரசு சார்பு அமைப்புகள் (Regional Governmental Organizations) என்பவற்றைப் போலவே சர்வதேச அரசு சாரா அமைப்புகள் (International Non Governmental Organizations) பலவும் தனிநபர்களால் அல்லது சிலரைக் கொண்ட குழுக்களால் உருவாக்கப்பட்டு சர்வதேச அரசியலில் இன்று செல்வாக்குடைய சக்திகளாக விளங்குகின்றன.

சர்வதேச செஞ்சிலுவைக் குழு (ICRC), சர்வதேச மன்னிப்புச் சபை (AI), மனித உரிமைகள் கண்காணிப்பகம் (HRW) என்பன உலகப் பிரசித்தமான சர்வதேச அரசு சாரா- மனிதாபிமான தொண்டு அமைப்புகளாகும்.

அண்மைய தசாப்தங்களில் உள்ளூர் உற்பத்திகளை பிராந்திய நாடுகளில் சந்தைப்படுத்தும் உபாய முறையொன்றாக பல்வேறு வகைகளில் அரசுகள் பிராந்திய கூட்டணிகளைத் தாபித்து பலப்படுத்தும் போக்கு வளர்ச்சியடைந்துள்ளது. இவ்விதம் பாதுகாப்பு, பொருளாதாரம், வர்த்தகம் சார்ந்த வகையில் அரசுகளும் உரிமை, சுதந்திரம், மனித கௌரவம் சார்ந்த வகையில் தனிநபர்களும் சர்வதேச பிராந்திய தாபனங்களை உருவாக்கிக் கொள்ளும் போக்கு அவதானிக்கப்படுகிறது.

# 02

# இலங்கையின் வெளிவிவகாரம்

(Foreign Affairs of Sri Lanka)

*ஒரு அரசு ஏனைய அரசுகளுடன் கொண்டுள்ள தொடர்புகள் வெளிநாட்டு உறவாகும். இவ்வுறவுகளை வழிநடத்துவது வெளிவி வகாரக் கொள்கையாகும். அரசொன்றின் உள்ளகத் தேவை, நிலை மைகளின் அடிப்படையில் எழும் சர்வதேச நோக்கம், அதனை அடையும் உபாயங்கள் என்பன வெளிவிவகாரக் கொள்கையில் காணப்படும்.*

*சில நாடுகள் தங்களுக்கிடையே நல்லுறவைக் கொண்டு காணப் படுகின்ற போதும், சில நாடுகள் தங்களுக்கிடையே எப்போதும் திருப்திகரமான உறவுகளைக் கொண்டிருப்பதில்லை. இலங்கை யின் வெளியுறவுத் தொடர்புகளையும் கொள்கைகளையும் பின் வரும் காரணிகள் தீர்மானிக்கின்றன.*

- *புவிசார் அமைவிடம்*
- *சித்தாந்த வேறுபாடு*

- *ஆட்சியாளர்களின் அபிலாஷைகள்*
- *பொருளாதார, இராணுவத் தேவைகள்*
- *சமய, கலாசாரத் தொடர்புகள்*
- *சர்வதேச வலுச்சமநிலை*
- *மக்களின் எதிர்பார்ப்பும் ஆதிக்கவாதக் கருத்தியலும்*

- *இந்தியாவுடன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உறவு பேணப்படுகிறது. மாலைதீவு, பாகிஸ்தானுடனும் இத்தகைய புவிசார் தொடர்புகள் உள்ளன. இந்து சமுத்திரத்தில் இலங்கையின் முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடம் அதிக தொடர்புகளுக்குக் காரணமாகின்றது.*

- *சுதந்திரத்தின் பின் முதலாளித்துவக் கொள்கை கொண்ட ஐக்கிய தேசிய கட்சி (UNP), ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய நாடுகளுடனும் கொம்யூனிசக் கொள்கையுடைய சிறீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP), சோவியத் றஷ்யா, சீனா ஆகிய நாடுகளுடனும் நெருக்கமான உறவைப் பேணின.*

- ***1956** இல் பிரதமர் SWRD பண்டாரநாயக, இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேருவுடன் நட்பு. பின்னர் இது சிறீமா - இந்திரா காலத்திலும் தொடர்ந்தது. **1977** இல் பதவிக்கு வந்த J.R. ஜயவர்தனவுடன் ஜப்பான் விசேட தொடர்புகளைப் பேணியது.*

- *ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, சீனா, ஜப்பான், இஸ்ரேல், பாகிஸ்தான், மத்திய கிழக்கு நாடுகளுடன் பொருளாதார, இராணுவத் தேவைகளுக்கான தொடர்புகள்*

- *இந்தியாவிலிருந்து பௌத்த மதம் பரவியதோடு பௌத்த, இந்து சமய கலாசாரத் தொடர்புகள், இலங்கை முஸ்லிம் களைக் கருத்திற் கொண்டு மத்திய கிழக்கு நாடுகளுடனான தொடர்புகள்*

- *சர்வதேச சமூகத்தில் உருவாகும் ஒருதுருவ, இருதுருவ, பல்துருவ வலுச்சமநிலையின் போதான சந்தர்ப்ப முடிவுகள்*

- சர்வதேச - பிராந்திய சூழ்நிலையையும் மக்களின் விருப்பு வெறுப்பையும் உள்நாட்டுத் தேவையையும் அடிப்படை யாகக் கொண்டு மேற்கு சார்பு, சீன சார்பு, இந்திய சார்பு என அவ்வப்போது வேறுபட்ட கொள்கைகள் பின்பற்றப்படுகின் றன.

சர்வதேச - பிராந்திய கூட்டமைப்புகள், உலகமயமாதல், தகவல் தொழிநுட்பம், இயற்கை அனர்த்தங்கள், காலநிலை மாற்றங்கள், பயங்கரவாத மற்றும் போராட்ட இயக்கங்கள், சுகா தார மருத்துவம் என்பனவும் வெளிவிவகாரக் கொள்கையைத் தீர்மானிப்பதில் பங்களிப்புச் செலுத்துகின்றன.

**வெளிநாட்டுக் கொள்கை** (Foreign Policy)

**1948 – 1952 UNP – D.S சேனநாயக (பிரதமர்)**

- இலங்கையின் முதலாவது வெளியுறவுக் கொள்கை காலனித்து வம் கலந்ததாக பின்பற்றப்பட்டது.
- ஏகாதிபத்தியம் சார்பு, மேற்கத்தைய சார்பு, கொம்யூனிஸ எதிர்ப்பு, இந்தியாவுடன் உறவின்மை
- பிரித்தானியா, பாகிஸ்தான், கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுடன் பொதுநலவாய உறவு
- பிரித்தானிய தூதரகத்தினூடாக வெளிவிவகாரம் செயற்பட் டதால் பிரித்தானிய செல்வாக்கு
- ஒப்பந்தப்படி திருகோணமலை கடற்படைத் தளமும் கட்டுநா யக விமானப்படைத்தளமும் பிரித்தானியர் வசமிருந்தன.
- இக்காலத்தில் கொம்யூனிச றஷ்யா, சீனா போன்ற நாடுகளு டன் உறவு பேணப்படவில்லை.
- இதனால் 1948 இலிருந்து ஐ. நா. வில் இலங்கை அங்கத்து வமாவதை றஷ்யா ‘வீட்டோ’ செய்து வந்தது.

**1952 – 1954 UNP - டட்லி சேனநாயக (பிரதமர்)**

- D.S. சேனநாயகாவின் அதே வெளிவிவகாரக் கொள்கை

- இஸ்ரேலுடனும் உறவு பேணப்பட்டது.
- *1950* இல் சீன மக்கள் குடியரசை இலங்கை அங்கீகரித்தது முதல் இலங்கை – சீன உறவு காணப்பட்டது. அத்துடன் *1952* இலங்கை - சீன (அரிசி, றப்பர்) ஒப்பந்தம்

## 1954 – 1956 UNP– Sir ஜோன் கொத்தலாவல (பிரதமர்)

- ஐ.தே.க. வின் அதே மேற்கத்தைய சார்பு வெளியுறவுக் கொள்கை
- கொம்யூனிச நாடுகளுடன் தீவிர எதிர்ப்பு
- *1955* இல் இலங்கை ஐ. நா. வில் அங்கத்துவம் பெற்றது.

## 1956 – 1959 SLFP – SWRD பண்டாரநாயக (பிரதமர்)

- வெளிவிவகாரக் கொள்கையில் பாரிய திருப்புமுனை
- மேற்கத்தைய தொடர்பு துண்டிப்பு, கொம்யூனிச சார்பும் தொடர்பும்
- இந்திய உறவு : நேருவின் கொள்கையில் அதிக பற்று
- அணிசேரா கொள்கையால் பண்டா கவரப்பட்டார்.
- *1956* - முன்னாள் செக்கோஸ்லோவாகியாவுடன் இருதரப்பு உறவு
- *1957* சீனா, றஷ்யாவுடன் தூதரக மட்ட உறவுகள், தூதுவர்கள் நியமனம் (USSR - பேராசிரியர் GP மலலசேகர, China - வில்மட் A. பெரேரா)
- *1957* பெப்ரவரி - சீனத் தலைவர் Zhou Enlai இலங்கை விஜயம்
- முதன்முறையாக வெளியுறவுத்துறை சம்பந்தமான ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டு *30* வயதுக்குட்பட்டோர் பயிற்றுவிக்கப்பட்டனர்.
- *1957* - UK கப்பல், விமானப்படைத் தளங்கள் அகற்றப்பட்டன.
- *1957* நவம்பர் - சோவியத் கலாசாரக் குழு இலங்கை விஜயம்

- *1958* பெப்ரவரி - செக். பிரதமர் Villiam Siroky இலங்கை விஜயம்
- *1958* பெப்ரவரி - SL – USSR பொருளாதார ஒப்பந்தம்

**1960 – 1965 SLFP – *சீறிமாவோ பண்டாரநாயக (பிரதமர்)***

- SWRD பண்டாரநாயகாவின் அதே வெளியுறவுக் கொள்கை
- கொம்யூனிஸ நாடுகளுடன் உறவு மேலும் வளர்க்கப்பட்டது.
- *1962* பெப்ரவரி - SL – USSR ஒப்பந்தம்
- *1963* ஜனவரி - SL – China ஒப்பந்தம் (பொருளாதாரம், சமயம், கலாசாரம்)
- *1963* ஏப்ரல் - SL – Poland ஒப்பந்தம் (கைத்தொழில் உபகரணங்கள், கனரக உற்பத்தி, சிறிய கருவி உற்பத்தி)
- *1963* ஜூலை - SL – China ஒப்பந்தம் (வர்த்தகக் கப்பல் பயன்பாடு)
- *1964* ஒக்டோபர் - SL – USSR ஒப்பந்தம் (பல உதிரிப்பாகங்கள், பண்ணை உற்பத்திக்கான உதவிகள்)
- *1965* பெப்ரவரி - SL – Germany ஒப்பந்தம் (பிடவைக் கைத் தொழில், இரசாயன உற்பத்தி அபிவிருத்தி)
- *1963* - அணுவாயுதத் தடை ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத் திட்டது.
- அணிசேரா இயக்கத்தில் இவரின் பங்கு மிக முக்கியத்துவம்
- றஷ்யா, சீனா ஆகிய நாடுகளுடன் பல ஒப்பந்தங்களில் கைச் சாத்து
- முன்னாள் செக்கோஸ்லோவாகியா, பல்கேரியா, ஹங்கேரி, போலந்து, ரொமேனியா ஆகிய சோசலிச நாடுகளுடன் உறவு பேணப்பட்டது.

**1965 – 1970 UNP - *டட்லி சேனநாயக (பிரதமர்)***

- ஒரே நேரத்தில் மேற்கத்தைய மற்றும் கொம்யூனிச

நாடுகளுடன் நல்லுறவு.

- அணிசேரா நாடுகளுடனும் உறவு பேணப்பட்டது.
- கொம்யூனிச நாட்டு உறவுகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெற்றன.
- அமெரிக்காவுடன் பல ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. (1966, 1969)

(1966 - கைத்தொழில், இறக்குமதி, விவசாய அபிவிருத்தி)

- சீனாவுடன் அரிசி - றப்பர் ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டது.

### 1970 – 1977 SLFP – *சீறிமாவோ பண்டாரநாயக (பிரதமர்)*

- பல மாற்றங்கள் நிறைந்த வெளிவிவகாரக் கொள்கை
- பல சோஷலிச நாடுகளுடனும் முன்னணி முதலாளித்துவ நாடுகளுடனும் தொடர்பு (முன்னாள் USSR, CHINA, முன்னாள் YUGOSLAVIA / USA , UK)
- 1972 - சிறீமா சீனாவுக்கு விஜயம்
- சீனா, இலங்கை அரசோடும் மக்கள் விடுதலை முன்னணியோடும் (JVP) சமகாலத்தில் உறவு
- 1973 - BMICH சீன அரசால் நன்கொடையாகக் கட்டப்பட்டது.
- 1974 - இந்தியாவுடன் (இந்திரா காந்தி) கச்சதீவு ஒப்பந்தம்
- 1976 - அணிசேரா இயக்க உச்சி மாநாடு இலங்கையில் நடத்தப்பட்டது.

இந்து சமுத்திர பிராந்தியம் அமைதி வலயமாக இருக்க வேண்டும் என்ற சிறீமாவின் கொள்கை பிரசித்தி பெற்றது.

### 1977 – 1988 UNP – J.R. *ஜயவர்தன (ஜனாதிபதி)*

- மேற்கு சார்பான - திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக வெளியுறவுத்துறை விரிவடைந்தது.

- புதிதாக வெளிவிவகார அமைச்சு உருவாக்கப்பட்டது.
- அணிசேரா இயக்க தலைமைப் பொறுப்பு இலங்கைக்கு கிடைத்தது.
- ஜப்பானுடனான விஷேட உறவால் பல்வேறு உதவிகள் கிடைத்தன. (1950)
- 1978 - சீன பிரதிப் பிரதமர் இலங்கை விஜயம்
- 1979 - சீனா நிதியுதவி (அரிசி - இறப்பர் ஒப்பந்தம் 6 ஆவது தடவையாக புதுப்பிப்பு)
- 1980 - தொழில்நுட்ப பொருளாதார ஒத்துழைப்புக்கு சீனா நிதியுதவி
- 1979 இல் ஜப்பானுக்கும் 1983 இல் அமெரிக்காவுக்கும் ஜனாதி பதி விஜயம்
- 1983 - ஜனாதிபதி J.R. ஜயவர்தன ஐக்கிய அமெரிக்கா விஜயம்
- 1983 - Voice of America ஒப்பந்தம் புதுப்பிப்பு, விரிவாக்கம் (தற்போது இடைநிறுத்தம்)
- 1984 - SL – US ஒப்பந்தம் (விஞ்ஞான, தொழில்நுட்ப அபிவி ருத்தி)
- 1984 - USA தூதரகத்தில் இஸ்ரேல் நலன் பேணும் பிரிவு திறக் கப்பட்டது.
- 1983 - இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான இந்தியத் தலையீடு ஆரம்பம்
- 1983 - ஜூலை கலவரம் இடம்பெற்றது. இந்திய வெளிவி வகார அமைச்சர் P.V. நரசிம்மராவ் மற்றும் விசேட தூதுவர் G. பார்த்தசாரதி இலங்கைக்கு விஜயம்
- 1985 - இந்திய மத்தியஸ்தத்தில் திம்பு பேச்சுவார்த்தை
- 1987 - இலங்கையின் இறைமையை இந்தியா மீறல்
- 1987 - இலங்கை - இந்திய உடன்படிக்கை

- **1989 – 1992 UNP – R. *பிரேமதாச (ஜனாதிபதி)***
- **1992 – 1993 UNP – D.B. *விஜேதுங்க (ஜனாதிபதி)***
- **1994 – 2005 PA - *சந்திரிகா குமாரதுங்க (ஜனாதிபதி)***

*1994 ஆம் ஆண்டு சிறீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதான மாகக் கொண்ட பொதுஜன ஐக்கிய முன்னணி (PA) ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக தலைமையில் மிகச்சிறப்பு வாய்ந்த வெளியுறவுக் கொள்கையைப் பின்பற்றியது. வெளிவிவகாரக் கொள்கையில் பாரிய மாற்றம், விரிவாக்கம். 'சமாதானம்' எனும் கோஷத்துடன் பிரபல்யமாக ஆட்சிக்கு வந்த சந்திரிகாவுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அதிக வரவேற்புக் கிடைத்தன. சர்வதேச விவகாரங்களில் புலமைமிக்க லக்ஷ்மன் கதிர்காமர் வெளிவிவகார அமைச்சராக இருந்து இலங்கை சர்வதேச மட்டத் திற்கு சிறந்து விளங்க காரணமாக இருந்தார்.*

*இக்காலத்தின் ஆரம்பத்தில் இலங்கை இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வு அடிப்படையிலான சமாதானத் தீர்வு குறித்த நகர்வுகள் பல மேற்கொள்ளப்பட்டன. எனினும் பிற்பட்ட காலத் தில் யுத்த ரீதியான போக்கு அதிகரித்து புலிகள் இயக்கத்தை சர்வதேச ரீதியாக தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளில் அரசாங் கத்தின் பங்களிப்பு அதிகமிருந்தது.*

- **2005 – 2015 UPFA - *மஹிந்த ராஜபக்ஷ (ஜனாதிபதி)***

*2005 ஆம் ஆண்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி (UPFA) ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் புதியதொரு வெளிவிவகாரக் கொள்கையைப் பின்பற்றியது. ஆரம்பத்தில் ஐக் கிய அமெரிக்காவுடன் நல்லுறவு பேணப்பட்டது. இந்தியா, சீனா, பாகிஸ்தான், ஈரான், றஷ்யா போன்ற நாடுகளின் உதவியுடன் 2009 ஆம் ஆண்டு 25 வருடகால உள்நாட்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.*

*இலங்கையில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டதாக அரசாங்கம் வெற்றிப் பெருமிதம் கொண்டது. எனினும் யுத்தத்தின் இறுதித்*

தருவாயில் இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் எழுந்த விவாதங்கள் மத்தியில் ஐ. நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் இதுகுறித்து குழுவொன்றை நியமித்தார். 2011 இல் வெளியிடப்பட்ட தருஷ்மன் அறிக்கை இலங்கை அரசாங்கத்தை சர்வதேச ரீதியான நெருக்கடிக்குள் தள்ளியிருந்தது.

அதனைத் தொடர்ந்து ஜெனீவாவில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவை இலங்கை தொடர்பாக விவாதிக்கவும் இலங்கைக்கு எதிராக பிரேரணைகளை நிறைவேற்றவும் தொடங்கியது. இதனால் சர்வதேச ரீதியாக இலங்கைக்கு எதிரான போக்குகள் அதிகரித்தன. இதன் காரணமாக சீனா மற்றும் ஆபிரிக்க உறவு பேணப்பட்டு ஐரோப்பிய உறவு மட்டுப்படுத்தப்பட்டது. சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்தன.

- ***2015 – தேசிய அரசாங்கம் – மைத்திரிபால சிறிசேன (ஜனாதிபதி)***

இலங்கை அரசியல் வரலாற்றில் பிரபல்யமிக்க ஆட்சி மாற்றம். இலங்கையில் சர்வாதிகாரப் போக்கு அதிகரித்துக் கொண்டு வந்த ஒரு காலப்பகுதியில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம். தேசிய, சர்வதேச எதிர்பார்ப்புகளின்படி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று ஜனநாயகம் மற்றும் நல்லாட்சி எனும் தொனிப் பொருளில் அரசாங்கம் நிறுவப்பட்டது. எனினும் ஆட்சியின் பிற்பட்ட காலங்களில் ஆட்சி தொடர்பில் சர்வதேச அபிப்பிராயம் அவ்வளவு திருப்திகரமானதாக இல்லை.

- ***2019– கோத்தாபய ராஜபக்ஷ (ஜனாதிபதி)***

# ஐ.நா. தொடர்பான அமைப்புகள்

| இல. | அமைப்பு | ஆரம்பம் |
|---|---|---|
| 3. | ஐக்கிய நாடுகள் சபை (United Nations) | 1945 October |
| 4. | சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) | 1919 April |
| 5. | உலக வங்கி (World Bank) | 1944 July |
| 6. | சர்வதேச நாணய நிதியம் (IMF) | 1945 December |
| 7. | உணவு, விவசாய அமைப்பு (FAO) | 1945 October |
| 8. | ஐ.நா. கல்வி, விஞ்ஞான, கலாசார அமைப்பு (UNESCO) | 1945 November |
| 9. | உலக சுகாதார அமைப்பு (WHO) | 1948 April |
| 10. | உலக வர்த்தக அமைப்பு (WTO) | 1995 January |
| 11. | ஐ.நா. சிறுவர் நிதியம் (UNICEF) | 1946 December |
| 12. | ஐ.நா. அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் (UNHCR) | 1951 July |
| 13. | ஐ.நா. அபிவிருத்திச் செயற்றிட்டம் (UNDP) | 1965 November |
| 14. | ஐ.நா. சனத்தொகை நிதியம் (UNFPA) | 1967 July |
| 15. | ஐ.நா. மனித உரிமைகள் பேரவை (UNHRC) | 2006 June |
| 16. | சர்வதேச அணுசக்தி முகவரகம் (IAEA) | 1957 July |
| 17. | சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICC) | 2002 July |
| 18. | சர்வதேச புலம்பெயர்வுக்கான அமைப்பு (IOM) | 1951 December |
| 19. | குழு-77 கூட்டமைப்பு (G–77) | 1964 June |

ஐக்கிய நாடுகள் சபையே உலகில் முதற்தர சர்வதேச அமைப்பாகும். அதன் விரைவான வளர்ச்சியினதும் விரிவான தேவையினதும் அடிப்படையில் உலகில் தனித்துவமான பல விடயங்களுக்குமாக சர்வதேச அமைப்புகள் பலவற்றை ஐ.நா. உருவாக்கியுள்ளது. இன்னும் சில அமைப்புகள் ஐ.நா. வுடன் சம்பந்தப்பட்டு இயங்கி வருகின்றன.

# 03



## ஐக்கிய நாடுகள் சபை

(United Nations)

**தோற்றம்**

- ***1941.06.12*** - *லண்டன்* (UK). *'நேச சக்திகளின் பிரகடனம்'* (Inter – Allied Declaration) *யுத்த காலத்திலும் சமாதான காலத்திலும் ஏனைய சுதந்திர நாடுகளுடன் ஒன்றிணைந்து செயற்படுதல். (14 நாடுகளின் பிரதிநிதிகள்)*

- ***1941.08.14*** - *'அத்திலாந்திக் சாசனம்'* (Atlantic Charter) *ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட், பிரித்தானிய பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில் ஆகியோர் சர்வதேச சமாதானம், பாதுகாப்பு குறித்த ஒரு முன்மொழிவை அத்திலாந்திக் கடலில் சந்தித்து வெளியிட்டனர்.*

- ***1942.01.01*** - *'ஐக்கிய நாடுகள் பிரகடனம்'* (Declaration by United Nations) ***26*** *நாடுகளின் பிரதிநிதிகளால் கைச்சாத்திடப்பட்டு வெளியிடப்பட்டது. 'ஐக்கிய நாடுகள்' எனும்*

பதத்தை முதன்முதலாக ரூஸ்வெல்ட் பயன்படுத்தினார்.

- **1943.10.30-** மொஸ்கோ. USSR, UK, USA, China ஆகிய நாடுகள் சர்வதேச சமாதானம், பாதுகாப்பு என்பவற்றை பேண ஒரு அமைப்பை அமைக்கக் கோரின.
- **1943.12.01** - USSR, UK, USA ஆகிய நாடுகள் இவ்விடயத்தை தொடர்ந்தன.
- **1944.09.21 - 1944.10.07** - வொஷிங்டன் DC. USSR, UK, USA, China ஆகிய நாடுகள் உலக ஸ்தாபனத்திற்கான நோக்கம், அமைப்பு, செயற்பாடுகள் பற்றி ஆராய்ந்தன.
- **1945.02.11** - யால்டா (USSR) – USSR, UK, USA ஆகிய நாடுகள் அமைப்பை உருவாக்கின.
- **1945.04.25 - 1945.06.26** – சன்பிரான்சிஸ்கோ (USA). **50** நாடுகளின் பிரதிநிதிகள் கூடி **111** சரத்துகள் கொண்ட சாசனத்தை வரைந்தனர்.
- **1945.06.26** - ஐ. நா. சாசனம் **51** நாடுகளால் கைச்சாத்திடப்பட்டது. (இறுதியாகக் கைச்சாத்திட்ட நாடு போலாந்து)
- **1945.10.24** - ஐ. நா. சாசனம் உத்தியோகபூர்வமாக அமுலுக்கு வந்தது.

**2** ஆம் உலக மகா யுத்தம் **1939 - 1945** நடைபெற்ற போது **50** மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் இறந்தனர். இலட்சக்கணக்கானோர் அகதிகளாகவும் அங்கவீனர்களாகவும் ஆகினர். கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான சொத்துகள் அழிந்தன. எனவேதான் மற்றொரு உலக மகா யுத்தமொன்று ஏற்படுவதைத் தவிர்த்து உலகில் சமாதானம், பாதுகாப்பு என்பவற்றை ஏற்படுத்த ஐ.நா. சபை உருவாக்கப்பட்டது. **51** நாடுகளுடன் உருவான இச்சபையில் இன்று **193** நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

### ஐ.நா. சபையின் பிரதான நோக்கங்கள்

1. உலகம் முழுவதும் அமைதியைப் பேணுதல்
2. நாடுகளுக்கிடையே நட்புறவை வளர்த்தல்
3. வறிய மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தவும் பட்டினி, நோய், கல்வியின்மை ஆகியவற்றை ஒழிக்கவும் உரிமைகள், சுதந்திரங்களுக்கு மதிப்பளிக்கப்படுவதை ஊக்குவிக்கவும் கூட்டாக முயற்சி செய்தல்
4. இக்குறிக்கோள்களை அடைந்து கொள்வதில் நாடுகளுக்கு உதவும் பொருட்டு ஒரு பொது அரங்கமாகச் செயற்படுதல்.

### ஐ.நா. சபையின் கட்டமைப்பு

1. பொதுச் சபை
2. பாதுகாப்புச் சபை
3. பொருளாதார சமூக சபை
4. சர்வதேச நீதிமன்றம்
5. நம்பிக்கை பொறுப்புச் சபை
6. செயலகம்

#### ▸ பொதுச் சபை (General Assembly)

- 193 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.
- செயலாளர் நாயகம் இச்சபையை இயக்குகின்றார். இவர் 5 வருட பதவிக்காலத்திற்கென பாதுகாப்புச் சபையால் தெரிவு செய்யப்படுகிறார். தற்போதைய செயலாளர் நாயகம் (2017.01.01 முதல்) அந்தனியோ கட்ரஸ் (Antonio Guterres) - போர்த்துக்கல்
- தீர்மானங்களின் போது ஒரு நாட்டிற்கு ஒரு வாக்கு வழங்கப் படும்.
- சர்வதேச நெருக்கடிகள் பற்றி கலந்துரையாடி பாதுகாப்புச் சபைக்கு சிபாரிசுகளை முன்வைத்தல்

- முக்கிய பிரச்சினைகள் குறித்த தீர்மானங்கள் 2/3 இல் நிறை வேற்றப்பட வேண்டும்.
- பாதுகாப்புச் சபையின் நிரந்தரமற்ற அங்கத்துவ நாடுகளைத் தெரிவு செய்தல்
- பொருளாதார சமூக சபையின் அங்கத்துவ நாடுகளைத் தெரிவு செய்தல்
- வரவு - செலவுத் திட்டம் தயாரித்தல்
- வருடாந்தம் செப்டெம்பர் - டிசம்பர் வரை மாநாடு நடை பெறும். பெரும்பாலும் அரச தலைவர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்வர்.
- ஒவ்வொரு அமர்வுக்கும் ஒரு நாட்டின் பிரதிநிதி தலைமை தாங்குவார். 1976 ஆம் ஆண்டு 31 ஆவது பொதுச்சபைக் கூட்டத் திற்கு இலங்கையைச் சேர்ந்த H.S. அமரசிங்க தலைமை தாங்கினார்.
- சர்வதேச மகாநாடுகளை கூட்டல்
- பொருளாதார, சமூக, கலாசார, கல்வி, சுகாதாரம் தொடர்பான பல்வேறு துறைகளில் தாபனங்களை உருவாக்குதல் (உ-ம்): UNESCO - ஐ. நா. கல்வி, விஞ்ஞான, கலாசார தாபனம், WHO - உலக சுகாதார தாபனம்

### பாதுகாப்புச் சபை (Security Council)

- இச்சபையில் 5 நிரந்தர நாடுகளும் 10 தற்காலிக நாடுகளுமாக மொத்தம் 15 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. (1945-11, 1965-15)
- UK, USA, China, France, Russia ஆகியன நிரந்தர அங்கத்துவ நாடுகளாகும்.
- 10 நாடுகள் 2 வருடத்திற்கென பொதுச்சபையால் தெரிவு செய்யப்படுகின்றன.

  ஒரு வருடத்தில் 5 நாடுகள் மாற்றம் பெறும்.
- முக்கிய தீர்மானங்களுக்கு 5 நிரந்தர நாடுகள் உள்ளிட்ட 9 நாடுகளின் சம்மதம் அவசியமாகும்.

- தீர்மானங்களின் போது ஒரு நாட்டிற்கு ஒரு வாக்கு
- 5 நிரந்தர நாடுகளில் ஒன்று Veto பாவித்தால் தீர்மானம் நிறைவேற்ற முடியாது.
- சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணல்.
- பிணக்குகளை சமாதானமாகத் தீர்த்து வைத்தல் அல்லது பலப்பிரயோகம் மேற்கொண்டு தீர்த்தல். (அமைதிக்கு அச்சுறுத்தல், ஆக்கிரமித்தல்)
- பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களை அங்கத்துவ நாடுகள் ஏற்க வேண்டும்.
- சபைக் கூட்டங்கள் அடிக்கடி எங்கும் நடத்தப்படலாம்.
- இந்தியா, பிரேசில், ஜப்பான், ஜேர்மனி ஆகிய நாடுகள் பாது காப்புச் சபையில் நிரந்தர அங்கத்துவம் கோருகின்றன.
- இச்சபை சம்பந்தமாக பல்வேறு விமர்சனங்கள் நிலவுகின்றன.

### பொருளாதார சமூக சபை (ECOSOC)

இச்சபையில் 54 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. (1945-18, 1965-27, 1973-54)

- 3 வருடத்திற்கு ஒரு தடவை 18 நாடுகளை பொதுச் சபை தெரிவு செய்கின்றது.
- சர்வதேச பொருளாதார, சமூக, கலாசார, கல்வி, சுகாதார விடயங்களில் ஆய்வுகளையும் அறிக்கைகளையும் தயாரித்தல்
- மனித உரிமைகளைப் பேண நடவடிக்கை எடுத்தல்
- மாநாடுகள், கூட்டங்கள், உடன்படிக்கை. (உ-ம்) WFP – உலக உணவுத் திட்டம்
- இச்சபையின் கீழ் பல ஆணைக்குழுக்கள் உள்ளன.

  பிராந்திய ஆணைக்குழுக்கள் (5) (உ-ம்) - ஆபிரிக்காவிற்கான பொருளாதார ஆணைக்குழு (ECA)
- இச்சபையால் பல முகவரகங்கள், சர்வதேச தாபனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. (உ-ம்) FAO, WHO, IMF, UNESCO

- இச்சபையால் பல நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள் ளன. (உ-ம்) UNICEF, UNDP, UNEP, UNFPA
- சர்வதேச ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் ஒப்பந்தங்களையும் தாபனங்களையும் உருவாக்கி வந்துள்ளது.

### **சர்வதேச நீதிமன்றம்** (International Court of Justice)

- ஹேக் நகரில் அமைந்துள்ளது.
- 15 நீதிபதிகள் பொதுச் சபையாலும், பாதுகாப்புச் சபையா லும் 9 வருட பதவிக் காலத்திற்கென தெரிவு செய்யப்படுகின் றனர்.
- பொதுச் சபைக்கும் பாதுகாப்புச் சபைக்கும் ஆலோசனை வழங்குதல்
- அங்கத்துவ நாடுகளின் வழக்குகளை விசாரணை செய்தல், பொதுச்சபையின் அனுமதியுடன் அங்கத்துவமில்லாத அரசுக ளின் முறைப்பாடுகளையும் விசாரிக்கலாம்.
- இதன் தீர்ப்புக்களை நடைமுறைப்படுத்தல் நாடுகளின் நல்லெண்ணத்தில் தங்கியுள்ளது.
- இலங்கையைச் சேர்ந்த கிரிஸ்தோபர் ஜீ. வீரமந்திரி (1991-2000) உப தலைவராக கடமையாற்றினார்.
- **நம்பிக்கைப் பொறுப்புச் சபை** (Trusteeship Council)
- இச்சபையில் UK, USA, China, France, Russia ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன.
- சுதந்திரம் கிடைக்காத பிரதேசங்களையும் அங்குள்ள மக்களை யும் நிருவகித்தல் இதன் பிரதான கடமையாகும்.
- இதன் பொறுப்பிலிருந்த இறுதி பசிபிக் நாடான Palau 1994 ஆம் ஆண்டு ஐ.நா. அங்கத்துவம் பெற்றதோடு இச்சபையின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

### **செயலகம்** (Secretariat)

- ஐ.நா. சபையின் தலைமையகம் ஐக்கிய அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அமைந்துள்ளது.

- ஆயிரக்கணக்கான நிபுணத்துவம் வாய்ந்த ஊழியர்கள் கடமை யாற்றுகின்றனர்.
- ஐ.நா. வின் செயற்பாடுகளை இச்செயலகம் ஒருங்கிணைக்கின் றது.
- ஜெனீவா, வியன்னா, நைரோபி ஆகிய நகரங்களில் உப அலு-வலகங்கள் உள்ளன.

### ஐ.நா. விசேட முகவரகங்கள்

- சர்வதேச தொழில் தாபனம் (ILO)
- உணவு, விவசாய தாபனம் (FAO)
- ஐ.நா. கல்வி, விஞ்ஞான, கலாசார தாபனம் (UNESCO)
- உலக சுகாதார தாபனம் (WHO)
- உலக வங்கி (World Bank)
- சர்வதேச நாணய நிதியம் (IMF)

### ஐ.நா. செயற்திட்டங்களும் நிதியங்களும்

- ஐ.நா. சனத்தொகை நிதியம் (UNFPA)
- ஐ.நா. அபிவிருத்திச் திட்டம் (UNDP)
- ஐ.நா. சிறுவர் நிதியம் (UNICEF)
- ஐ.நா. சுற்றாடல் திட்டம் (UNEP)
- உலக உணவுத் திட்டம் (WFP)

### ஐ.நா. வின் ஏனைய அங்கம்

- ஐ.நா. அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் (UNHCR)

### ஐக்கிய நாடுகள் சபையும் இலங்கையும்

ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை 1955 டிசெம்பர் 14 ஆம் திகதி அங்கத்துவம் பெற்றது. எனினும் 1945 இல் இலவசக் கல்விக்கும் 1951 இல் இலவச சுகாதாரத்திற்கும் ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு உதவியிருந்தது.

*1956* ஆம் ஆண்டு ஐ.நா. உச்சிமாநாட்டில் முதன்முறையாகக் கலந்து கொண்ட இலங்கை அரசாங்கத்தின் தலைவர் முதலாவது அறிக்கையை வெளியிட்டார். *1960* இல் பாதுகாப்புச் சபையில் இலங்கை அங்கத்துவம் பெற்று Sir Claude Corea சபையின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். *1961* இல் கொங்கோவில் ஐ.நா. அமைதிப்படையில் சிறியளவில் பங்களித்த இலங்கை *2003* முதல் ஹெயிட்டியில் பணியாற்றி வருகிறது.

*1967* இல் ஐ.நா. செயலாளர் நாயகம் U Thant இலங்கைக்கு விஜயம் செய்தார். பிரதமர் சிறீமா பண்டாரநாயகவின் வேண்டு கோளின்படி ஒரு அமைதி வலயமாக இந்து சமுத்திரம் தொடர்பான பிரகடனம் ஐ.நா. சபையால் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

*1976* ஆம் ஆண்டு இலங்கையைச் சேர்ந்த Hamilton Shirley Amerasinghe ஐ.நா. பொதுச்சபையின் தலைவராக நியமிக் கப்பட்டார். *1982* இல் உலக மரபுரிமை இடங்கள் முதன் முறையாக இலங்கையில் UNESCO அமைப்பால் பிரகடனம் செய்யப்பட்டது. *1987* இல் இலங்கையின் *10* இலட்சம் வீட்டுத் திட்டத்திற்கு ஐ.நா. உதவியது.

*1999* ஆம் ஆண்டு இலங்கை அரசின் வேண்டுகோளில் ஐ.நா. விசேட அனுசரிப்பு தினமாக வெசாக் பிரகடனம் செய்யப்பட்டது. ஐ.நா. செயலாளர் நாயகம் Kofi Annan *2005* இலும் செயலாளர் நாயகம் Ban Ki-moon 2009 இலும் இலங்கை வந்தனர்.

*2012* இல் யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையைக் கட்டி யெழுப்பும் திட்டங்களுக்கு ஐ.நா. உதவியது. *2014* இல் *15* ஆவது உலக இளைஞர் மாநாடு இலங்கையில் இடம்பெற்றது. ஐ.நா. சபையின் மில்லேனியம் அபிவிருத்தி இலக்குகளில் (MDGs) இலங்கை *2015* இல் முன்னேற்றத்தைக் காட்டியிருந்தது.

*1992* இல் கம்போடியாவில் தேர்தல் அவதானிப்பிலும் *1994* இல் மொசாம்பிக்கில் ஒழுங்கை நிலைநாட்டும் பணியிலும் ஐ.நா. சார்பில் இலங்கை பணியாற்றியுள்ளது.

## ஐ.நா. வின் முக்கிய செயற்றிட்டம்

| விடயம் | மிலேனிய அபிவிருத்தி இலக்குகள் (MDG) | பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் (SDG) |
|---|---|---|
| | Millennium Development Goals | Sustainable Development Goals |
| திட்டம் | 8 Goal, 18 Targets & 48 Indicators | 17 Goal, 169 Targets & 230 Indicators |
| காலம் | 2000 – 2015 (Agenda 2015) | 2015 – 2030 (Agenda 2030) |
| நாடுகள் | Developing Countries | All Countries (Global Goals) |

## WFP – Nobel Peace Prize 2020

*2020 சமாதானத்துக்கான நோபல் பரிசு (ஐ.நா.)* உலக உணவுத் திட்டத்திற்கு (WFP) வழங்கப்பட்டது. உலகம் முழுவதும் பசியுடன் வாழும் சுமார் *100* மில்லியன் மக்களுக்கு உணவு வழங்கும் பணியில் WFP ஈடுபட்டு வருகின்றது.

# 04

# சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO)

(International Labour Organization)

வேர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் ஒரு பகுதியாக 'சர்வதேச தொழிலாளர் தாபனம்' (ILO), சர்வதேச கழகத்தின் கீழ் 1919 இல் தாபிக்கப்பட்டது. தலைமையகம் சுவிட்சர்லாந்தின் ஜெனீவா வில் அமைந்துள்ளது. 1946 இல் ஐ.நா. வின் முதலாவது விசேட முகவரகமானது. தற்போது 187 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. (186 ஐ.நா. அங்கத்துவ நாடுகளும் Cook Islands உம்). 2019 இல் நூற்றாண்டை அடைந்தது.

பாரிஸ் சமாதான மாநாட்டின் போது the American Fede ration of Labour (AFL) தலைவரான Samuel Gompers தலை மையில் பெல்ஜியம், கியூபா, செகோஸ்லோவாகியா, பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், போலாந்து, பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய 9 நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட தொழில் ஆணைக்குழுவால் சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் யாப்பு வரையப்பட்டது.

*1960* இல் ILO *'சர்வதேச தொழில் கல்விக்கான நிறுவனத்தை'* (International Institute for Labour Studies) *ஜெனீவாவில் தா பித்தது. 1965 இல் சர்வதேச பயிற்சி நிலையம் இத்தாலியின்* Turin *இல் தாபிக்கப்பட்டது. 1969 இல் 50 ஆம் ஆண்டு பொன் விழாவின் போது* ILO *சமாதானத்துக்கான நோபல் பரிசைப் பெற்றது.*

*உலகம் முழுவதிலுமுள்ள தொழிலாளர்களுக்கு சமூக நீதியைப் பெற்றுக் கொடுத்தல் இதன் பிரதான குறிக்கோளாகும். அரசாங்கம், தொழில் கொள்வோர், தொழிலாளர் பிரதிநிதிகள் ஆகிய முத்தரப்பினரும் இணைந்து உயர் மட்டத் தீர்மானங்களை மேற்கொள்வர். 1948 இல் இலங்கை* ILO *இல் அங்கத்துவம் பெற்றது. 1984 இல் கொழும்பில் அலுவலகம் திறக்கப்பட்டது. மே 01 - உலக தொழிலாளர் தினமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.*

# 05

## உலக வங்கி

(World Bank)

'உலக வங்கி' (World Bank) 189 அங்கத்துவ நாடுகள் அல்லது பங்குதாரரர்களைக் கொண்டது. 130 இற்கும் மேற்பட்ட இடங்களிலுள்ள அலுவலகங்களில் 170 இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அலுவலர்கள் பணியாற்றுகின்றனர். உலகின் மிகப்பெரிய அபிவிருத்தி நிறுவனமாகும். வறுமை இல்லாத உலகுக்காகக் பணியாற்றல் அமைப்பின் தொனிப்பொருளாகும்.

1944 Bretton Woods மாநாட்டில் முதலில் 'சர்வதேச புனருத்தானத்துக்கும் அபிவிருத்திக்குமான வங்கி' (IBRD) (the International Bank for Reconstruction and Development) என்ற பெயரில் தோற்றுவிக்கப்பட்டு காலப்போக்கில் உலக வங்கி எனப் பெயர் பெற்றது. தலைமையகம் ஐக்கிய அமெரிக்க தலைநகர் வோஷிங்டன் D.C. இல் அமைந்துள்ளது.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் வறுமையைத் தணிக்கவும் செழிப்பை ஏற்படுத்தவும் ஒரு நிலையான தீர்வுக்காக பணியாற்றி வரும் தனித்துவமான உலகளாவிய பங்குதாரரே உலக வங்கியாகும். இது ஏனைய வங்கிகளைப் போன்றதன்று. அங்கத்துவ நாடுகளால் நிருவகிக்கப்படுகிறது. பொதுவாக வங்கியில் அதிக பங்குகளைக் கொண்டிருக்கின்ற நாடுகளின் ஆதிக்கம் கூடுதலாக உள்ளது.

உலக வங்கி என்பது பின்வரும் 5 அங்கங்களைக் கொண்ட ஒரு தொகுதியாகும்.

1. சர்வதேச புனருத்தானத்துக்கும் அபிவிருத்திக்குமான வங்கி (IBRD) – 1945
2. சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் (IFC)– 1956 (International Finance Corporation)
3. சர்வதேச அபிவிருத்திச் சங்கம் (IDA)– 1960 (International Development Association)
4. பல் தரப்பு முதலீட்டு உத்தரவாத முகவரகம் (MIGA)– 1988 (Multilateral Investment Guarantee Agency)
5. சர்வதேச முதலீட்டு பிணக்குகளை தீர்ப்பதற்கான நிலையம் (ICSID) – 1966 (International Centre for Settlement of Investment Disputes)

IBRD இல் 190 நாடுகளும் IDA இல் 173 நாடுகளும் அங்கம் வகிக்கின்றன. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதன் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த உதவுகிறது. இதற்காக கொள்கை ஆலோசனை, ஆராய்ச்சி, பகுப்பாய்வு, தொழில்நுட்ப உதவி போன்றவற்றை வழங்குகின்றது. கடனாக நிதி வழங்குதல், முதலீடுகளை ஒருங்கிணைத்தல், திறன் விருத்தி நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றது.

1950 இல் இலங்கை உலக வங்கியுடன் இணைந்தது. 1950.08.29

இல் IBRD இலும் ***1956.07.20*** இல் IFC இலும் ***1961.06.27*** இல் IDA இலும் ***1967.11.11*** இல் ICSID இலும் ***1988.05.27*** இல் MIGA இலும் இலங்கை சேர்ந்து கொண்டது. இலங்கையின் வரவு- செலவுத் திட்டத்துக்கு உலக வங்கியின் பங்களிப்பு மகத்தானது.

உலக வங்கியில் அதிக நிதியளித்திருக்கும் நாடுகளின் விருப்பு, வெறுப்புகளின் அடிப்படையில் பயன்பெறும் வளர்முக நாடுகளின் கொள்கையாக்கத்தின் மீது நிபந்தனைகளையும் கட்டுப்பாடுகளையும் விதித்து உலக வங்கியின் மூலம் நவகாலனித்துவத்தை வழிநடத்துவதாக விமர்சனம் தெரிவிக்கப்படுகிறது.

| **Our Mission** |
|---|
| **The World Bank Group has two goals,** |
| to end extreme poverty and promote shared prosperity in a sustainable way |

# 06

## சர்வதேச நாணய நிதியம் (IMF)

(International Monetary Fund)

*‘சர்வதேச நாணய நிதியம்’* (IMF) 1944 Bretton Woods *மாநாட்டில் தாபிக்கப்பட்டது. 1945 டிசம்பரிலிருந்து செயற்படத் தொடங்கியது. தலைமையகம் ஐக்கிய அமெரிக்க தலைநகர் வோஷிங்டன்* D.C. *இல் அமைந்துள்ளது. 189 அங்கத்துவ நாடுகளைக் கொண்டுள்ளது. 150 நாடுகளைச் சேர்ந்த சுமார் 2700 பேர் பணியாற்றி வருகின்றனர். அங்கத்துவ நாடுகளின் 24 நிறைவேற்றுப் பணிப்பாளர்களால் செயற்படுத்தப்படுகின்றது.*

IMF *சர்வதேச ரீதியாக நிதியியல் ஸ்திரத்தன்மையையும் நாணய ஒத்துழைப்பையும் ஊக்குவித்தல், சர்வதேச வர்த்தகத்தின் சமநிலை வளர்ச்சிக்கும் விரிவாக்கத்துக்கும் வசதியளித்தல், ஸ்திரத்தன்மையான பரிமாற்றத்தை ஊக்குவித்தல், கட்டணங்களின் ஒரு பல்தர முறைமைக்கு உதவுதல், கிடைக்கக்கூடிய வளங்களை உருவாக்குதல் என்பன* IMF *இன் அடிப்படை இலக்குகளாகும். மேலும் வேலைவாய்ப்பு, நிலையான பொருளாதார வளர்ச்சி*

என்பவற்றிற்கு ஊக்குவிப்பு வழங்கி வருவதுடன் உலகளாவிய ஏழ்மை நிலையினைக் குறைக்கவும் உதவுகிறது.

IMF அங்கத்துவ நாடுகளால் நிருவகிக்கப்படுவதுடன் அங் கத்துவ நாடுகளுக்கு பதிலளிக்கக் கடமைப்பட்டுள்ளது. அங்கத் துவ நாடுகளிலிருந்து கோட்டா முறையில் பணம் பெறுவதுடன் அந்நாடுகளின் பொருளாதார பலத்தில் இத்தொகை தீர்மானிக்கப் பட்டு அதற்கேற்ப வாக்குரிமையும் வழங்கப்படுகிறது.

IMF அங்கத்துவ நாடுகளில் சிறந்த பொருளாதார நிறுவனங் களைக் கட்டியெழுப்பவும் மானுட திறனை பலப்படுத்தவும் உதவுகிறது. இதற்காக கொள்கை ஆலோசனை, தொழில்நுட்ப உதவியும் பயிற்சியும், கடன் நிதியுதவி என்பவற்றை வழங்குகின் றது.

தற்போதைய நிலையில் IMF இடமிருந்து ஆர்ஜென்டீனா, உக்ரைன், கிரேக்கம், எகிப்து ஆகியன மிகப்பெரியளவில் கடன் வாங்கும் நாடுகளாகவும் மெக்சிகோ, கொலம்பியா, மொரோக்கோ என்பன மிகப்பெரிய முன்னெச்சரிக்கை கடன்கார நாடுகளாகவும் உள்ளன. **1950** ஒகஸ்ட் **29** இல் இலங்கை IMF இல் அங்கத்து வம் பெற்றது முதல் பெருமளவிலான உதவிகளை பெற்று வருகிறது.

The IMF was conceived in July 1944 at the United Nations Bretton Woods Conference in New Hampshire, United States.

# 07

## உணவு, விவசாய அமைப்பு (FAO)

(Food and Agricultural Organization)

*'உணவு, விவசாய அமைப்பு'* (FAO) *ஐ.நா. வின் ஒரு விசேட முகவரகமாகும். 1945 இல் தாபிக்கப்பட்ட இவ்வமைப்பின் தலை மையகம் இத்தாலியின் தலைநகர் ரோமில் அமைந்துள்ளது. 2020 மே 1 அன்று 194 அங்கத்துவ நாடுகளைக் கொண்டுள்ளது. 1991 முதல் ஐரோப்பிய ஒன்றியம் ஒரு அங்கத்துவ அமைப்பாகவும் 2007 முதல்* Faroe Islands *உம் 2011 முதல்* Tokelau *உம் இணை அங்கத்துவமாகவும் விளங்குகின்றன.*

*விவசாயம், காட்டியல், மீன்பிடி, கிராமிய அபிவிருத்தி என்பவற்றில் ஆக்கபூர்வமான பங்களிப்புச் செலுத்துதல், வறுமை, பஞ்சம், நோய் பெருகுதல்களுக்கு எதிராகப் பாடுபடல், போஷாக்கு, உணவு உற்பத்தியை மேம்படுத்தல், சர்வதேச மன் றங்களில் உணவு, விவசாயப் பிரச்சினைகள் பற்றி விவாதித்தலும் அரசாங் கங்களுக்கு ஆலோசனை வழங்குதலும், உணவு - விவசாய துறைகளில் ஆய்வுகளை மேற்கொள்ளல் என்பன இவ்வமைப்*

பின் முக்கிய செயற்பாடுகளாகும்.

2008 ஜூன் - உலக உணவு உச்சி மாநாடு ரோமில் நடை பெற்றது. ஒக்டோபர் - 16 உலக உணவு தினமாகும். 1948 இல் இலங்கை FAO இல் அங்கத்துவம் பெற்றது. 1979 இல் அதன் அலுவலகம் இலங்கையில் திறக்கப்பட்டது.

# 08

## ஐ.நா. கல்வி, விஞ்ஞான, கலாசார அமைப்பு (UNESCO)

(United Nations Educational, Scientific & Cultural Organization)

*'ஐ.நா. கல்வி, விஞ்ஞான, கலாசார அமைப்பு'* (UNESCO) 1945 *இல் தாபிக்கப்பட்டது. தலைமையகம் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் அமைந்துள்ளது. யுனெஸ்கோ தாபனம் கல்வி, விஞ்ஞானம், கலாசாரம் தொடர்பில் சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் மூலம் சமாதானத்தைக் கட்டியெழுப்ப முயற்சிக்கிறது.* ***193*** *அங்கத்துவ நாடுகளையும்* ***11*** *இணை அங்கத்துவத்தையும் கொண்டுள்ளது.*

*நீதி, சட்ட ஆட்சி, மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரம் ஆகியவற்றை சகலரும் மதிக்கும்படி செய்தல் மற்றும் கல்வி, விஞ்ஞானம், கலாசாரம் ஆகியவற்றின் மூலம் நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பினை வளர்த்து உலக அமைதி, பாதுகாப்புக்கு உதவுதல் என்பன இதன் முக்கிய நோக்கங்களாகும்.*

*சகல அங்கத்துவ நாடுகளும் 'யுனெஸ்கோவுக்கான தேசிய*

*ஆணைக்குழுவை'* (National Commission for UNESCO) *தாபித்துள்ளன. இதன்மூலம் அரச - அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து செயற்படக் கூடியதாக இருக்கும். 1949 நவம்பர் 14 இல் இலங்கை யுனெஸ்கோவில் அங்கத்துவம் பெற்றது. 1987 முதல் நீதி அமைச்சின் கீழும் 1988 இன் பின்னர் கல்வி அமைச்சின் கீழும் 'யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழு' இலங்கையில் இயங்கி வருகின்றது.*

# 09

## உலக சுகாதார தாபனம் (WHO)

(World Health Organization)

*'உலக சுகாதார தாபனம்'* (WHO) *1948 இல் தாபிக்கப்பட்டது. தலைமையகம் சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் அமைந்துள்ளது. தற்போது 194 அங்கத்துவ நாடுகளைக் கொண்டுள்ளது. 1946 ஜூன் 19 முதல் ஜூலை 22 வரை நியூயோர்க்கில் நடைபெற்ற சர்வதேச சுகாதார மாநாட்டு முடிவில் கைச்சாத்திடப்பட்ட* WHO *யாப்பு 1948 ஏப்ரல் 7 இல் நடைமுறைக்கு வந்தது. இத்தினம் (ஏப்ரல் 7) உலக சுகாதார தினமாக ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடப்படுகிறது.*

*150 இற்கும் மேற்பட்ட நாடுகளிலுள்ள 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் 150 நாடுகளிலுள்ள* WHO *அலுவலகங்களிலும் 6 பிராந்திய அலுவலகங்களிலும் மலேசியாவிலுள்ள 'உலகளாவிய சேவை நிலையத்திலும்' ஜெனீவா தலைமையகத்திலும் கடமையாற்றுகின்றனர். இதற்கு மேலதிகமாக வைத்தியர்கள், பொது சுகாதார வல்லுநர்கள், விஞ்ஞானிகள், தொற்று நோயியல்*

நிபுணர்கள் பணிபுரிகின்றனர்.

சர்வதேச ரீதியாக HIV/ AIDS, மலேரியா மற்றும் கொடிய நோய்களுக்கு எதிராகப் பாடுபடல் மற்றும் சுகாதாரத்துறையில் உலகளாவிய ரீதியில் வழிகாட்டுதல் என்பன WHO வின் முக்கிய நோக்கங்களாகும். 2020 இல் கொரோனா (கொவிட் 19) குறித்த உலகளாவிய நோய்த் தொற்றுப் பரவலில் WHO வின் பணி மகத்தானதும் சவால்மிக்கதுமானது. 1948 இல் இலங்கை WHO வில் இணைந்தது. 1952 இல் அதன் அலுவலகம் இலங்கையில் திறக்கப்பட்டது.

# 10

## உலக வர்த்தக அமைப்பு (WTO)

(World Trade Organization)

'உலக வர்த்தக அமைப்பு' (WTO) 1995 ஜனவரி 1 இல் தாபிக்கப்பட்டது. தலைமையகம் சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் அமைந்துள்ளது. உலக வர்த்தக விவகாரங்களின் சட்ட ரீதியான முறைமையை வழிநடத்தும் இவ்வமைப்பு உலக வர்த்தகத்தின் 98 வீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 164 அங்கத்துவ நாடுகளைக் கொண்டுள்ளது. இதில் 117 வளர்முக நாடுகளாகும்.

WTO அங்கத்துவ நாடுகளாலேயே இயக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. 2 ஆண்டுகளுக்கு ஒரு தடவை அமைச்சர்களும் வழமையாக ஜெனீவாவில் அரச பிரதிநிதிகளும் சந்தித்து முடிவுகளை மேற்கொள்வர். அமைச்சர்கள் மாநாடே (Ministerial Conference) அதியுயர் நிறுவனமாகும்.

வர்த்தக உடன்படிக்கைகளை நிருவகித்தல், வர்த்தக பேச்சுவார்த்தைகளுக்கான மன்றமாக செயற்படல், வர்த்தகப் பிணக்கு

களைக் கையாளுதல், தேசிய வர்த்தகக் கொள்கைகளை மேற்பார் வையிடல், வளர்முக நாடுகளுக்கு தொழில்நுட்ப உதவி, பயிற்சி வழங்குதல், ஏனைய சர்வதேச அமைப்புகளுடன் ஒத்துழைத்தல் போன்ற செயற்பாடுகளைக் கொண்டுள்ளது.

வர்த்தகத் தடைகளையும் சுங்க வரிகளையும் தளர்த்துவதன் மூலம் பொருட்கள், சேவைகளில் திறந்த சந்தை வாய்ப்புகளை உருவாக்குதலுடன் வர்த்தகப் பிணக்குகளைத் தீர்த்து வைப்ப திலும் WTO கவனம் செலுத்துகின்றது. வர்த்தக வாய்ப்புகளை விரிவுபடுத்துவதன் மூலம் பல தெரிவுகளையும் குறைந்த விலை யையும் ஏற்படுத்த முனையும் WTO சூழலைப் பாதுகாக்கும் வகை யில் பொது சுகாதாரம், விலங்கு மற்றும் தாவர ஆரோக்கியத்தை யும் கவனத்திற் கொள்கின்றது.

சர்வதேச வர்த்தகத்தை இலகுவாக மேற்கொள்ள 23 நாடு களால் 'சுங்க வரி, வர்த்தகம் தொடர்பான பொது உடன்படிக்கை' (The General Agreement on Tariff and Trade – GATT) 1947 ஒக்டோபர் 30 இல் செய்து கொள்ளப்பட்டு 1948 ஜனவர் 1 இல் நடைமுறைக்கு வந்தது. 1994 ஆம் ஆண்டளவில் 128 நாடுகள் இதில் கைச்சாத்திட்டிருந்தன.

GATT அமைப்பின் மூலம் 1986 – 1994 காலப்பகுதியில் மேற் கொள்ளப்பட்ட 'உருகுவே சுற்று' (Uruguay Round) பேச்சுவார்த் தைகளின் பெறுபேறாகவே 1995 ஜனவரி 1 இல் GATT அமைப்பு WTO எனும் சர்வதேச அமைப்பாக மாற்றம் பெற்றது. WTO தற்போது 'டோஹா அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின்' (Doha Development Agenda) கீழான புதிய பேச்சுவார்த்தைகளை 2001 நவம்பரிலிருந்து நடத்தி வருகின்றது.

# 11

## ஐ.நா. சிறுவர் நிதியம் (UNICEF)

(United Nations Children Fund)

*'ஐ.நா. சிறுவர் நிதியம்'* (UNICEF) ***1946*** *இல் அமைக்கப் பட்டது. தலைமையகம் ஐக்கிய அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அமைந்துள்ளது.* UNICEF *உலகில்* ***190*** *இற்கும் மேற்பட்ட நாடுகளில் சிறுவர்களது உயிர்ப்பிழைப்பு, உரிமைகளின் பாது காப்பு, உள்ளார்ந்த ஆளுமை விருத்தி போன்றவற்றில் செயற்பட்டு வருகின்றது.*

*சிறுவர்களின் பாதுகாப்பான வாழ்க்கை, சுகாதாரம், கல்வி, உணவு, அவசரகால நடவடிக்கை, பால்நிலை சமத்துவம் (பெண் பிள்ளையின் உரிமை), புத்தாக்கம், ஆபத்து உதவி, சிறுவர் குறித்த ஆய்வு போன்ற முக்கிய பணிகளில் 'யுனிசெப்' செயற்பட்டு வருகின்றது.*

***2*** *ஆம் உலக மகா யுத்தத்தில் பாதிக்கப்பட்ட ஐரோப்பா மற்றும் சீனா ஆகிய நாடுகளிலுள்ள சிறுவர்களின் அவசரகாலத்*

*தேவைகளை நிறைவேற்ற உருவாக்கப்பட்ட இந்நிதியம், தற்போது உலகளாவிய ரீதியில் சிறுவர் நலனுக்காக பாடுபடுகின்றது.*

***1989** சிறுவர் உரிமை சாசனம் பொதுச் சபையில் நிறைவேற்றப்பட்டது. **1991** இல் இச்சாசனத்தை இலங்கை அங்கீகரித்தது. **1965** இல் யுனிசெப் சமாதானத்துக்கான நோபல் பரிசைப் பெற்றது. **1990** இல் நியூயோர்க் நகரில் சர்வதேச சிறுவர் உச்சிமாநாடு நடைபெற்றது. **1979** சர்வதேச சிறுவர் ஆண்டாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. **1973** இல் இலங்கையில் யுனிசெப் அலுவலகம் திறக்கப்பட்டது.*

# 12

## ஐ.நா. அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் (UNHCR)

(United Nations High Commissioner for Refugees)

*‘ஐ.நா. அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர்’* (UNHCR) ***1951*** *இல் தாபிக்கப்பட்டது. தலைமையகம் சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் அமைந்துள்ளது. அகதி அந்தஸ்து பற்றிய* ***1951*** *ஜூலை* ***28*** *மாநாட்டைத் தொடர்ந்து ஐரோப்பிய அகதிகள் குறித்து செயற்படவே ‘ஐ.நா. அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர்’* (UNHCR) *உருவாக்கப்பட்டது. எனினும்* ***1967*** *இன் பின்னரே உலகளாவிய அகதிகளுக்காக செயற்படத் தொடங்கியது.*

*அரசற்றவர்களின் பயணம் தொடர்பான* 1922 Nansen Passport *விடயம் மற்றும்* ***1938*** Evian Conference *இல் உருவாக்கப்பட்ட ‘அகதிகளுக்கான அரசாங்கங்களுக்கிடையிலான குழு’* (CIR) *என்பன* UNHCR *உருவாக்கத்தின் ஒரு வரலாற்றுப் பின்னணியாகும். குறிப்பாக* ***1930*** *களில் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வு பல்வேறு சவால்களை ஏற்படுத்தியது.* ***1936 - 1939*** *கால ஸ்பானிய சிவில் யுத்தம் காரணமாக பிரான்ஸிய அகதி முகாம்களில் தஞ்சமடைந்த*

ஸ்பானிய அகதிகள் போன்ற விடயங்கள் அகதிகள் குறித்து சிந்திக்கத் தூண்டின. இதன் ஒரு முக்கிய கட்டமாகவே UNHCR தாபிக்கப்பட்டது.

உலகம் முழுவதும் தற்போது சுமார் 79.5 மில்லியன் மக்கள் தமது வீடுகளிலிருந்து வெளியேறி புகலிடம் தேடுகின்றனர். இவ்வகதிகள் விடயமாக UNHCR, 135 நாடுகளில் பணியாற்றி வருகின்றது. 2020 மே 31 அன்று 17,324 பேர் பணியில் உள்ளனர். இவர்களில் சுமார் 90 வீதமானோர் களத்தில் பணிபுரிகின்றனர். சர்வதேச ரீதியாக அகதிகளான பல மில்லியன் மக்கள் இன்னும் இதன் கண்காணிப்பில் உள்ளனர்.

அகதிகளுக்கு சர்வதேச பாதுகாப்பினை வழங்குதல், அவர்களின் பிரச்சினையில் நிலையான தீர்வினை ஏற்படுத்துதல் (அகதிகளை சொந்த இடத்தில் மீள்குடியமர்த்தல் அல்லது தஞ்சம் கோரும் நாடுகளில் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளல் அல்லது 3 ஆவது நாடொன்றில் குடியமர்த்தல், பொருளுதவி செய்தல்) என்பன UNHCR இன் முக்கிய நடவடிக்கையாகும்.

UNHCR செயற்பாட்டுக்கான 86 வீத நிதியானது அரசாங்கங்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றிலிருந்து கிடைக்கிறது. 1954, 1981 ஆண்டுகளில் சமாதானத்துக்கான நோபல் பரிசைப் பெற்றது.

# 13

# ஐ.நா. அபிவிருத்திச் செயற்றிட்டம் (UNDP)

(United Nations Development Program)

‘ஐ.நா. அபிவிருத்தி செயற்றிட்டம்’ (UNDP) 1965 இல் உருவாக்கப்பட்டது. தலைமையகம் நியூயோர்க் நகரில் அமைந்துள்ளது. உலகின் சுமார் 170 நாடுகளில் வறுமையைத் தணிக்கவும் சமத்துவமின்மை, ஓரங்கட்டலைக் குறைக்கவும் உதவி வருகின்றது. கொள்கைகள், தலைமைத்துவத் திறன்கள், பங்களிப்பு இயலுமைகள், நிறுவனத் திறமைகளை வளர்ச்சியடையச் செய்யவும் அபிவிருத்தியின் விளைவுகள் நிலைத்திருப்பதற்காக விரிவான முறையைக் கட்டியெழுப்பவும் நாடுகளுக்கு உதவுகின்றது.

நிலையான மானிட அபிவிருத்திக்கு உதவுதல், சமூக, பொருளாதார அபிவிருத்தி முயற்சிகளை விரைவுபடுத்த ஆதரவளித்தல் என்பன UNDP இன் முக்கிய நோக்கங்களாகும். உலகில் மிகவும் வறியவர்களில் 90% வசிக்கும் சுமார் 66 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு இத்திட்டத்தின் 90% வளம் சென்றடைகின்றது. பல்வேறு அன்பளிப்புகளால் இத்திட்டத்திற்கு நிதி கிடைக்கின்றது. ஐ. நா.

தொண்டர் அமைப்பு, ஐ.நா. பெண்களுக்கான அபிவிருத்தி நிதியம், ஐ.நா. மூலதன அபிவிருத்தி நிதியம் என்பன இத்திட்டத்தின் கீழ் இயங்குகின்றன.

**2015** இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட உலகத் தலைவர்களால் பேண்தகு அபிவிருத்திக்கான **2030** நிகழ்ச்சி நிரலின்படி (2030 Agenda) வறுமையை ஒழித்தல், பூமியைப் பாதுகாத்தல், சமாதானத்தையும் சுபீட்சத்தையும் அனுபவிப்பதை உறுதிப்படுத்தல் என்பன மிகப்பெரிய வாய்ப்பாக UNDP கருதி செயற்படுகிறது.

அபிவிருத்தி, அனர்த்த அபாயத் தணிப்பு, காலநிலை மாற்றம் என்பவற்றில் புதிய சட்டகத்தைப் பயன்படுத்தி செற்பட்டு வருகின்றது. SDG இல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டலின்படி **2030** வரையான அபிவிருத்தி முன்னுரிமைகளை அடையும் நாடுகளின் முயற்சிக்கு UNDP உதவுகிறது.

UNDP இன் **2018 - 2021** கால மூலோபாய திட்டத்தின்படி பல்வகைப்பட்ட பின்வரும் **3** பாரிய அபிவிருத்தி நோக்கங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

1. சகல பரிமாணங்களிலுமான வறுமையை ஒழித்தல்
2. கட்டமைப்பு ரீதியான மாற்றங்களை முடுக்கி விடுதல்
3. அதிர்ச்சி, நெருக்கடிகளிலிருந்து மீள் அமைதியைக் கட்டியெழுப்பல்

# 14

## ஐ.நா. சனத்தொகை நிதியம் (UNFPA)

(United Nations Population Fund)

*சனத்தொகை நடவடிக்கைகளுக்கான ஒரு நம்பிக்கை நிதியமாக* (a trust fund for population activities) ***1967*** *ஜூலையில் ஆரம்பிக்கப்பட்ட* UNFPA 1969 *இலிருந்து 'ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின்'* (UNDP) *கீழ் இயங்கி வந்தது. 'ஐ.நா. சனத்தொகை நடவடிக்கைகளுக்கான நிதியம்'* (UN Fund for Population Activities) *என தாபிக்கப்பட்ட போதிலும்* ***1987*** *முதல் 'ஐ.நா. சனத்தொகை நிதியம்'* (UN Population Fund) *எனப் பெயர் மாற்றம் பெற்றுள்ளது. எனினும்* UNFPA *என்றே அழைக்கப்படுகின்றது.* ***1972*** *இலிருந்து தனியான ஆளுநர் சபையினால் நிருவகிக்கப் படுகிறது. தலைமையகம் நியூயோர்க் நகரில் அமைந்துள்ளது.*

UNFPA *பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார சேவைக்கான முகவராகும். விரும்பக்கூடிய கர்ப்பம், பாதுகாப்பான குழந்தை பிறப்பு, முழு வளர்ச்சியான இளைஞர்கள் கொண்ட சமுதாயத்தை உலகுக்கு வழங்குவதே இதன் முக்கிய பணியாகும்.*

**UNFPA பின்வரும் விடயங்களுக்கு உதவுகிறது.**

1. பெண்களுக்கும் இளைஞர்களுக்கும் இனப்பெருக்க சுகாதார பராமரிப்பு
2. கர்ப்பமான பெண்களின் ஆரோக்கியம்
3. பெண்களுக்கு பயனளிக்கும் நம்பகரமான நவீன கருத்தடை முறை
4. சகல குழந்தைப் பிறப்புக்களும் பயிற்சி பெற்றவர்களால் மேற்கொள்ளப்படுவதற்கு உதவுதல்
5. பால்நிலை ரீதியான வன்முறையைத் தடுத்தல்
6. பெண்களின் பிறப்புறுப்பு சிதைத்தலை ஒழித்தல்
7. மிக இள வயது கர்ப்பந் தரித்தலையும் அதன்மூலம் இளம் பெண்பிள்ளைகள் மரணமடைதலையும் தடுத்தல்
8. சிறுவர் திருமணத்தை முடிவுக்குக் கொண்டுவர முயற்சித்தல்
9. பிணக்கு மற்றும் இயற்கை அனர்த்தத்தின் போது பாதுகாப்பான பிள்ளைப்பேற்றுக்கு உதவி செய்தல்
10. இத்துறை சார்ந்த அபிவிருத்திக்கு திட்டமிட கணக்கெடுப்பு, தரவு சேகரிப்பு, பகுப்பாய்வு மேற்கொள்ளல்

# 15

## ஐ.நா. மனித உரிமைகள் பேரவை (UNHRC)

(UN Human Rights Council)

*'ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை'* (UN Human Rights Council) ***2006*** *மார்ச்* ***15*** *ஆம் திகதி ஐ.நா. பொதுச்சபையால் தாபிக்கப்பட்ட அரசுகளுக்கிடையிலான சர்வதேச அமைப்பாகும். பேரவையில்* ***47*** *ஐ. நா. அங்கத்துவ அரசுகள் உறுப்புரிமை பெறுகின்றன.* ***2006*** *ஜூன்* ***16*** *இல் செயற்படத் தொடங்கியது.*

*பிராந்திய அடிப்படையில் ஆபிரிக்கா -* ***13,*** *ஆசியா, பசிபிக் -* ***13,*** *கிழக்கு ஐரோப்பா -* ***6,*** *லத்தீன் அமெரிக்கா, கரீபியன் -* ***8,*** *மேற்கு ஐரோப்பா, ஏனைய பிராந்தியங்கள்-* ***7*** *என்ற அடிப்படையில் அங்கத்துவம் வகிக்கின்றன. பதவிக்காலம்* ***3*** *வருடங்கள். பொதுச்சபையால் தெரிவு செய்யப்படும் இவ்வுறுப்புரிமை* ***2/3*** *பெரும்பான்மையில் அகற்றப்படலாம்.*

***1946*** *இல் உருவாக்கப்பட்டு* ***53*** *உறுப்புரிமைகளைக் கொண்டு* ***60*** *ஆண்டுகளாக செயற்பட்டு வந்த ஐ.நா. மனித உரிமைகள்*

ஆணைக்குழுவுக்கு (UN Commission on Human Rights) மாற்றீடாக அமைக்கப்பட்ட இப்பேரவை பொதுச்சபையின் ஒரு துணை நிறுவனமாகும். தலைமையகம் ஜெனீவாவில் அமைந்துள்ளது.

மனித உரிமைகள் பேரவை அரசுகளில் உரிமைகள் மீறப்படுவதில் கவனம் செலுத்தி பரிகாரம் காணுதல் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாத்து விருத்தி செய்தல் ஆகிய பிரதான நோக்கங்களைக் கொண்டுள்ளது. குறிப்பாக ஒடுக்குமுறை, இன, தேசிய, மத, மொழி, சிறுபான்மை இனங்கள் என்பவற்றின் சட்டபூர்வ பாதுகாப்புப் பற்றி ஆராய்ந்து சிபாரிசுகளை மேற்கொள்ளும்.

பேரவையின் வழமையான அமர்வுகள் ஒவ்வொரு வருடமும் மார்ச் (4 வாரங்கள்), ஜூன் (3 வாரங்கள்), செப்டெம்பர் (3 வாரங்கள்) ஆகிய 3 தடவைகள் இடம்பெறும். பேரவையின் 43 ஆவது அமர்வு 2020 பெப்ரவரி 24 முதல் மார்ச் 23 வரை இடம்பெற்றது. பேரவையின் முதலாவது அமர்வு 2006 ஜூன் 18 - 30 வரை நடைபெற்றது.

பேரவைக்கு உயர் ஸ்தானிகர் தலைமை தாங்குகிறார். ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் (High Commissioner for Human Rights) எனும் பதவிநிலை 1993 இல் ஒஸ்ட்ரியாவில் இடம்பெற்ற 2 ஆவது மனித உரிமைகள் மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி தாபிக்கப்பட்டதாகும். 1994 ஏப்ரல் 5 இல் முதலாவது ஆணையாளர் நியமிக்கப்பட்டார். பதவிக் காலம் 4 ஆண்டுகள். உயர் ஸ்தானிகரும் ஐ.நா. செயலாளர் நாயகமும் விரும்பினால் 2 ஆண்டுகள் அல்லது 4 ஆண்டுகள் நீடிக்கப்படலாம். தற்போதைய ஆணையாளர் 2018.09.01 முதல் சிலி நாட்டைச் சேர்ந்த Michelle Bachelet ஆவார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 22 ஆவது கூட்டத் தொடர் 2013 மார்ச் மாதம் இடம்பெற்ற போது இலங்கைக்கு எதிரான முக்கிய பிரேரணையொன்று நிறைவேற்றப்பட்டது. இலங்கையில் நல்லிணக்கத்தையும் பொறுப்புக்கூறலையும் ஊக்குவித்தல் எனும் தலைப்பில் அமெரிக்காவினால் இப்பிரேரணை

கொண்டு வரப்பட்டது. ஆதரவாக 25 நாடுகளும் எதிராக 13 நாடுகளும் வாக்களித்ததோடு 8 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. பின்னர் 2014 மார்ச் மாத அமர்விலும் இத்த கைய பிரேரணை நிறைவேற்றப்பட்டு 2014 ஜூலை முதலாம் திகதி இலங்கை தொடர்பான விசாரணைக்குழு நிறுவப்பட்டது.

| December 10 – Human Rights Day |
|---|

| உலகளாவிய ரீதியில் மனித உரிமைகளை மேம்படுத்திப் பாதுகாத்தல் |
|---|
| Promotion and protection of Human Rights around the globe |

**நிலைமாறுகால நீதி (TJ) (Transitional Justice)**

பாரிய யுத்தம் போன்ற நெருக்கடி நிலையிலிருந்து மீண்டு சமாதானம், ஜனநாயகம் நோக்கிய நகர்வுக்கு நிலைமாறுகால நீதி யின் (TJ) அவசியம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையினால் 2009 இல் வலியுறுத்தப்பட்டது. அதில் பின்வரும் 4 அம்சங்கள் உள்ளன.

1. உண்மையைக் கண்டறிதல் (Truth Seeking)
2. குற்ற வழக்குத் தொடர்தல் (Criminal Prosecution)
3. இழப்பீடு (Reparation)
4. நிறுவன சீர்திருத்தம் (Institutional Reform)

# 16

## சர்வதேச அணுசக்தி முகவரகம் (IAEA)

(International Atomic Energy Agency)

*‘சர்வதேச அணுசக்தி முகவரகம்’* (IAEA) ***1957*** *ஜூலை* ***29*** *ஆம் திகதி நடைமுறைக்கு வந்தது. ஐக்கிய நாடுகள் முறைமையின் கீழுள்ள இம்முகவரகம் அரசாங்கங்களுக்கிடையிலான ஒரு சுதந்திர அமைப்பாகும்.* ***18*** *நாடுகளைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ்வமைப்பில் தற்போது* ***171*** *நாடுகள் அங்கம் வகிக்கின்றன. தலைமைச் செயலகம் ஒஸ்ட்ரியாவின் தலைநகர் வியன்னாவில் அமைந்துள்ளது. மேலும் டொரொன்டோ (கனடா) மற்றும் டோக்கியோ (ஜப்பான்) ஆகிய நகரங்களில் பிராந்திய அலுவலகங்கள் உள்ளன.*

*ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி* Eisenhower 1953 *டிசெம்பர் 8 இல் ஐ.நா. பொதுச்சபையில் ஆற்றிய உரையில் தெரிவித்த ‘அமைதிக்கான அணு’* (Atoms for Peace) *என்பதே இவ்வமைப்பு உருவாக்கத்தின் அடிப்படையாகும். அமைப்பு தொடர்பான சட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதி கையொப்பமிட்ட தினமே*

*(1957.07.29)* ஏஜென்ஸி நடைமுறைக்கு வந்த திகதியாகும்.

உலக அமைதி, சுகாதாரம் மற்றும் வளங்களைப் பேணுவதற்கு அணுசக்தியின் மூலம் வழங்கக்கூடிய பங்களிப்பினை விரிவுபடுத்துவதையும் மேம்படுத்துவதையும் இராணுவ நோக்கங்களுக்காக அணுவாயுதம் பாவிப்பதை மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்தல், தடை செய்தல் ஆகியவற்றையும் இவ்வமைப்பு அடிப்படை நோக்கங்களாகக் கொண்டு செயற்படுகிறது.

# 17

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICC)

(International Criminal Court)

‘சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்’ (ICC) 2002 ஜூலை 1 இல் இத்தாலியில் உருவாக்கப்பட்டது. இது சர்வதேச ஒப்பந்தமான ரோம் நியதிச் சட்டத்தால் (Rome Statute) செயற்படுத்தப்படுகின்றது. நெதர்லாந்தின் ஹேக் நகரில் அமைந்துள்ள இது உலகின் முதலாவது நிரந்தர சர்வதேச குற்றவியல் நீதிமன்றமாகும். 122 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

இத்தகைய நீதிமன்றத்தை அமைப்பது குறித்த விடயம் ஐ.நா. நிகழ்ச்சி நிரலில் நீண்ட காலம் இடம்பெற்றிருந்த போதிலும் கம்போடியா, முன்னாள் யூகோஸ்லேவியா, ருவாண்டா ஆகிய நாடுகளில் இடம்பெற்ற படுகொலைகள் இந்நீதிமன்றம் அவசரமாக உருவாகக் காரணமாயின. சர்வதேச ரீதியாக நடைமுறையிலுள்ள மனித உரிமைகள் தொடர்பான ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தும் உயர் பணியினை இந்நீதிமன்றம் மேற்கொள்கின்றது.

ஐ.நா. பொதுச்சபையின் ஏற்பாட்டில் 1998 இல் ரோமில் இடம்பெற்ற மாநாட்டில் 120 நாடுகளால் இந்நீதிமன்றம் அங்கீ கரிக்கப்பட்டது. எனினும் ஐ.நா. சபையின் ஓர் அங்கமாக செயற்படவில்லை. அங்கத்துவ நாடுகளுக்கு பதிலளிக்கும் கடப் பாட்டை இந்நீதிமன்றம் கொண்டுள்ளது. எனினும் இந்நீதிமன் றத்தின் நடவடிக்கையொன்றை நிறுத்த பாதுகாப்புச் சபைக்கு அதிகாரமுண்டு.

மனித குலத்துக்கு எதிராக இழைக்கப்பட்ட இனச்சுத்திகரிப்புக் குற்றங்கள் (Crimes of Genocide), மனிதத்துவத்துக்கு எதிரான குற்றங்கள் (Crimes Against Humanity), யுத்தக் குற்றங்கள் (War Crimes), வலுச்சண்டைக்குப் போதல் (Aggression) போன்றவற் றிற்கு சட்ட நடவடிக்கை மேற்கொண்டு நபர்களைத் தண்டிக்கும் நோக்கில் இந்நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இழப்பீடு மற்றும் நிறுவன ரீதியான சீர்திருத்தங்களையும் மேற் கொள்ளும் அதிகாரம் இந்நீதிமன்றத்துக்கு உண்டு.

ஐ.நா. வின் அங்கமாக உள்ள சர்வதேச நீதிமன்றம் (ICJ) நாடு களை விசாரணை செய்யும் அதிகாரமே கொண்டுள்ளது. ஆனால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICC) நபர்களை விசாரணை செய்யும் வகையில் வேறுபடுகின்றது. எனினும் தேசிய சட்டங் களை மீறி நடவடிக்கை மேற்கொள்ளப்பட மாட்டா. 18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களையோ கடந்த கால குற்றங்களையோ இந் நீதிமன்றம் விசாரிக்க மாட்டா.

இந்நீதிமன்றம் 18 நீதிபதிகளைக் கொண்டது. புதுப்பிக்க முடியாத 9 வருடப் பதவிக்காலம். இந்நீதிமன்றம் எவரையும் விசாரணைக்குத் தோற்றவும் பிடிவிறாந்து பிறப்பிக்கவும் கைது செய்யவும் தண்டனை வழங்கவும் பரந்துபட்ட அதிகாரங்களைக் கொண்டுள்ளது. இதுவரை இந்நீதிமன்றம் டர்புர், வடக்கு உகண்டா, கொங்கோ மக்கள் குடியரசு, மத்திய ஆபிரிக்கக் குடியரசு போன்ற பிரச்சினைகளில் செயற்பட்டுள்ளது.

உலக நாடுகளில் செயற்படும் அமெரிக்கப் படைகளின் குற்றங்

களும் இந்நீதிமன்றத்தின் முன் கொண்டு வரப்படலாம் என்பதனால் ஐக்கிய அமெரிக்கா, ஒப்பந்தத்தில் தம் நாட்டுப் படைகளுக்கு விதிவிலக்குக் கோரி இன்னும் கைச்சாத்திடவில்லை. அவ்வாறே தத்தம் நாட்டுப் படைகளின் பாதுகாப்புக் கருதி சீனா, றஷ்யா, இந்தியா, இஸ்ரேல், இலங்கை போன்ற பல நாடுகளும் இன்னும் இதில் அங்கம் வகிக்கவில்லை.

# 18

## சர்வதேச புலம்பெயர்வுக்கான அமைப்பு (IOM)

(International Organization for Migration)

***1951*** இல் பெல்ஜியம், ஐக்கிய அமெரிக்கா இணைந்து பிரஸ்ஸல்ஸில் 'சர்வதேச புலம்பெயர்வு மாநாடு' (International Migration Conference) நடத்தியது. அதன் விளைவாக 'ஐரோப் பாவிலி ருந்து இடப்பெயர்வோர் இயக்கங்களுக்கான தற்கா லிக அரசாங் கங்களுக்கிடையிலான குழு' (PICMME) தாபிக்கப் பட்டது. விரைவில் 'அரசாங்கங்களுக்கிடையிலான ஐரோப்பிய புலம்பெ யர்வுக்கான குழு' (ICEM) என மாற்றப்பட்டது.

***1950*** களில் ***406,000*** இற்கும் மேற்பட்ட அகதிகள், இடம் பெயர்ந்தோர், பொருளாதார நோக்கிலான இடப்பெயர்வுக்கு ICEM உதவி புரிந்தது. ஒஸ்ட்ரியாவுக்கும் யூகோஸ்லேவியாவுக் கும் தப்பி வந்த சுமார் ***180,000*** அகதிகளின் மீள்குடியேற்றத்துக்கு ***1956, 1957*** இல் ICEM பொறுப்பாக செயற்பட்டது.

***1964*** இல் அபிவிருத்தித் திட்டத்துக்கான இடப்பெயர்வு

(MDP) எனும் நோக்கில் உயர் தகைமை கொண்ட இடப்பெயர்வாளர்களை ஆட்சேர்த்து வேலைவாய்ப்பு வழங்கி லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் அபிவிருத்திக்கு உதவியது.

1968 இல் ஒஸ்ட்ரியாவிலிருந்து வந்த 40,000 செகோஸ்லோவாகிய அகதிளுடைய மீள்குடியேற்றத்தை ICEM ஒழுங்குபடுத்தியது. 1971 இல் சோவியத் றஷ்யாவிலிருந்து வந்த யூத அகதிகளின் மீள்குடியேற்றத்துக்கு உதவியது. பங்களாதேஷ் மற்றும் நேபாளத்திலிருந்து வந்த 130,000 அகதிகள் பாகிஸ்தானில் மீள்குடியேற UNHCR இற்கு ICEM உதவியது.

1972 இல் உகண்டாவிலிருந்து ஆசியர்களின் வெளியேற்றத்துக்கும் மீள்குடியேற்றத்துக்கும் ICEM உதவியது. 1973 இல் விசேட மீள்குடியேற்றத் திட்டத்தின் கீழ் 50 நாடுகளில் 31,000 இற்குத் மேற்பட்ட சிலி நாட்டவர்களின் மீள்குடியேற்றத்துக்கு உதவியது.

1974 இல் புலம்பெயர் பிரச்சினைகள் குறித்த சர்வதேச கலந்துரையாடலுக்கும் அனுபவப் பகிர்வுக்குமாக அரசாங்கங்கள் மற்றும் ஏனைய அமைப்புகள் மத்தியிலான ஒரு மன்றமாக ICEM உருவாகியிருந்தது. 1975 இல் இந்திய - சீன அகதிகளதும் இடம்பெயர்ந்தோரதும் மீள்குடியேற்றத்தை ஆரம்பித்தது.

1980 இல் ICEM இன் உலகளாவிய உயர் பங்களிப்புக்கு கிடைத்து வந்த அங்கீகாரம் காரணமாக ICEM சபையானது அமைப்பின் பெயரை 'அரசாங்கங்களுக்கு இடையிலான புலம்பெயர் குழு' (Intergovernmental Committee for Migration (ICM) என மாற்றியது.

1983 இல் அபிவிருத்தித் திட்டத்துக்கான புலம்பெயர்வு (MDP) திட்டத்தை விஸ்தரித்து அதில் ஆபிரிக்க நாடுகளிலிருந்து தகைமை கொண்டோரை உள்வாங்கியது. 1985 இல் இத்திட்டம் ஆசியாவுக்கும் விஸ்தரிக்கப்பட்டது.

1960 இல் ஒரு மில்லியன் புலம்பெயர்ந்தோருக்கு ICEM இன் நேரடி உதவியிருந்தது. 1973 இல் 2 மில்லியன் புலம்பெயர்ந் தோருக்கு ICEM நேரடியாக உதவியிருந்தது. 1980 இல் 3 மில்லியன் புலம்பெயர்ந்தோருக்கும் 1985 இல் 4 மில்லியன் புலம்பெயர்ந் தோருக்கும் ICM நேரடியாக உதவியிருந்தது.

1975 - 1986 வரை ஒரு மில்லியன் இந்திய - சீன அகதிகள் IOM இன் உதவியைப் பெற்றனர். 1989 இல் ICM 'சர்வதேச புலம்பெயர் அமைப்பு' (International Organization for Migration – IOM) என பெயர் மாற்றம் பெறும் வகையில் அமைப்பின் 1953 யாப்பு திருத்தப்பட்டது.

1990 இல் ஈராக் குவைத்தைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து IOM மத்திய கிழக்கில் செயற்பட்டது. 1990 செப்டெம்பர் முதல் 1991 ஜனவரி வரை எகிப்துக்கும் ஏனைய ஆசிய நாடுகளுக்கும் 165,000 மக்கள் திரும்புவதற்கு IOM உதவியது. 1991 இல் இடம் பெயர்ந்த சுமார் 8 இலட்சம் ஈராக் குர்திஷ் மக்கள் வீடு திரும்ப IOM உதவியது.

1992 இல் முன்னாள் யூகோஸ்லேவியாவில் இடம்பெயர்ந்த வர்களுக்கு 'யூகோஸ்லேவிய அவசரத் திட்டம் (YEP) ஆரம்பித்து தொடர்ந்து 8 ஆண்டுகள் IOM உதவியது. மேலும் 'சுதந்திர நாடு களின் பொதுநலவாய' (CIS) அங்கத்துவ நாடுகளுக்கு புலம்பெயர் பிரச்சினைகள் பற்றிய தொழில்நுட்ப உதவிகளை வழங்க ஆரம் பித்தது.

1993 இல் 'மொசாம்பிக் சமாதான உடன்படிக்கையை' தொடர்ந்து சுமார் 5 இலட்சம் இடம்பெயர்ந்தவர்கள் மீளத்தி ரும்பும் ஏற்பாட்டை IOM செய்தது. 1994 இல் 1.2 மில்லியன் ருவாண்டா மக்கள் அண்டை நாடுகளிலிருந்து திரும்பவும் முன்னாள் ஸயர் நாட்டில் (தற்போதைய கொங்கோ குடியரசு) சுமார் 250,000 அகதிகளை வேறு இடத்தில் குடியமர்த்தவும் IOM உதவியது.

1995 இல் செச்னியாவில் ஏற்பட்ட யுத்தத்தைத் தொடர்ந்து

ஆபத்தான நிலையிலிருந்த சுமார் 50,000 பேரை அங்கிருந்து அப்புறப்படுத்தி Ingushetia, Dagestan ஆகிய றஷ்ய பிராந்தியங்களில் பாதுகாப்பளித்தது.

1996 இல் வட ஈராக்கிலிருந்த குர்திஷ் மக்களை அப்புறப்படுத்தி 3 மாதங்களில் 6,000 பேர் ஐக்கிய அமெரிக்காவில் மீளக்குடியமர்த்தப்பட்டனர். IOM உதவியினால் 190,000 இற்கு அதிகமான பொஸ்னிய அகதிகள் தமது வீட்டுக்குத் திரும்பினர்.

1998 இல் ஹரிகேன் புயலில் பாதிக்கப்பட்ட ஹொண்டூராஸ் மக்களுக்கு தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தது. 1999 இல் மெசிடோனியாவிலிருந்து (FYRM) சுமார் 80,000 கொசோவோ அகதிகளை 'மனிதாபிமான அப்புறப்படுத்தல் திட்டத்தின்' (Humanitarian Evacuation Programme) கீழ் 30 இற்கும் மேற் பட்ட நாடுகளில் தங்க வைத்து பின்னர் நாட்டுக்கு திருப்பிக் கொண்டு விட்டது.

1990 இல் 5 மில்லியன் புலம்பெயர்ந்தோருக்கும் 1991 இல் 6 மில்லியன் புலம்பெயர்ந்தோருக்கும் 1993 இல் 7 மில்லியன் புலம்பெயர்ந்தோருக்கும் 1997 இல் 10 மில்லியன் புலம்பெயர்ந்தோருக்கும் IOM நேரடியாக உதவியிருந்தது. சர்வதேச புலம்பெயர்வுக்கான அமைப்பு (IOM) தற்போது 2019 மார்ச் வரை 173 அங்கத்துவ நாடுகளைக் கொண்டிருந்தது.

# 19

## குழு-77 கூட்டமைப்பு (G–77)

(Group of Seventy Seven)

ஜெனீவாவில் இடம்பெற்ற ஐ.நா. வர்த்தக, அபிவிருத்தி மாநாட்டு (UNCTAD) முதலாவது அமர்வின் முடிவில் '77 வளர்முக நாடுகளின் இணைப் பிரகடனம்' (Joint Declaration of the Seventy- Sevan Developing Countries) மூலம் 1964 ஜூன் 15 இல் குழு-77 (Group of 77) தாபிக்கப்பட்டது. G–77 அமைப்பின் முதலாவது அமைச்சரவை மட்ட மாநாடு 1967 ஒக்டோபர் 10-25 இல் அல்ஜீரியாவின் அல்ஜியர்சில் இடம்பெற்ற போது 'அல்ஜியர்ஸ் சாசனம்' (Charter of Algiers) ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் வளர்முக நாடுகள் ஐக்கிய நாடுகள் சபை முறைமையில் தமது நலன்களை நிறுவன ரீதியில் கூட்டாக இணைந்து உறுதிப்படுத்திக் கொள்ளும் நோக்கிலேயே G-77 தாபிக்கப்பட்டது. ஜெனீவாவில் UNCTAD, நைரோபியில் UNEP, பாரிசில் UNESCO, ரோமில் FAO / IFAD, வியன்னாவில் UNIDO போன்ற ஐ.நா. நிறுவனங்களில் G–77 தொடர்பு

அலுவலகங்களைக் கொண்டு இயங்கி வருகின்றது. வோஷிங்டன் D.C. இல் IMF, உலக வங்கியில் G-24 ஐ நிறுத்தி யுள்ளது.

G-77 அமைப்பானது ஐக்கிய நாடுகள் சபையில் வளர்முக நாடுகளின்மிகப்பெரியஅரசாங்கங்களுக்கிடையிலானஅமைப்பாகும். நியூயோர்க் நகரில் வருடாந்தம் இடம்பெறும் ஐ.நா. பொதுச் சபை அமர்வின் ஆரம்பத்தில் G-77 அமைப்பு நாடுகளின் வெளி விவகார அமைச்சர்கள் சந்தித்துக் கொள்கின்றனர். G-77 என அழைக்கப்பட்டு வருகின்ற போதிலும் 134 வளர்முக நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

G-77 இல் தீர்மானம் மேற்கொள்ளும் அதியுச்ச அங்கம் 'தெற்கு உச்சி மாநாடு' (South Summit) ஆகும். 2000 ஏப்ரல் 10-14 இல் கியூபாவின ஹவானாவிலும் 2005 ஜூன் 12-16 இல் கட்டாரின் டோஹாவிலும் இடம்பெற்றது. பிராந்தியத் தொடரில் அடுத்த உச்சி மாநாடு ஆபிரிக்காவில் நடைபெறவுள்ளது.

### குழு-24 கூட்டமைப்பு (G-24) (Group of Twenty Four)

குழு-24 என்பது குழு-77 அமைப்பினால் 1971 இல் தாபிக்கப் பட்டதாகும். ஐக்கிய நாடுகள் சபையின் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் (IMF), ஐ.நா. வர்த்தக, அபிவிருத்தி மாநாடு (UNCTAD) தொடர்பான நிதி, வர்த்தகம், பொருளாதாரம் ஆகிய துறை களில் வளர்முக நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதே இதன் பணியாகும்.

குறிப்பாக வளர்முக நாடுகளின் நிதி மற்றும் அபிவிருத்திப் பிரச்சினைகளில் Bretton Woods நிறுவனங்களான IMF மற்றும் உலக வங்கித் தொகுதி ஆகியவற்றின் நடவடிக்கைகள் விடயத்தில் அதிக கவனம் செலுத்துவதே G-24 மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

# சர்வதேச அரசு சார்பு அமைப்புகள்

| இல. | அமைப்பு | ஆரம்பம் |
|---|---|---|
| 20. | பொதுநலவாய அமைப்பு (Commonwealth) | 1945 April |
| 21. | கொழும்புத் திட்டம் (Colombo Plan) | 1951 July |
| 22. | பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு (OPEC) | 1960 September |
| 23. | அணிசேரா இயக்கம் (NAM) | 1961 September |
| 24. | ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) | 1966 December |
| 25. | இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு (OIC) | 1969 September |
| 26. | அணு விநியோகக் குழு (NSG) | 1974 May |
| 27. | குழு-7 கூட்டமைப்பு (G-7) | 1975 November |
| 28. | குழு-15 கூட்டமைப்பு (G-15) | 1989 September |
| 29. | ஷங்காய் கூட்டுறவு அமைப்பு (SCO) | 2003 September |
| 30. | பிரிக்ஸ் (BRICS) | 2006 June |
| 31. | குழு-20 கூட்டமைப்பு (G-20) | 2009 September |
| 32. | மிக்டா (MIKTA) | 2013 September |
| 33. | பசிபிக் கடந்த பங்காளர் (TPP) | 2005 October |

உலகின் பல பாகங்களிலும் காணப்படும் அரசுகள் பல்வேறுபட்ட நோக்கங்களின் அடிப்படையில் ஒப்பந்தங்கள் மூலம் சர்வதேச ஒழுங்கமைப்புகளை உருவாக்கிக் கொண்டுள்ளன. இவை அரச/ அரசாங்கத் தலைவர்களின் சந்திப்பின் மூலம் இறுதி முடிவுகளை மேற்கொண்டு செயற்பட்டு வருகின்றன.

# 20

## பொதுநலவாய அமைப்பு

(Commonwealth)

*பிரித்தானிய குடியேற்ற ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்ற இறைமையுடைய நாடுகள் பிரித்தானியாவின் தலைமையில் ஒன்று சேர்ந்து அமைத்துக் கொண்ட - பரந்த நோக்கங்களைக் கொண்ட - ஒரு சர்வதேச நடுத்தர அரசு சார்பு அமைப்பு 'பொதுநலவாய அமைப்பு'* (Commonwealth) *ஆகும்.*

*சிறிய, பெரிய, வசதியுள்ள - வசதி குறைந்த நாடுகள் என பல தரப்பும் கலந்துள்ள இவ்வமைப்பில் தீவு நாடுகள் உட்பட 32 சிறிய நாடுகள் உள்ளன. ஆபிரிக்காவிலிருந்து 19 நாடுகளும் ஆசியாவிலிருந்து 8 நாடுகளும் அமெரிக்காவிலிருந்து 3 நாடுகளும் கரீபியனிலிருந்து 10 நாடுகளும் ஐரோப்பாவிலிருந்து 3 நாடுகளும் தென் பசிபிக்கிலிருந்து 11 நாடுகளும் அங்கம் வகிக்கின்றன.*

*2 ஆம் உலக மகா யுத்தத்தினாலும் தொழிற் கட்சியின் ஆட்சி காரணமாகவும் பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து சுதந்திரம்*

பெற்ற நாடுகளை ஒரு குடையின் கீழ் வைத்திருக்கும் வகையில் பொதுநலவாய அமைப்பு தோற்றம் பெற்றது. எனினும் தற்போதைய நவீன பொதுநலவாய அமைப்பில் பிரித்தானிய குடியேற்ற ஆட்சியில் இருந்திருக்காத சில அரசுகளும் உள்ளன. 2009 இல் இறுதியாக ருவாண்டா சேர்ந்து கொண்டது.

சுபீட்சம், ஜனநாயகம், சமாதானத்தை ஊக்குவித்தல், சிறிய நாடுகளின் குரலாக ஒலித்தல், சூழலைப் பாதுகாத்தல் போன்றவற்றிற்காக அங்கத்துவ நாடுகள் இணைந்து செயற்படும் நோக்கில் இவ்வமைப்பு இயங்குகின்றது. சுற்றாடல், ஜனநாயகம்-அரசாங்கம்- சட்டம், வர்த்தகம் - பொருளாதாரம், சமூகம்- இளையோர் ஆகிய 4 பிரதான துறைகளில் செயற்பட்டு வருகின்றது.

தற்போது 54 நாடுகள் அங்கம் வகிக்கும் இவ்வமைப்பு 1945 ஏப்ரல் மாதம் பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, தென் ஆபிரிக்கா, இந்தியா, ரொடீசியா (தற்போதைய Zimbabwe / Zambia) ஆகிய நாட்டுத் தலைவர்களால் 'பிரித்தானியா பொதுநலவாயம்' என்ற பெயரில் லண்டனில் உருவாக்கப்பட்டது.

1949 ஏப்ரல் 27 இல் நவீன பொதுநலவாய அமைப்பு உருவாக்கப்பட்டு, 1999 நவம்பர் 12 - 15 வரை தென் ஆபிரிக்க டர்பன் நகரில் நடைபெற்ற 16 ஆவது உச்சி மாநாட்டின் போது அமைப்பின் 50 ஆம் ஆண்டு பொன்விழாக் கொண்டாட்டம் இடம்பெற்றது. 1980 இல் பொதுநலவாய அமைப்பு ஸிம்பாப்வேயில் முதன் முறையாக தேர்தல் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டது.

இவ்வமைப்பில் இறைமை கொண்ட சுதந்திர அரசுகள் அங்கம் வகிப்பதால் விரும்பியபோது அதிலிருந்து விலகிக் கொள்ள முடியும். எனவே அங்கத்துவம் பெற வேண்டுமென்ற கட்டாயமில்லை. இன ஒதுக்கல் கொள்கை காரணமாக அமைப்பிலிருந்து 1961 இல் தென்னாபிரிக்கா விலக்கப்பட்டு மீண்டும் 1994 இல் சேர்ந்து கொண்டது. மியன்மார் தகுதியிருந்தும் அங்கத்துவம் பெறவில்லை. 1949 இல் அயர்லாந்து விலகிக் கொண்டது.

பங்களாதேஷ் விவகாரம் காரணமாக 1972 இல் பாகிஸ்தான் விலகி 17 ஆண்டுகளின் பின்னர் 1989 இல் சேர்ந்து கொண்டது. இராணுவப் புரட்சி காரணமாக 1999.10.18 இல் அமைப்பி லிருந்து இடைநிறுத்தப்பட்ட பாகிஸ்தான் 2004.05.22 இல் மீண்டும் சேர்க்கப்பட்டது. 2013.10.03 இல் காம்பியா விலகி 5 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் 2018.02.08 இல் சேர்ந்து கொண் டது.

பொதுநலவாய அமைப்பின் ஆயுட்காலத் தலைவர் பிரித்தா னிய முடியாவார். 1949 இலிருந்து 6 ஆம் ஜோர்ஜ் மன்னரும் 1952 இலிருந்து 2 ஆம் எலிசபெத் மகாராணியும் தலைமை தாங்க உரித் துடையவராகின்றனர். அமைப்பின் அரசுத் தலைவர்கள் மாநாடு 2 வருடங்களுக்கு ஒரு தடவை நடைபெறும். பொதுநலவாய அமைப்பின் முதலாவது உச்சிமாநாடு 1971 இல் சிங்கப்பூரில் நடை பெற்றது. 1973 இல் ஒட்டாவாவில் நடைபெற்ற 2 ஆவது உச்சி மாநாட்டிலிருந்து மகாராணி தலைமை தாங்கி வருகிறார்.

அமைப்பின் தலைமையகம் லண்டனில் உள்ளது. வருடாந்தம் மார்ச் 2 ஆம் திங்கட்கிழமை பொதுநலவாய நாடுகள் தினமாகும். 1948 ஆம் ஆண்டு இலங்கை இவ்வமைப்பில் சேர்ந்து கொண்டது. யாப்போ, சட்ட திட்டங்களோ இல்லாததால் அங்கத்துவ அரசுகள் ஜனநாயக சம்பிரதாய ஒழுங்குகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பது அமைப்பின் பிரதான அடிப்படையாகும்.

பொதுநலவாய அமைப்பு விஞ்ஞான தொழில்நுட்ப அறிவுப் பரிமாற்றம், புலமைப்பரிசில் வழங்குதல் மூலம் உயர்கல்வி-ஆராய்ச்சி, வர்த்தகக் கொடுக்கல் - வாங்கல்கள், மின் சக்தித் திட்டங்கள், காட்டுவள அபிவிருத்தி, அரசியல், பொருளாதார - சமூக - கலாசார ஒத்துழைப்பும் அபிவிருத்தியும் போன்ற பல செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

**பொதுநலவாய அமைப்பின் பணிகள் வருமாறு.**

- மோதலைத் தீர்த்து வைப்பதற்கு ஒத்துழைத்தல், ஜனநாய கத்தையும் ஜனநாயக நிறுவனங்களையும் பலப்படுத்தல்,

மனித உரிமைகளை விருத்தி செய்தல், பயங்கரவாதத்திற்கு எதிராகச் செயற்படுதல்

- பொதுநலவாய அமைப்பின் அங்கத்துவ நாட்டு மக்களுக்கு சமூகப் பாதுகாப்பினதும் சட்ட ஆட்சியினதும் நல்லாட்சியி னதும் பயன்பாடுகளைப் பெற்றுக் கொடுத்தல்

- ஓரங்கட்டலை இல்லாதொழித்து சமமான வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்து பொதுநலவாய அமைப்பு நாடுகளிலுள்ள ஆண்களையும் பெண்களையும் வலுவூட்டி, கல்வி வாய்ப்புக் களைப் பரவலாக்குதல், அந்நாடுகளிலுள்ள இளைஞர்களின் திறன்களை விருத்தி செய்வதற்கும் எதிர்பார்ப்புக்களை நிறை வேற்றுவதற்கும் பங்களிப்புச் செய்தல்

- வளர்முக அங்கத்துவ நாடுகளின் நலன்களைப் பாதுகாப் பதற்குத் துணைபுரிதல், வர்த்தகத்தையும் முதலீட்டையும் விருத்தி செய்வதற்கு உதவுதல். அந்நாடுகளிலுள்ள மக்களின் வறுமையை இல்லாதொழிப்பதற்கும் நீடித்த அபிவிருத்திக் கும் உதவி புரிதல்

- சிறிய அரசுகளின் பாதுகாப்புக்கும் இருப்பிற்குமாகச் செயற்ப டுதலும் அது தொடர்பாக சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்ப்பதும்

- பொதுநலவாய அமைப்பின் பணிகளை உலகுக்குச் சுட்டிக் காட்டி அதன் மீது உலக மக்களின் கவனத்தை வென்றெடுத்தல்

- அங்கத்துவ நாடுகளுக்கிடையில் ஒத்துழைப்பையும் நட்பை யும் நம்பிக்கையையும் விருத்தி செய்து ஒரு குடும்பமாகச் செயற்படுதல்

| உச்சி மாநாடுகள் (CHOGM) (Commonwealth Heads of Government Meeting) | | | |
|---|---|---|---|
| மாநாடு | காலம் | நகரம் | நாடு |
| 01st CHOGM | 1971.01.14-22 | Singapore | Singapore |
| 21st CHOGM | 2009.11.27-29 | Port of Spain | Trinidad and Tobago |
| 22nd CHOGM | 2011.10.28-30 | Perth | Australia |
| 23rd CHOGM | 2013.11.15-17 | Colombo | Sri Lanka |
| 24th CHOGM | 2015.11.27-29 | Valletta | Malta |
| 25th CHOGM | 2018.04.16-20 | London | United Kingdom |

**பொதுநலவாய உச்சி மாநாடு (CHOGM) - இலங்கை**

பொதுநலவாய அமைப்பின் 5 ஆவது உச்சி மாநாடு 1976 இலும் 23 ஆவது உச்சி மாநாடு 2013 இலும் கொழும்பில் நடைபெற்றது. 2013 ஆம் ஆண்டு உச்சி மாநாட்டின் ஆரம்ப நிகழ்வுகள் மஹிந்த ராஜபக்ஷ தாமரைத் தடாகத்திலும் பிரதான நிகழ்வுகள் பண்டாரநாயக ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திலும் (BMICH) நடைபெற்றது. உச்சி மாநாட்டிற்கு முதன்முறையாக பிரித்தானிய மகாராணியின் பிரதிநிதியாக இளவரசர் சார்ள்ஸ் தலைமை தாங்கினார்.

2013 நவம்பர் 10 ஆம் திகதி பொதுநலவாய இளைஞர் மாநாடு (Youth Forum) அம்பாந்தோட்டையிலும் பொதுநலவாய மக்கள் மன்ற மாநாடு (Peoples Forum) ஹிக்கடுவயிலும் நடைபெற்றது. அத்துடன் 2013 நவம்பர் 12 - 14 வரை பொதுநலவாய வர்த்தக மாநாடு (Business Forum) நடைபெற்றது.

# 21

## கொழும்புத் திட்டம்
(Colombo Plan)

'கொழும்புத் திட்டம்' (Colombo Plan) ஒரு பிராந்திய பொருளாதார அமைப்பாகும். ஆசிய, பசிபிக் நாடுகளில் பொருளாதார, சமூக அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் இவ்வமைப்பு 1950 நவம்பர் 28 இல் ஆரம்பிக்கப்பட்டது. 1951 ஜூலை 1 முதல் நடைமுறைக்கு வந்தது. ஆரம்பத்தில் அவுஸ்திரேலியா, பிரித்தானியா, கனடா, இலங்கை, இந்தியா, நியூசிலாந்து, பாகிஸ்தான் ஆகிய 7 நாடுகளால் ஆரம்பிக்கப்பட்ட இவ்வமைப்பில் தற்போது 27 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. செயலகம் கொழும்பில் அமைந்துள்ளது.

அங்கத்துவ நாடுகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் மற்றும் போதைப் பொருள் ஒழிப்பு போன்ற பல வேலைத் திட்டங்களை கொழும்புத் திட்டம் மேற்கொண்டுள்ளது. திறன் அபிவிருத்திக்கான வாய்ப்புகளை வழங்கும் நோக்கில் பிலிப்பைன்சின் மணிலாவில் 'கொழும்புத் திட்ட தொழில்நுட்பவியலாளர்

கல்விக்கான உத்தியோகத்தர் கல்லூரி' (the Colombo Plan Staff College for Technician Education) அமைக்கப்பட்டுள்ளது.

'தெற்கு, தென்கிழக்காசிய பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான கொழும்புத் திட்டம்' (the Colombo Plan for Cooperative Economic Development in South and South east Asia) என உருவான கொழும்புத் திட்டம் 1977 அமைப்பின் புதிய யாப்பின்படி 'ஆசிய, பசிபிக் பொருளாதார, சமூக அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான கொழும்புத் திட்டம்' (The Colombo Plan for Cooperative Economic and Social Development in Asia and the Pacific) என பெயர் மாற்றம் பெற்றது.

**கொழும்புத் திட்டத்தின் நடைமுறைக் குறிக்கோள்கள் வருமாறு.**

1. ஆசிய - பசிபிக் வலயங்களின் பொருளாதார, சமூக அபிவிருத்தி தொடர்பான முயற்சிகளுக்கு மெருகூட்டலும் துாண்டுதலாக இருத்தலும்

2. இணைப்பு முயற்சியின் மூலம் அபிவிருத்தியைத் துரிதப்படுத்த அங்கத்துவ நாடுகள் ஒப்பந்த மற்றும் பிரதிநிதித்துவ நிறுவனங்களுக்கிடையே தொழில்நுட்ப ஒத்துழைப்பு அடிப்படையிலான தகவல்களைக் கலந்தாலோசித்தல்

3. தெற்கு- தெற்கு ஒத்துழைப்பு எண்ணக்கருவுக்கு முக்கியத்துவமளித்து அங்கத்துவ நாடுகளுக்கிடையிலான அபிவிருத்தி அனுபவங்களை பரிமாறிக் கொள்வதற்குத் தேவையான வசதிகளை அமைத்தல்

1983 அவுஸ்திரேலிய உதவியில் பங்களாதேஷில் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன. பிரித்தானிய உதவியில் நேபாளத்தில் வனப் பாதுகாப்புத் திட்டம், நியூசிலாந்து உதவியில் பிஜியில் மண் ஆராய்ச்சித் திட்டம், ஐக்கிய அமெரிக்க உதவியில் பங்களாதேஷில் கிராமிய மின்வழங்கல் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டன. 1973 இல் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கான புனர்வாழ்வுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.

| அங்கத்துவ நாடுகளும் சேர்ந்த திகதியும் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| இல. | நாடுகள் | திகதி | இல. | நாடுகள் | திகதி | இல. | நாடுகள் | திகதி |
| **1** | Australia | 1950 | **10** | Indonesia | 1953 | **19** | Iran | 1966 |
| **2** | India | 1950 | **11** | Japan | 1954 | **20** | Singapore | 1966 |
| **3** | New Zealand | 1950 | **12** | Philippines | 1954 | **21** | Bangladesh | 1972 |
| **4** | Pakistan | 1950 | **13** | Thailand | 1954 | **22** | Fiji | 1972 |
| **5** | Sri Lanka | 1950 | **14** | Malaysia | 1957 | **23** | Papua New Guinea | 1973 |
| **6** | Laos | 1951 | **15** | Bhutan | 1962 | **24** | Mongolia | 2004 |
| **7** | United States | 1951 | **16** | South Korea | 1962 | **25** | Vietnam | 2004 |
| **8** | Myanmar | 1952 | **17** | Afghanistan | 1963 | **26** | Brunei | 2008 |
| **9** | Nepal | 1952 | **18** | Maldives | 1963 | **27** | Saudi Arabia | 2012 |

# 22

# பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு (OPEC)

(Organization of the Petroleum Exporting Countries)

*'ஒபெக்' எனப்படும் 'பெற்றோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் அமைப்பு'* (OPEC) *ஒரு நிரந்தர, அரசுகளுக்கிடையி லான அமைப்பாகும். 1960 செப்டெம்பர் 10-14 இல் இடம்பெற்ற 'பக்தாத் மாநாடு'* (the Baghdad Conference) *மூலம் உரு வானது. ஈரான், ஈராக், குவைத், சவூதி அரேபியா, வெனிசூலா ஆகிய 5 அடிப்படை நாடுகளைக் கொண்டு* (the Founder Memb ers) *ஆரம்பிக்கப்பட்டது.*

*ஒபெக் அமைப்பில் லிபியா (1962), ஐக்கிய அரபு இராச்சியம் (1967), அல்ஜீரியா (1969), நைஜீரியா (1971), காபோன் (1975), அங்கோலா (2007), ஈக்வடோரியல் கினியா (2017), கொங்கோ (2018) சேர்ந்து கொண்டதோடு தற்போது 13 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.*

*பெற்றோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகள் இவ்வமைப்பில்*

*அங்கத்துவம் பெறத்தகுதி பெறுகின்றன. ஆரம்ப **5** வருடங்கள் - **1961** முதல் சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் அமைந்தி ருந்த அமைப்பின் தலைமையகம் பின்னர் **1965** செப்டெம்பர் **1** முதல் ஒஸ்ட்ரியாவின் வியன்னாவுக்கு மாற்றப்பட்டு செயற்பட்டு வருகிறது. உலக எண்ணெய் உற்பத்தியில் இவ்வமைப்பு நாடுகள் சுமார் **44** வீதத்தைக் கொண்டுள்ளன.*

***1961** இல் இணைந்த கட்டார் **2019** ஜனவரி **1** இலும் **1973** இல் இணைந்த ஈக்குவடோர் **2020** ஜனவரி **2** இலும் அமைப்பிலிருந்து வெளியேறியுள்ளன. அமைப்பில் இணைய **2015** இல் சூடான் விண்ணப்பித்துள்ள போதிலும் இன்னும் அங்கத்துவம் கிடைக் கவில்லை. அமைப்பின் **176** ஆவது மாநாடு **2019** ஜூலை **1** இல் வியன்னாவில் இடம்பெற்றது.*

# 23

## அணிசேரா இயக்கம் (NAM)

(Non – Aligned Movement)

*இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின் ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ரஷ்யா ஆகிய இரு வல்லரசுகளும் முறையே நேட்டோ* (NATO – 1949), *'வோர்ஸோ'* (Warsaw – 1955) *ஆகிய இராணுவ கூட்டமைப்புகளை உருவாக்கிக் கொண்டு உலகை இரு பெரும் முகாம்களாக்கி பனிப்போர் நடத்திய காலத்தில் இவ்விரு அணிகளிலும் சேராமல் தனித்து இயங்க முன்வந்த மூன்றாம் மண்டல நாடுகளின் மிகப் பெரிய கூட்டமைப்பே அணிசேரா இயக்கமாகும்.*

*யூகோஸ்லேவியத் தலைநகர் பெல்கிரேட்டில் 1961 செப்டம்பர் 1 - 6 இல் 25 நாடுகளால் அணிசேரா இயக்கம் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. 1964 கெய்ரோ உச்சி மாநாட்டில் 47 நாடுகள் கலந்து கொண்டன. தற்போது அமைப்பில் 120 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.*

அடிப்படையில் ஏகாதிபத்தியம், குடியேற்றவாதம், நவகாலனித்துவம் என்பவற்றிற்கு எதிராகவும் சுதந்திரம், சமத்துவம், ஆள்புல ஒருமை என்பவற்றிற்கு ஆதரவாகவும் செயற்பட அணிசேரா இயக்கம் உறுதி பூண்டுள்ளது. உலக விவகாரங்களில் வல்லரசுகளின் ஆதிக்கத்திற்கு உட்படாமல் சுயாதீனமான வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றுவது இதன் பிரதான நோக்கமாகும்.

**1954** ஆம் ஆண்டு இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்வரும் **'பஞ்சசீல உடன்பாடு'** (Panch sheel Treaty) பின்னர் அணிசேரா இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளில் இடம்பிடித்துள்ளது.

- பிராந்திய இறைமையை பரஸ்பரம் மதித்தல்
- ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருத்தல்
- ஏனைய நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடாதிருத்தல்
- சமத்துவம் மற்றும் பரஸ்பர ஒத்துழைப்பு
- சமாதான சகவாழ்வு

யூகோஸ்லேவியாவின் டிடோ (Tito), இந்தியாவின் ஜவஹர்லால் நேரு, எகிப்தின் கமால் அப்துல் நாஸர், இந்தோனேசியாவின் சுகார்னோ போன்ற மூன்றாம் மண்டல நாடுகளின் தலைவர்கள் அணிசேரா இயக்கம் உருவாகக் காரணமாக இருந்தனர். இது வொரு இயக்கமேயன்றி அமைப்பல்ல என்பதே இவ்விஸ்தாபகர்களின் பிரகடனமாக இருந்தது.

**1955** ஏப்ரல் **18 - 24** இல் இந்தோனேசியாவின் Bandung நகரில் **29** மூன்றாம் மண்டல நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் பங்குபற்றிய ஆசிய - ஆபிரிக்க மாநாடு அணிசேரா இயக்க உருவாக்கத்தின் முக்கிய கட்டமாகும். அதில் தென்னாபிரிக்கா, தாய்வான், இஸ்ரேல், தென் கொரியா தவிர்ந்த ஏனைய **25** நாடுகள் அணிசேராக் கொள்கைக்கு அமைப்பு ரீதியான வடிவம் கொடுக்க இணங்கிக் கொண்டன.

அணிசேரா இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளானது பெரியதும் சிறியதுமான நாடுகள் மத்தியில் நல்லுறவினைக் கட்டியெழுப்ப உதவுகிறது. அவ்வடிப்படைக் கொள்கைகள் (Ten Principles of Bandung) வருமாறு.

1. அடிப்படை மனித உரிமைகள் மற்றும் ஐ.நா. சாசனத்தின் கொள்கைகளையும் அடிப்படைகளையும் மதித்தல்

2. சகல அரசுகளதும் இறைமையையும் ஆள்புல ஒருமையையும் மதித்தல்

3. சகல பெரிய, சிறிய நாடுகள் மத்தியிலும் சகல இனங்கள் மத்தியிலும் சமத்துவத்தை அங்கீகரித்தல்

4. வேறொரு நாட்டின் உள் விவகாரங்களில் தலையீடோ குறுக்கீடோ இல்லை

5. ஐ.நா. சாசனத்திற்கேற்ப தனியாகவோ கூட்டாகவோ ஒவ்வொரு நாட்டினதும் தற்காப்புக்கான உரிமையை மதித்தல்

6. எந்தவொரு வல்லரசுகளின் குறிப்பான நலன்களுக்கு நன்மையளிக்கக்கூடிய கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தத்துக்கு பாவிக்காமை

7. எந்தவொரு நாட்டின் ஆள்புல ஒருமைப்பாட்டுக்கு, அரசியல் சுதந்திரத்துக்கு எதிரான படைபலப் பிரயோகம், ஆக்கிரமிப்பு ரீதியான கட்டளை, அச்சுறுத்தல் என்பவற்றிலிருந்து விலகியிருத்தல். எந்தவொரு நாட்டுக்காகவும் ஏனைய நாடுகளுக்கு அழுத்தம் பாவிக்காமை

8. சகல சர்வதேச பிணக்குகளையும் அமைதி வழியில் தீர்த்து வைத்தல். அதாவது இணக்கப்பாடு, நல்லிணக்கம், மத்தியஸ்தம், நியாயமான தீர்வு அல்லது ஐ.நா. சாசனத்துக்கேற்ப உரிய தரப்புகளின் சுயதெரிவு

9. பரஸ்பர விருப்பங்களையும் ஒத்துழைப்பையும் மேம்படுத்தல்

10. நீதியையும் சர்வதேச கடப்பாட்டையும் மதித்தல்

அணிசேரா இயக்கத்தின் 16 ஆவது உச்சி மாநாடு 2012 ஆகஸ்ட் 30- 31 திகதிகளில் ஈரானின் தலைநகர் தெஹ்ரானில் நடந்தது.

*இதில் 50 நாட்டுத் தலைவர்கள் உட்பட ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த 120 அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதி கள் கலந்து கொண்டனர். 1979 ஈரான் இஸ்லாமிய புரட்சிக்குப் பின்னர் அப்போதைய எகிப்து ஜனாதிபதி முர்ஸி இதில் கலந்து கொண்டார். சிரிய நெருக்கடி மாநாட்டின் முக்கிய தொனிப் பொருளாக இருந்தது.*

*அணிசேரா இயக்கத்தின் 14 ஆவது உச்சிமாநாடு செப்டம்பர் 14 ஆம் திகதி கியூபாவின் தலைநகர் ஹவானாவில் நடைபெற்ற போது ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த 118 அங்கத்துவ நாடுகள் கலந்து கொண்டன. ஹெய்டி, சென். கிட்ஸ் ஆகியன புதிதாகச் சேர்ந்த அங்கத்துவ நாடுகளாகும்.*

*ஹவானா உச்சிமாநாடு பயங்கரவாதத்திற்கு எதிராக அமெரிக்கா மேற்கொள்ளும் செயற்பாடுகளின் ஒரு முக்கிய கட்டத்தில் நடந்தது. குறிப்பாக ஆப்கானிஸ்தான். ஈராக் ஆகிய நாடுகளில் அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கைகளுக்கும் ஈரான், சிரியா, வடகொரியா, வெனிசூலா மீதான அமெரிக்க அச்சுறுத்தல்களுக்கும் எதிரான வெளிப்பாடுகளுடன் கூடியதாக அம்மாநாடு அமைந்திருந்தது.*

*அணிசேரா இயக்கத்தின் 13 ஆவது உச்சிமாநாடு 2003 பெப் ரவரி 20 ஆம் திகதி மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்றபோது 114 அங்கத்துவ நாடுகள் கலந்து கொண்டன. அப்போது இயக்கத்தின் தலைமைத்துவத்தை ஏற்றிருந்த மலேசியப் பிரதமர் மஹதீர் மொஹமட் அணிசேரா இயக்கம் புதிய உத்வேகம் பெறக் காரணமாக இருந்தார்.*

*ஹவானா உச்சி மாநாடு முன்னர் என்றுமில்லாதவாறு தெளிவாகவும் உறுதியாகவும் அமெரிக்காவுக்கு எதிரான போக்கையும் நிலைப்பாட்டையும் கொண்டிருந்தது. ஈரான் ஜனாதிபதி அஹ்மதி நெஜாத், வெனிசூலா ஜனாதிபதி சாவேஸ் போன்றோர் மாநாட்டின் முக்கிய பாத்திரங்களாக காணப்பட்டிருந்தனர்.*

*கோலாலம்பூர் மற்றும் ஹவானா உச்சி மாநாடுகளில் பயங்க*

ரவாதம் தொடர்பாக அதிகம் விவாதிக்கப்பட்டன. செப்டெம்பர் 11 தாக்குதல்களின் பின்னர் உலகெங்கிலும் அமெரிக்கா மேற்கொண்டு வரும் பயங்கரவாதத்திற்கெதிரான பொருத்தமற்ற நடவடிக்கைகள் மற்றும் அணுகுமுறைகளும் உலக சமாதானத்தை சீர்குலைத்து பயங்கரவாதத்தை அதிகரித்துள்ளதாக கண்டிக்கப்பட்டன.

ஈராக், ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கைகள், ஈரான், சிரியா, வட கொரியா போன்ற நாடுகளை அமெரிக்கா அச்சுறுத்தி வருகின்றமை பலஸ்தீனம் மற்றும் லெபனான் மீதான இஸ்ரேலியத் தாக்குதல்கள் என்பன ஹவானா மாநாட்டில் அதிக கவனத்தை ஈர்த்து அவை தொடர்பாக அமெரிக்கா மீது கண்டனங்களும் தெரிவிக்கப்பட்டன.

அணிசேரா இயக்கம் 1970, 1980 களில் புதிய சர்வதேச பொருளாதார ஒழுங்கு முறையில் தமது பாத்திரத்தை சரிவர ஈடுபடுத்திக் கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியிருந்தது. எல்லா காலங்களிலும் சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் பலப்படுத்த அதிக பங்களிப்பு செய்ய முயற்சிக்கின்றது. ஆயுதப் பரிகரணம், சமூக நீதி, பேண்தகு சுற்றாடல் போன்ற விடயங்களிலும் கவனம் கொள்கிறது. சர்வதேச சட்டம் சரிவர செயற்படுத்தப்படுவதிலும் அக்கறை காட்டுகின்றது.

அணிசேரா இயக்க உச்சி மாநாடுகளில் பெரும்பாலும் மூன்றாம் மண்டல நாடுகளின் பிரச்சினைகள், நெருக்கடிகள் மற்றும் சமூக- பொருளாதார அபிவிருத்தி என்பன குறித்தே பெரிதும் ஆராயப்பட்டன. குறிப்பாக ஏகாதிபத்தியம், குடியேற்றவாதம், நவகாலனித்துவம் என்பவற்றிற்கு எதிராகக் குரலெழுப்பப்பட்டன. உலக சமாதானம், பலஸ்தீனர்களின் உரிமைகள் குறித்து ஆதரவாகக் கருத்துத் தெரிவிக்கப்பட்டதோடு அப்போதைய தென்னாபிரிக்க இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளில் மூன் றில்

இரண்டு பங்கு அணிசேரா நாடுகளாகும். எனினும் உலக விவகாரங்களைத் தீர்மானிப்பதில் இந்நாடுகளின் பங்கு மிகக் குறைவாகும். ஐக்கிய அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் உலக விவகாரங்கள் தொடர்பாக எடுக்கும் தீர்மானங்களுக்கு அணிசேரா நாடுகள் துணை போவதாக எப்போதும் குற்றஞ்சாட்டப்படுகின்றன.

அதனால் அணிசேரா இயக்கம் என்ன நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டதோ அந்நோக்கங்களை கடந்த 60 வருட காலத்தில் அது அடைந்ததா என்று இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை விமர்சிக்கப்படுகின்றது. நேட்டோ, வார்ஸோ ஆகிய இராணுவக் கூட்டமைப்புக்களை வழிநடத்திய வல்லரசுகளின் செல்வாக்கிற்குட்படாமல் - அவ்விரு அணிகளிலும் சேராமல் கூட்டுச் சாராக் கொள்கையைப் பின்பற்றுவதாகக் கூறிக் கொள்ளும் மூன்றாம் மண்டல நாடுகள், கடந்த காலங்களில் தம் இராணுவ, பொருளாதார நலன்களுக்காக வல்லரசுகளின் பக்கம் சார்ந்து இயங்கி வந்தமை அணிசேராக் கொள்கையைக் கேள்விக்குள்ளாக்கியது.

பொருளாதார நெருக்கடியே அணிசேரா நாடுகளின் அடிப்படை பலவீனம் என்றால் இராணுவத் தேவையையாவது தவிர்த்திருக்கலாம். ஆனால் மக்களின் அறிவீனத்தை தம் சுயநலன்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ளும் ஆட்சியாளர்களாலும் வல்லரசுகள் தம் ஆயுத விற்பனைக்காகவும் வேறு பொருளா தார நலன்களுக்காகவும் மேற்கொள்ளும் தந்திரோபாய நடவடிக்கைகளாலும் இந்நாடுகள் இராணுவத் தளபாட தேவைகளை தாமாகவே அதிகரித்துக் கொண்டன. இதனால் உள்நாட்டில் கிளர்ச்சியாளர்கள் உருவாகி ஆட்சி பலவீனப்படுவதற்கும் இந்நாடுகளை மோதவிட்டு வல்லரசுகள் தம் பனிப்போரை நடத்துவதற்கும் அணிசேரா நாடுகள் களமாக இருந்திருக்கின்றன.

மேலும் மூன்றாம் மண்டல நாடுகள் மத்தியில் உள்நாட்டிலும் ஏற்படும் பிணக்குகளை இலகுவாகப் பேசித் தீர்த்துக்கொள்ளும் வாய்ப்புகளை அணிசேரா இயக்கம் உருவாக்கிக் கொடுக்கின்ற

போதும் அதனை இந்நாடுகள் பயன்படுத்திக் கொள்ளத் தவறி விட்டன. ஐக்கிய நாடுகள் சபையில் பெரும்பான்மையாக விளங் கும் அணிசேரா நாடுகள், உலக விவகாரங்களில் செயற்றிறன் மிக்க முடிவுகளை துணிந்து மேற்கொள்ளவோ நடைமுறைப் படுத்தவோ முடியாத நிலையில் காணப்படுகின்றன. உதாரண மாக இயக்கம் உருவான காலத்திலிருந்து பலஸ்தீன விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கின்ற போதும் இதுவரை பலஸ்தீன நெருக்கடிக்கு ஒரு நிரந்தர தீர்வை அதனால் பெற்றுக் கொடுக்க முடியவில்லை.

பாதுகாப்புச் சபையில் நிரந்தர அங்கத்துவத்தைக் கொண் டுள்ள 5 வல்லரசுகளின் ரத்ததிகாரம் காரணமாக ஐ.நா. பொதுச் சபையில் பெரும்பான்மை பெற்றிருக்கும் அணிசேரா நாடுகள் எதையும் சாதிக்க முடியாமல் உள்ளன. மேலும் ஐ.நா. சபையில் அங்கத்துவம் பெற்றுக் கொண்டதன் மூலம் வல்லரசுகளால் வழிநடத்தப்படும் பாதுகாப்புச் சபை விதிக்கும் எவ்வித ஒருத லைப்பட்சமான தண்டனைகளையும் உத்தியோகபூர்வமாக அனுபவிக்கும் துர்ப்பாக்கிய நிலையில் அணிசேரா நாடுகள் உள்ளன. உலக சமாதானம், பயங்கரவாத ஒழிப்பு என்ற போர்வை யில் ஆப்கானிஸ்தான், ஈராக் போன்ற நாடுகளில் பெருமளவு பொ துமக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். சிரியா அழிந்து கொண் டிருக்கிறது.

1990 சோவியத் சீர்குலைவுடன் பனிப்போரும் முடிவுக்கு வந்து விட்டது. அதுவரை உலகில் இருந்து வந்த பலமிக்க இரு அணி களில் ஒரு அணி இல்லாமற் போனதோடு அணிகளில் சேராமல் நடுநிலைமை வகிப்பது என்ற தத்துவம் கொண்ட அணிசேரா இயக்கம் தொடர்ந்தும் செயற்பட வேண்டுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. அத்துடன் ''வார்ஸோ'' இராணுவக் கூட்டமைப்பு செயலிழந்து போனதோடு ''வார்ஸோ'' அங்கத்துவ நாடுகள் பலவும் நேட்டோ இராணுவக் கூட்டமைப்பில் சேர்க்கப்பட்டு உலகின் பாதுகாப்பு விவகாரங்களில் நேட்டோவின் தலையீடு அதிகரித்து வருவது அணிசேராக் கொள்கைக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் செப்டெம்பர் 11 தாக்குதலின் பின்னர் உருவான புதிய உலக ஒழுங்கில் (New World Order) அமெரிக்கா தலைமையில் உலக விவகாரங்களில் செலுத்தப்பட்டு வரும் ஆதிக்கம் காரணமாக உலகில் அமெரிக்காவுக்கெதிரான சக்திகளும் அதிகரித்துள்ளன. இதனால் தீவிரவாத அமைப்புகளும் சீனா, வட கொரியா, ஈரான் போன்ற நாடுகளும் அமெரிக்காவை பலமான முறையில் எதிர்க்கத் துணிந்துவிட்டன.

| உச்சி மாநாடுகள் | | | |
|---|---|---|---|
| **இல.** | **ஆண்டு** | **நகரம்** | **நாடு** |
| **1.** | 1961 | பெல்கிரேட் | யூகோஸ்லேவியா |
| **2.** | 1964 | கெய்ரோ | எகிப்து |
| **3.** | 1970 | லுஸாகா | ஸாம்பியா |
| **4.** | 1973 | அல்ஜியர்ஸ் | அல்ஜீரியா |
| **5.** | 1976 | கொழும்பு | இலங்கை |
| **6.** | 1979 | ஹவானா | கியூபா |
| **7.** | 1983 | புதுடில்லி | இந்தியா |
| **8.** | 1986 | ஹராரே | சிம்பாப்வே |
| **9.** | 1989 | பெல்கிரேட் | யூகோஸ்லேவியா |
| **10.** | 1992 | ஜகார்த்தா | இந்தோனேஸியா |
| **11.** | 1995 | கார்டஜீனா | கொலம்பியா |
| **12.** | 1998 | டர்பன் | தென் ஆபிரிக்கா |
| **13.** | 2003 | கோலாலம்பூர் | மலேசியா |
| **14.** | 2006 | ஹவானா | கியூபா |
| **15.** | 2009 | ஷாம் அல் ஷேய்க | எகிப்து |
| **16.** | 2012 | தெஹ்ரான் | ஈரான் |
| **17.** | 2016 | போர்லமர் | வெனிசுலா |
| **18.** | 2019 | பாகு (Baku) | அஸர்பைஜான் |

## பனிப்போர் (Cold war)

ஐக்கிய அமெரிக்காவும் சோவியத் றஷ்யாவும் 1945 இரண்டாம் உலக மகா யுத்தம் முடிந்தது முதல் 1990 இல் சோவியத் சீர்குலையும் வரைக்கும் உலகின் பல விடயங்களிலும் தத்தம் ஆதிக்கத்தை நிலை நாட்டிக்கொள்ள ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்ட தன்மை யையே 'பனிப்போர்' (கெடுபிடி யுத்தம்) என்பர்.

இரு நாடுகளும் நேரடியாக மோதிக்கொள்ளாமல் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டும் அருகருகே இருக்கும் நாடுகளுக்கு மாறி மாறி ஆயுதங களைக் கொடுத்து யுத்தம் செய்விக்கச் செய்தும் தத்தம் வல்லமைகளை வெளிக்காட்டி வந்தன. இதில் ஒரு பகுதியே விண்வெளியில் இவ்விரு நாடுகளின் போட்டி நிலையான 'நட்சத்திர யுத்தம்' (Star war) ஆகும்.

# 24

## ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)

(The Asian Development Bank)

*ஒரு அரசு சார்பு அமைப்பான 'ஆசிய அபிவிருத்தி வங்கி'* (ADB) *ஆசிய - பசிபிக் பிராந்தியத்திலிருந்து வறுமையை இல்லா தொழிக்கும் பிரதான நோக்கத்தைக் கொண்டதாகும். இப்பிராந்தி யத்தில் 1.8 பில்லியன் மக்கள் ஒரு மனிதனுக்கு அடிப்படையான அத்தியாவசியப் பொருட்கள், சேவைகள், வசதி வாய்ப்புகள் இல்லாத நிலையில் வறுமையில் வாழ்ந்து வருகின்றனர்.*

*இதன் காரணமாக ஆசிய பசிபிக் பிராந்தியத்திலுள்ள மில்லி யன்கணக்கான மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் 1966 டிசம்பர் 19 இல்* ADB *ஆரம்பிக்கப்பட்டது. 1966 இல்* ADB *தாபிக்கப்பட்டபோது 31 நாடுகள் இருந்தன. 2014 இலிருந்து தற்போது வரை 67 நாடுகள் உள்ளன. இதில் ஆசிய, பசிபிக் பிராந்திய நாடுகள் 48, அப்பிராந்தியத்திற்கு வெளியே யுள்ள நாடுகள் 19 அங்கம் வகிக்கின்றன.*

ADB இன் தலைமையகம் பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலா வில் அமைந்துள்ளது. மேலும் 26 நாடுகளில் அலுவலகங்களும் டோக்கியோ (ஜப்பான்), பிரேங்பேர்ட் (ஜேர்மனி), வொஷிங் டன் D.C. (ஐக்கிய அமெரிக்கா), சிட்னி (அவுஸ்திரேலியா) ஆகிய நகரங்களில் பிரதிநிதித்துவ அலுவலகங்களும் உள்ளன.

**ADB இன் முக்கிய பணிகள் வருமாறு.**

- ஆசிய - பசிபிக் பிராந்தியத்தில் உட்கட்டமைப்பு, சுகாதார சேவைகள், நிதி மற்றும் பொது நிருவாக முறைமை, கால நிலை மாற்றத்துக்கு முகங்கொடுத்தல், இயற்கை வளங்களை சிறந்த முறையில் முகாமை செய்தல் போன்றவற்றில் நாடுக ளுக்கு உதவுதல்
- இதற்காக கடனுதவி, மானியங்கள், கொள்கைப் பரிமாற்றம், தொழில்நுட்ப உதவி மற்றும் நியாயமான முதலீடுகளை மேற் கொள்ளல்

2000 ஆம் ஆண்டிலிருந்து ஆயிரக்கணக்கான பாடசாலைகள், பாலங்கள், கிளினிக் நிலையங்கள், வீதிகள் அமைத்துக் கொடுத் துள்ளது. மேலும் நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மின்சார வசதி கள் செய்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) கடந்த காலங்களில் இலங் கைக்கு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்கு கடன், மானி யம், தொழில்நுட்ப உதவிகள் எனும் அடிப்படையில் விவசாயம், இயற்கை வளங்கள், கிராமிய மேம்பாடு, கல்வி, சக்தி, நிதி, சுகா தாரம், தொழில்துறை, வணிகம், பல்துறை, பொதுத்துறை, முகாமைத்துவம், போக்குவரத்து, நீர், நகர உட்கட்டமைப்பு, சேவைகள் என பல்வேறு விடயங்களுக்கும் உதவியுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கையின் ஒரு முன்னணி பன்முக அபிவிருத்திப் பங்குதாரராக இருந்து 2018 - 2022 காலப்பகுதி யில் போக்குவரத்து, சக்தி, நகர்ப்புறத் துறைகளில் உயர்தரமான உட் கட்டமைப்பு, பொருளாதார பல்வகைமைப்படுத்தலில் வேலை

உருவாக்கம், வருமான மேம்பாடு, கிராமிய பொருளாதார அபிவிருத்தி போன்றவற்றிற்கு பங்களிப்புச் செய்யும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

ADB இன் ஒரு அங்கத்துவ நாடாக இலங்கை அவ்வமைப்பின் மூலம் பின்வரும் விடயங்களில் உதவிகளைப் பெற்றுள்ளது.

- போவதன்ன நீர்மின் உற்பத்தி நிலையம்
- சபுகஸ்கந்த யூரியா உர உற்பத்தி செயற்றிட்டம்
- இலங்கையின் மேற்குக்கரை மீன்பிடி தொழில் அபிவிருத்தி
- மீன்பிடி துறைமுக அபிவிருத்தி
- பல்லாண்டுப் பயிர் (Perennial crop) அபிவிருத்திச் செயற்றிட்டம்
- வடக்கு, கிழக்கு சமூக மீள்கட்டியெழுப்பல் மற்றும் அபிவிருத்தி செயற்றிட்டம் (NECORD).
- பாரிய கொழும்பு நீர், கழிவு நீர் முகாமைத்துவ விருத்தி முதலீட்டுத் திட்டம் (2012, 2013, 2015)
- திருகோணமலை ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தித் திட்டம் (2013)
- மகாவலி நீர்ப்பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம் (2015, 2017)
- உள்ளூராட்சி விரிவாக்கல் பிரிவுத் திட்டம் (2011, 2016)
- இலங்கை வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தப் பாதுகாப்பு (2017)
- கல்லோயா சீனித் தொழிற்சாலை புனரமைப்பு (1972, 1973)
- வட மாகாண பேண்தகு மீன்பிடி அபிவிருத்தித் திட்டம் (2017)
- கிரிந்தி ஓயா நீர்ப்பாசன குடியேற்றத் திட்டம் (1977, 1981, 1982)
- கிழக்கு மாகாண கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டம் (2000)
- மகாவலி பிரதேச வீதி அபிவிருத்தி (1979, 1980)

- *திருகோணமலை அனல் மின்சாரத் திட்டம் (1983)*
- *பல்லாண்டுப் பயிர்கள் மற்றும் விதைத் திட்டம் (1996)*
- *சுகாதார முறைமை மேம்பாட்டுத் திட்டம் (2018)*
- *ஒருங்கிணைந்த வீதி முதலீட்டுத் திட்டம்* (IRoad).
- *யாழ், கிளிநொச்சி நீர் விநியோகத் திட்டம்*
- *சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மீள்கட்டுமானத் திட்டம் (2005)*
- *அறிவுச் சமூகத்துக்கான கல்வி நிகழ்ச்சித் திட்டம் (2007)*

# 25

# இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு (OIC)

(Organisation of Islamic Cooperation)

இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு (OIC), அரசுகளுக்கிடையிலான மிகப்பெரிய ஒரு அமைப்பாகும். முன்னர் இவ்வமைப்பு 'இஸ்லாமிய மாநாட்டு அமைப்பு' (Organization of the Islamic Conference) என்றே ஆரம்பிக்கப்பட்டது. 30 நாடுகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இவ்வமைப்பில் தற்போது 57 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

முஸ்லிம் உலகின் ஒன்றுபட்ட குரலாக ஒலிப்பதே (The Collective Voice of The Muslim World) இவ்வமைப்பின் பிரதான தொனியாகும். சர்வதேச அமைதி மற்றும் இன நல்லிணக்கம் என்பவற்றை மேம்படுத்துவதன் மூலம் உலக முஸ்லிம்களின் பாதுகாப்பைப் பேணுதல் இவ்வமைப்பின் அடிப்படையாகும்.

மொரோக்கோ தலைநகர் Rabat இல் 1969 செப்டெம்பர் 25 இல் இடம்பெற்ற வரலாற்றுப் புகழ்மிக்க மாநாட்டின்

போது உருவாக்கப்பட்டது. **1970** இல் 'இஸ்லாமிய வெளிவிவ கார அமைச்சர்களின் மாநாடு' (ICFM) முதற்தடவையாக சவூதி அரேபியாவின் ஜித்தா நகரில் இடம்பெற்ற போது அமைப்பின் நிரந்தர செயலகத்தை ஜித்தாவில் நிறுவ தீர்மானிக்கப்பட்டது. **1972** இல் இடம்பெற்ற **3** ஆவது அமைச்சரவை மாநாட்டில் அமைப்பின் சாசனம் அங்கீகரிக்கப்பட்டது.

OIC–2015 செயற்றிட்டப்படி **2016 - 2025** தசாப்த காலத்தில் **107** இலக்குகளுடன் **17** முன்னுரிமை துறைகளில் அமைப்பு கவனம் செலுத்தி வருகின்றது.

United for Peace and Development (1969 – 2019)

# 26

## அணு விநியோகத்தர் குழு (NSG)

(Nuclear Suppliers Group)

அமைதி நோக்கங்களுக்கான அணு தொழில்நுட்பப் பரிமாற்றம் தவறான பயன்பாட்டிற்கு உட்படாதிருப்பதை உறுதிப்படுத்தும் நோக்கில் ‘அணு விநியோகத்தர் குழு’ (NSG) **1974** இல் தாபிக்கப்பட்டது. இவ்வமைப்பில் தற்போது **48** நாடுகள் அங்கம் வகிக்கின்றன. 2020 – 2021 NSG இன் தலைமைப் பொறுப்பை பெல்ஜியம் ஏற்றுக் கொண்டுள்ளது. அணுவோடு தொடர்பான ஏற்றுமதிகளின் போது உரிய வழிகாட்டல்களை நடைமுறைப் படுத்துவதன் மூலம் அணுவாயுதப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த NSG முயற்சிக்கின்றது.

**1978** இல் ‘சர்வதேச அணுசக்தி முகவரகத்தினால்’ (IAEA) வெளியிடப்பட்ட NSG வழிகாட்டல் நெறிகள் (NSG Guidelines) அணுவானது பாதுகாப்பற்ற சூழலுக்கும் அணு வெடிப்பு நடவடிக்கைகளுக்கும் மாற்றப்படாதிருப்பதை உறுதிப்படுத்தி சமாதான நடவடிக்கைகளுக்கான பரிமாற்றத்திற்கு உதவும் வகையில்

இவ்வழிகாட்டல் நெறி அனுமதிக்கிறது. **1994** இல் NSG ஏற்றுக் கொண்ட 'அணுவாயுதப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் கொள்கையையும்' (Non–Proliferation Principle) இவ்வழிகாட்டல் நெறி கொண்டுள்ளது.

NSG வழிகாட்டல் நெறிகள் இத்துறையுடன் தொடர்புடைய பின்வரும் சர்வதேச - சட்ட ரீதியான ஒப்பந்த அமைப்புகளுடனும் தொடர்புபடுகின்றது.

- the Treaty on the Non–Proliferation of Nuclear Weapons (NPT)
- the Treaty for the Prohibition of Nuclear Weapons in Latin America (Treaty of Tlatelolco)
- the South Pacific Nuclear–Free–Zone Treaty (Treaty of Rarotonga)
- the African Nuclear–Weapon–Free Zone Treaty (Treaty of Pelindaba)
- the Treaty on the Southeast Asia Nuclear–Weapon–Free Zone (Treaty of Bangkok)
- the Central Asian Nuclear–Weapon–Free Zone Treaty (Treaty of Semipalatinsk)

அணுவை மூலப்பொருள், தொழில்நுட்பம் (Mateial & Techno logy) ஆகிய இரட்டைப் பாவனையாக பரிமாறிக் கொள்ளும் வழிகாட் டல் நெறிமுறைகளை உருவாக்க **1992** இல் NSG தீர்மானித்தது. 'NPT மீளாய்வு, விரிவாக்க மாநாடு' (NPTREC) 1995 இல் இதற்கு ஒப்புதலளித்தது.

**அங்கத்துவ நாடுகள்**

Argentina, Australia, Austria, Belarus, Belgium, Brazil, Bulgaria, Canada, China, Croatia, Cyprus, Czech Republic, Denmark, Estonia, Finland, France, Germany, Greece, Hungary, Iceland, Ireland, Italy, Japan, Kazakhstan, Latvia, Lithuania, Luxembourg, Malta, Mexico, Netherlands, New

Zealand, Norway, Poland, Portugal, Romania, Russia, Serbia, Slovakia, Slovenia, South Africa, South Korea, Spain, Sweden, Switzerland, Turkey, Ukraine, the United Kingdom, and the United States

***முக்கிய மாநாடுகள்***

- 2001 – The 2001 NSG Plenary (Aspen)
- 2004 – The 2004 NSG Plenary (G–teborg)
- 2005 – The 2005 NSG Plenary (Oslo)
- 2008 – At an extraordinary NSG Plenary in Vienna
- 2010 NSG Plenary (Christchurch)
- 2011 The 2011 NSG Plenary (Noordwijk)
- 2012 The 2012 NSG Plenary (Seattle)
- 2013 The Fundamental Review was completed at the 2013 NSG Plenary (Prague)
- 2015 – The 2015 Review Conference of the Parties to the Treaty on the Non–Proliferation of Nuclear Weapons (NPT) in New York.
- 2016 – The 2016 NSG Plenary (Seoul)
- ***2017*** - The **20**17 NSG Plenary (Bern)

| ***அணுவாயுதப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் ஒப்பந்தம்*** **(NPT)**<br>(Treaty on the Non – Proliferation of Nuclear Weapons) |
|---|
| *அணுவாயுதப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில்* NPT *ஒப்பந்தம்* ***1968*** *ஜூலை* ***1*** *இல் கைச்சாத்திடப்பட்டு* ***1970*** *மார்ச்* ***5*** *இல் நடைமுறைக்கு வந்தது.* *ஜெனீவாவில் அமைந்திருந்த ஐக்கிய நாடுகள் சபையின் உதவிபெறும் அமைப்பான* ***'ஆயுதப்பரிகரணம் குறித்த 18 நாடுகள் குழு'*** (Eighteen Nation Committee on Disarmament – ENCD) *இவ்வொப்பந்தத்தைத் தயாரித்திருந்தது.* ENCD 1962 – 1969 *காலப்பகுதியில் செயற்பட்டது.* |

# 27

## குழு-7 கூட்டமைப்பு (G–7)

(Group of Seven)

பாரிய கைத்தொழில்மய நாடுகளான ஜப்பான், பிரான்ஸ், பிரித்தானியா, மேற்கு ஜேர்மனி, ஐக்கிய அமெரிக்கா, இத்தாலி ஆகிய 6 நாடுகள் சேர்ந்து 'குழு-6' (Group of Six) எனும் பெயரில் 1975 நவம்பர் 15-17 இல் பிரான்ஸில் முதலாவது பொருளாதார உச்சி மாநாடு நடத்தின. 1976 ஜூன் 27-28 இல் ஐக்கிய அமெரிக்காவில் இடம்பெற்ற 2 ஆவது உச்சி மாநாட்டில் கனடா இணைந்து கொண்டதோடு G-7 எனப் பெயர் பெறலாயிற்று.

1994 Naples (இத்தாலி) 20 ஆவது உச்சி மாநாட்டின் போது G–7 நாடுகளுடன் றஷ்யா முதன்முதலாக தனியான சந்திப்பொன்றை நடத்தியது. இது G–7+1 என அழைக்கப்பட்டது. 1997 Denver (US) 23 ஆவது G–7 உச்சிமாநாடு முடிந்த பிறகு அரசியல் கலந்துரையாடலுக்காக (Political – 8) றஷ்யா கலந்து கொண்டது. 1998 Birmingham (UK) 24 ஆவது உச்சிமாநாட்டில் றஷ்யா முழு அங்கத்துவம் பெற்றதோடு G–8 என அழைக்கப்

பட்டது. எனினும் 2014 மார்ச்சில் றஷ்யா வெளியேறியது. 2017 ஜனவரியில் நிரந்தரமாக விலகிவிடத் தீர்மானித்த றஷ்யா 2018 ஜூனில் அதனை உறுதிப்படுத்தியது.

அமைப்பின் 45 ஆவது உச்சிமாநாடு 2019 ஓகஸ்ட் 24-26 இல் பிரான்ஸில் நடைபெற்ற போதும் 46 ஆவது மாநாடு கொரோனா வைரஸின் உலகளாவிய பரவல் காரணமாக 2020 இல் வீடியோ மாநாடாக இடம்பெற்றது. G-7 அமைப்பின் அண்மைய தலைமைத்துவம் 2016 இல் ஜப்பான், 2017 இல் இத்தாலி, 2018 இல் கனடா, 2019 இல் பிரான்ஸ், 2020 இல் ஐக்கிய அமெரிக்கா, 2021 இல் பிரித்தானியா என்ற ஒழுங்கில் அமைகிறது.

1977 இல் 3 ஆவது லண்டன் மாநாட்டின் போது 'ஐரோப்பிய சமூகம்' (EC) கலந்து கொண்டது. 1981 இல் கனடாவில் நடைபெற்ற உச்சிமாநாட்டிலிருந்து G-7 அமைப்பின் உச்சிமாநாடுகளின் சகல அரசியல் கலந்துரையாடல்களிலும் 'ஐரோப்பிய ஒன்றியம்' (EU) தொடர்ச்சியாகக் கலந்து கொண்டு வருகிறது.

# 28

## குழு-15 கூட்டமைப்பு (G–15)

(Group of Fifteen)

*ஜீ-15* நாடுகளின் கூட்டமைப்பு (Group of Fifteen) *அபிவிருத்தியடைந்து வரும் 15 ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க, கரீபியன் நாடுகளைக் கொண்டு 1989 செப்டெம்பரில் யூகோஸ்லேவியத் தலைநகர் பெல்கிரேடில் நடைபெற்ற 9 ஆவது அணிசேரா இயக்க உச்சிமாநாட்டின் போது ஆரம்பிக்கப்பட்டது. தற்போது 19 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. 18 ஆவது நாடாக ஈரானும் 19 ஆவது நாடாக கம்போடியாவும் இணைந்து கொண்டன. 2011 இல் பெரு விலகிக்கொண்டதோடு தற்போது 18 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.*

முதலீடு, *வர்த்தகம், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் மத்தியில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதே அமைப்பின் முக்கிய குறிக்கோள்களாகும்.* G–15 *அமைப்பின் 15 ஆவது உச்சிமாநாடு 2012 இல் இலங்கையில் நடைபெற்றது.*

***அங்கத்துவ நாடுகள்***

- *லத்தீன் அமெரிக்க - கரீபியன் நாடுகள் **(6)** - ஆர்ஜென்டீனா, பிரேசில், சிலி, மெக்சிகோ, வெனிசுலா, ஜமைகா*
- *ஆபிரிக்க நாடுகள் **(6)** - அல்ஜீரியா, எகிப்து, கென்யா, நைஜீரியா, செனகல், சிம்பாப்வே*
- *ஆசிய நாடுகள் **(6)** - இந்தியா, இந்தோனேசியா, மலேசியா, இலங்கை, ஈரான், கம்போடியா*

***1998*** *இல் எகிப்தில் நடைபெற்ற **8** ஆவது உச்சி மாநாட்டின் போது G**-15** அமைப்பில் இலங்கை இணைந்து கொண்டது. எனினும் **1999** இல் ஜமைகாவில் நடைபெற்ற **9** ஆவது உச்சி மாநாட்டிலேயே முதன்முறையாக இலங்கை கலந்து கொண்டது. ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக ஜமைகா மாநாட்டில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தினார். ஜமைகா பிரதமர் பீ.ஜே. பட்டேர்ஸன்* Q.C. *தலைமையில் நடைபெற்ற இவ்வுச்சி மாநாட்டில் மூலதனம், வர்த்தகம், தொழில்நுட்பம் போன்ற விடயங்கள் கவனத்திற் கொள்ளப்பட்டன.*

*இவ்வுச்சி மாநாட்டில் **1999** பெப்ரவரி **9 - 14** வரை ஜீ-**15** நாடுகளின் வர்த்தகக் கண்காட்சி இடம்பெற்றது. சுமார் **50** ஆயிரம் சதுர அடி பரப்பளவில் அமைக்கப்பட்டிருந்த இக்கண்காட்சியில் **200** இற்கும் மேற்பட்ட அரச, தனியார் நிறுவனங்கள் பங்களித்திருந்தன. அங்கத்துவ நாடுகளின் வர்த்தக சமூகத்தினரிடையேயும் அரச, தனியார் நிறுவனங்களிடையேயும் கூட்டமைப்பு ரீதியான வர்த்தக, பொருளாதார நடவடிக்கைகளையும் தொடர்புகளையும் பேணுவதற்காக 'வர்த்தக முதலீட்டு மன்றம்'* (Business Investment Forum) *மற்றும் 'முதலீடு, வர்த்தகம், தொழில்நுட்பம் தொடர்பான குழு'* (Committee on Investment, Trade and Technology) *என்பன அமைப்பின் கீழ் தாபிக்கப்பட்டன.*

*ஏனைய சர்வதேச அமைப்புகளைப் போல இக்கூட்டமைப்பில் ஒரு நிருவாகக் கட்டமைப்பு இல்லை. ஒரு 'தொழில்நுட்ப உதவி வசதி'* (Technical Support Facility– TSF) *ஜெனீவாவில்*

அமைந்துள்ளது. TSF குறித்த ஆண்டுக்கான பணிப்பாளரால் இயக்கப்படுகிறது. G–15 தொடர்பான சகல விடயங்களையும் TSF ஒருங்கிணைக்கும்.

G - 15 உச்சிமாநாடுகள்

| Summit | Date | Host country | Host city |
|---|---|---|---|
| 1 | 1–3 June 1990 | Malaysia | Kuala Lumpur |
| 2 | 27–29 November 1991 | Venezuela | Caracas |
| 3 | 21–23 November 1992 | Senegal | Dakar |
| 4 | 28–30 March 1994 | New Delhi | India |
| 5 | 5–7 November 1995 | Argentina | Buenos Aires |
| 6 | 3–5 November 1996 | Zimbabwe | Harare |
| 7 | 28 October – 5 November 1997 | Malaysia | Kuala Lumpur |
| 8 | 11–13 May 1998 | Egypt | Cairo |
| 9 | 10–12 February 1999 | Jamaica | Montego Bay |
| 10 | 19–20 June 2000 | Egypt | Cairo |
| 11 | 30–31 May 2001 | Indonesia | Jakarta |
| 12 | 27–28 February 2004 | Venezuela | Caracas |
| 13 | 14 September 2006 | Cuba | Havana |
| 14 | 17 May 2010 | Iran | Tehran |
| 15 | 2012 | Sri Lanka | Colombo |

# 29

## ஷங்காய் கூட்டுறவு அமைப்பு (SCO)

(Shanghai Cooperation Organisation)

*'ஷங்காய் கூட்டுறவு அமைப்பு'* (SCO) 8 நாடுகளைக் கொண்ட *நிரந்தர அரசாங்கங்களுக்கிடையிலான ஒரு சர்வதேச தாபன மாகும். கஸக்ஸ்தான், சீனா, கிர்கிஸ்தான், றஷ்யா, தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய 6 நாடுகள் அமைப்பைத் தாபிக்க சீனா வின் ஷங்காயில் 2001 ஜூன் 15 இல் உடன்பட்டன. ஏற்கனவே உஸ்பெகிஸ்தான் தவிர்ந்த 5 நாடுகளும்* (Five group) ***1996*** *ஏப்ரல்* ***26*** *இல் சந்தித்ததே அமைப்புருவாக்கத்தின் அடிப்படையாகும்.*

*ஷங்காய் கூட்டுறவு அமைப்பின் சாசனம்* ***2002*** *ஜூனில் அரச தலைவர்களால் கைச்சாத்திடப்பட்டு* ***2003*** செப்டெம்பர் ***19*** இல் *நடைமுறைக்கு வந்தது. அமைப்பின் இலக்குகள், அடிப் படைகள், கட்டமைப்பு, மூல நடவடிக்கைகள் என்பன சாசனத்தில் கூறப்பட்டுள்ளன.* SCO *இன் வரலாற்று ரீதியான உச்சிமாநாடு கஸக்ஸ்தான் தலைநகர் அஸ்தானாவில்* (Astana) ***2017*** *ஜூன்* ***8 - 9*** *இல் நடைபெற்றது. அதன்போது இந்தியாவும் பாகிஸ்தானும்*

அமைப்பில் அங்கத்துவம் பெற்றன.

அங்கத்துவ நாடுகள் மத்தியில் நம்பிக்கையையும் அண்டை நாட்டு உறவுகளையும் கட்டியெழுப்பும் நோக்கில் அரசியல், வர்த்தகம், பொருளாதாரம், ஆராய்ச்சி, தொழில்நுட்பம், கலாசாரம், கல்வி, சக்தி, போக்குவரத்து, சுற்றுலா, சுற்றாடல்பாதுகாப்பு போன்றவற்றிலும் பிராந்தியத்தில் சமாதானம், பாதுகாப்பு, நிலைத்திருப்பைப் பேணவும் உறுதிப்படுத்தவும் கூட்டாக முயற்சி மேற்கொள்ளும் பொருட்டு ஜனநாயகத்தைத் தாபிக்கும் நகர்வு மற்றும் பொது, தேசிய புதிய சர்வதேச அரசியல், பொருளாதார ஒழுங்கு போன்றவற்றிலும் பணியாற்றல் அமைப்பின் பிரதான இலக்குகளாகும்.

அமைப்பின் இறுதி முடிவெடுக்கும் உச்ச அங்கம் 'அரச தலைவர்களின் சபையாகும்' (The Heads of State Council – HSC). வருடத்தில் ஒரு தடவை கூடும். அமைப்பின் 'அரசாங்கத் தலைவர்களின் சபை' (The Heads of Government Council – HGC) வருடத்தில் ஒரு தடவை கூடி பல்தரப்பு ஒத்துழைப்பு நுட்பம் மற்றும் முன்னுரிமை விடயப் பரப்புக்கள் குறித்து கலந்துரையாடுவதுடன் சமகால முக்கிய பொருளாதார, ஒத்துழைப்புப் பிரச்சினைகளைத் தீர்க்கவும் வருடாந்த வரவு - செலவுத் திட்டத்தை அங்கீகரிக்கவும் அதிகாரம் கொண்டுள்ளது.

சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் அமைந்துள்ள தலைமையகம் உஸ்பெகிஸ்தான் தலைநகர் தாஸ்கென்டில் அமைந்துள்ள 'பயங்கரவாத எதிர்ப்புக் கட்டமைப்பின் நிறைவேற்றுக் குழு' (RATS) ஆகியன SCO இன் இரு பிரதான நிரந்தர அங்கங்களாகும். சீனம், றஷ்யன் என்பன அமைப்பின் உத்தியோகபூர்வ மொழிகளாகும்.

ஆப்கானிஸ்தான், பெலாரஸ், ஈரான், மொங்கோலியா ஆகிய 4 பார்வையாளர் நாடுகளையும் (Observer states) அஸர்பைஜான், ஆர்மேனியா, கம்போடியா, நேபாளம், துருக்கி, இலங்கை ஆகிய 6 கலந்துரையாடல் பங்காளர்களையும் (Dialogue partners) அமைப்பு கொண்டுள்ளது.

**அங்கத்துவ நாடுகள்**

| நாடுகள் | சேர்ந்த திகதி |
|---|---|
| *சீனா, கஸக்ஸ்தான், கிர்கிஸ்தான், றஷ்யா, தஜிகிஸ்தான்* | *1996 ஜூன் 26* |
| *உஸ்பெகிஸ்தான்* | *2001 ஜூன் 15* |
| *இந்தியா, பாகிஸ்தான்* | *2017 ஜூன் 9* |

# 30

BRICS
BRAZIL 2019

## பிரிக்ஸ் (BRICS)

(Brazil, Russia, India, China & South Africa)

*2006 இல் தோற்றம் பெற்றது. உலகப் பிரபல்யமிக்க 5 நாடுகள் இதில் அங்கம் வகிக்கின்றன. பிரேசில், றஷ்யா, இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா ஆகிய அங்கத்துவ நாடுகளின் முதல் எழுத் துக்களைக் கொண்டு அமைப்பின் பெயர் அழைக்கப்படுகிறது. ஆரம்பத்தில் 4 அங்கத்துவ நாடுகளுடன்* BRIC *எனவும் பின்னர் 2010 இல் தென்னாபிரிக்கா சேர்ந்ததும்* BRICS *எனவும் அழைக்கப் படலாயிற்று.*

*11 ஆவது பிரிக்ஸ் மாநாடு 2019 இல் பிரேசில் தலைநகர் பிரேசிலியாவில் நடைபெற்றது. உலக சனத்தொகையில் சுமார் 41 வீதத்தையும் உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 23 வீதத்தையும் இந்நாடுகள் கொண்டுள்ளன. இவ்வமைப்பு உருவாக் கத்தின் ஆரம்பகர்த்தா றஷ்யாவாகும்.*

*2014 ஜூலையில் நடைபெற்ற உச்சி மாநாட்டில்* BRICS

நாடுகளுக்கான ஒரு தனியான அபிவிருத்தி வங்கி (The Development Bank) ஆரம்பிக்க முடிவெடுக்கப்பட்டது. அங்கத்துவ நாடுகளின் அடிப்படைக் கட்டமைப்பு வளர்ச்சிக்கு இது உதவுமென எதிர்பார்க்கப்பட்டது. தலைமையகம் சீனாவின் ஷங்காய் நகரில் இருக்கும். தலைவர் இந்தியராக இருப்பார். அனைத்து அங்கத்துவ நாடுகளும் சம பங்களிப்புச் செய்யும்.

முதல் இரு மாநாடுகள் BRIC நாடுகளைக் கொண்டு நடைபெற்றிருக்க அதன் பின்னரான மாநாடுகள் BRICS நாடுகளுடன் நடத்தப்படுகின்றன.

| **Summits** | | | |
|---|---|---|---|
| **1st** | 16 June 2009 | Russia | Yekaterinburg |
| **2nd** | 15 April 2010 | Brazil | Brasília |
| **3rd** | 14 April 2011 | China | Sanya |
| **4th** | 29 March 2012 | India | New Delhi |
| **5th** | 26–27 March 2013 | South Africa | Durban |
| **6th** | 14–17 July 2014 | Brazil | Fortaleza |
| **7th** | 8–9 July 2015 | Russia | Ufa |
| **8th** | 15–16 October 2016 | India | Benaulim |
| **9th** | 3–5 September 2017 | China | Xiamen |
| **10th** | 25–27 July 2018 | South Africa | Johannesburg |
| **11th** | 13–14 November 2019 | Brazil | Brasília |

# 31

## குழு-20 கூட்டமைப்பு (G-20)

(Group of Twenty)

*குழு - **20** என்பது உலகின் மிகப்பெரும் பொருளாதாரங் கொண்ட நாடுகளின் ஒரு சர்வதேச மன்றமாகும். உலகில் **80** வீத பொருளாதார வளத்தையும் (GDP), **75** வீத வர்த்தகத்தை யும் **60** வீத மக்கள் தொகையையும் இவ்வமைப்பு தன்னகத்தே கொண்டுள்ளது. G **20** அமைப்பில் **19** நாடுகளும் ஐரோப்பிய ஒன்றி யமும் அங்கம் வகிக்கின்றன.*

***1997** பொருளாதார, நிதி நெருக்கடியின் போது உலகின் ஏனைய முக்கிய பொருளாதார நாடுகளுடனும் கலந்துரை யாடவென G-7 நிதியமைச்சர்கள் **1999** இல் G-20 ஐ அறிவித்த னர். அதன்படி **1999** செப்டெம்பர் **26** இல் G-20 நாடுகளின் முதலாவது உத்தியோகபூர்வ சந்திப்பு இடம்பெற்றது.*

***2008** நிதி நெருக்கடியின் போது G-20 அரச / அரசாங்கத் தலை வர்களின் சந்திப்புக்கு ஐக்கிய அமெரிக்கா அழைப்பு விடுத்தது.*

2009 Pittsburgh உச்சி மாநாட்டில் G–20 ஐ ஒரு உலகளாவிய பொருளாதார, நிதி ஒத்துழைப்புக்கான பிரதான மன்றமாக நிறுவனமயப்படுத்த முடிவெடுத்தனர். 2010 முதல் வருடாந்தம் G–20 தலைவர்கள் சந்திக்கின்றனர்.

ஆர்ஜென்டீனா, அவுஸ்திரேலியா, பிரேசில், கனடா, சீனா, பிரான்ஸ், ஜேர்மனி, ஜப்பான், இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, மெக்சிகோ, றஷ்யா, தென்னாபிரிக்கா, சவூதி அரேபியா, தென் கொரியா, துருக்கி, பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன G–20 அமைப்பில் அங்கம் வகிக்கின்றன. ஸ்பெயின் ஒரு நிரந்தர விருந்தினராக பங்கு கொள்கிறது.

G–20 அமைப்பிற்கு நிரந்தர அலுவலகமொன்று இல்லை. சுற்று அடிப்படையில் தலைமைத்துவம் வகிக்கும் நாட்டினால் அங்கத்துவ நாடுகளின் ஒத்துழைப்புடன் அமைப்பின் நிகழ்ச்சி நிரலும் செயற்பாடுகளும் கொண்டு செல்லப்படும்.

2009, 2010 இல் வருடத்தில் 2 தடவைகள் சந்தித்தனர். 2011 முதல் வருடத்தில் ஒரு தடவை சந்திப்பு இடம்பெறுகிறது. அமைப்பின் உச்சி மாநாடு 2021 இல் இத்தாலியிலும் 2022 இல் இந்தோனேசியாவிலும் 2023 இல் இந்தியாவிலும் 2024 இல் பிரேசிலிலும் நடைபெற திட்டமிடப்பட்டுள்ளன.

| G-20 Summits | | | |
|---|---|---|---|
| **No.** | **Year** | **Host City** | **Country** |
| 1. | 2008 | Washington D.C. | United States |
| 2. | 2009 | London | United Kingdom |
| 3. | 2009 | Pittsburgh | United States |
| 4. | 2010 | Toronto | Canada |
| 5. | 2010 | Seol | Soth Korea |
| 6. | 2011 | Cannes | France |
| 7. | 2012 | San José del Cabo | Mexico |
| 8. | 2013 | Saint Petersburg | Russia |
| 9. | 2014 | Brisbane | Australia |
| 10. | 2015 | Serik | Turkey |
| 11. | 2016 | Hangzhou | China |
| 12. | 2017 | Humburg | Germany |
| 13. | 2018 | Buenos Aires | Argentina |
| 14. | 2019 | Osaka | Japan |
| 15. | 2020 | Riyadh | Saudi Arabia |

# 32

## மிக்டா (MIKTA)

*மெக்சிகோ, இந்தோனேசியா, தென் கொரியா, துருக்கி, அவுஸ்திரேலியா* (Mexico, Indonesia, Republic of Korea, Turkey, Australia) *ஆகிய 5 நாடுகளின் முதலெழுத்துக்களால்* MIKTA *என அழைக்கப்படும் அமைப்பு ஐ.நா. பொதுச்சபைக் கூட்ட காலத்தில் 2013 செப்டெம்பரில் நியூயோர்க் நகரில் தாபிக் கப்பட்டது. இவை பல் கலாசார, பல் பிராந்திய நாடுகளாகும்.*

*வழமையாக உள்ள முறைசார் அமைப்புகளிலிருந்து வேறு படும் ஒரு முறைசாரா அமைப்பாக* MIKTA *விளங்குவது ஒரு சிறப் பம்சமாகும். ஏனெனில் கூட்டங்கள், நிபுணத்துவக் கருத்தரங் குகள் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் அறிவுத் தொகுதிகளை சர்வதேச சமூகத்துக்கு சமர்ப்பிக்கும் பணியினை இவ்வமைப்பு மேற்கொள்கின்றது.*

*மாற்றமுறும் நவீன உலகின் சவால்களுக்கு முகங்கொடுத்து*

சர்வதேச சமூகத்தின் சுபீட்சம் மற்றும் நிலைபேற்றுக்கு உதவ முன்வருகின்றது. இதற்காக அரசுகளுக்கும் பிராந்திய நிறுவனங் களுக்கும் உதவ விரும்புகிறது. குறிப்பாக சிறந்த ஆட்சி, பயங்க ரவாத எதிர்ப்பு, பாதுகாப்பு, சமாதானம் பேணல், வர்த்தகம், பொரு ளாதாரம், பால்நிலை சமத்துவம், பேண்தகு அபிவிருத்தி போன்ற முக்கிய துறைகளில் MIKTA கவனம் செலுத்துகிறது.

MIKTA நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் வழமையாக சந்தித்துக் கொள்வர். மேலதிகமாக இந்நாடுகள் வருடாந்தம் ஐ.நா. பொதுச்சபையில் தலைவர்கள் கூடும் (Leaders' Week) காலப்பகுதியிலும் G–20 மாநாட்டின் போதும் சந்திக்கின்றனர். **2014** இல் மெக்சிகோவும் **2015** இல் தென் கொரியாவும் **2016** இல் அவுஸ்திரேலியாவும் **2017** இல் துருக்கியும் **2018** இல் இந்தோனே சியாவும் **2019** இல் மெக்சிகோவும் அமைப்புக்குத் தலைமை தாங்கி வந்துள்ளன.

# 33

## பசிபிக் கடந்த பங்காளர் (TPP)

(Trans–Pacific Partnership)

*'பசிபிக் கடந்த உபாயமிகு பொருளாதார பங்காளர்'* (Trans–Pacific Strategic Economic Partnership – TPSEP) or P4) *ஒப்பந்தம் புரூணை, சிலி, நியூசிலாந்து, சிங்கப்பூர் ஆகிய 4 நாடுகளால் 2005 ஒக்டோபர் 5 இல் சிங்கப்பூரில் கைச்சாத்திடப்பட்டது. 2008 ஆரம்பத்தில் அவுஸ்திரேலியா, கனடா, மலேசியா, மெக்சிகோ, பெரு, ஐக்கிய அமெரிக்கா, வியட்நாம் ஆகிய 8 நாடுகளும் இதில் சேர்ந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது.*

*மேற்படி 12 நாடுகளால் 'பசிபிக் கடந்த பங்காளர் ஒப்பந்தம்'* (Trans–Pacific Partnership Agreement) *2016 பெப்ரவரி 4 இல் ஒரு வர்த்தக ஒப்பந்தமாக கைச்சாத்திடப்பட்டு முன்மொழியப்பட்டது. 2017 ஜனவரி 23 இல் ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் தமது நாடு ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக அறிவித்தார்.*

2017 மே மாதம் மிகுதி 11 நாடுகளும் தொடர்ந்து செயற்பட இணங்கி 2018 ஜனவரியில் ஒப்பந்தமொன்றுக்கு வரும் நிலையை அடைந்து 2018 மார்ச்சில் 11 நாடுகளும் Comprehensive and Progressive Agreement for Trans–Pacific Partnership (CPTPP) என்பதன் கீழ் ஒன்றிணைந்தன. இப்புதிய ஒப்பந்தம் 2018 டிசெம்பர் 30 இல் நடைமுறைக்கு வந்தது. எனினும் இன்னும் செயற்பாட்டுக்கு வரவில்லை (Not in use). தலைமையகம் நியூசிலாந்தின் ஒக்லாந்தில் அமைந்திருக்கும்.

# பிராந்திய அரசு சார்பு அமைப்புகள்

| இல. | அமைப்பு | ஆரம்பம் |
|---|---|---|
| 34. | அரபு லீக் (Arab League) | 1945 March |
| 35. | வட அத்லாந்திக் ஒப்பந்த அமைப்பு (NATO) | 1949 April |
| 36. | ஐரோப்பிய ஒன்றியம் (European Union) | 1951 April |
| 37. | அமெரிக்க அரசுகளின் அமைப்பு (OAS) | 1951 December |
| 38. | ஆபிரிக்க ஒன்றியம் (AU) | 1963 May |
| 39. | தென்கிழக்காசிய நாடுகளின் சங்கம் (ASEAN) | 1967 August |
| 40. | கரீபியன் சமூகம் (CARICOM) | 1973 August |
| 41. | கிழக்கு கரீபிய அரசுகளின் அமைப்பு (OECS) | 1981 June |
| 42. | தென்னாசிய பிராந்திய ஒத்துழைப்புக்கான அமைப்பு (SAARC) | 1985 December |
| 43. | ஆசிய - பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு (APEC) | 1989 November |
| 44. | வட அமெரிக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (NAFTA) | 1994 January |
| 45. | கரீபியன் நாடுகளின் சங்கம் (ACS) | 1994 July |
| 46. | மேர்கோஸர் (MERCOSUR) | 1994 December |
| 47. | இந்து சமுத்திர கரையோர சங்கம் (IORA) | 1997 March |
| 48. | பிம்ஸ்டெக் (BIMSTEC) | 1997 June |
| 49. | கருங்கடல் பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பு (BSEC) | 1999 May |
| 50. | எமது அமெரிக்க மக்களுக்கான பொலிவேரியன் கூட்டணி (ALBA) | 2004 December |
| 51. | மத்தியதரை ஒன்றியம் (UfM) | 2008 July |
| 52. | தென் அமெரிக்க நாடுகள் ஒன்றியம் (UNASUR) | 2011 March |
| 53. | பசிபிக் கூட்டணி (Pacific Alliance) | 2011 April |
| 54. | லத்தீன் அமெரிக்க, கரீபியன் நாடுகளின் சமூகம் (CELAC) | 2011 December |

அரசாங்கங்களுக்கிடையிலான பிராந்திய அமைப்புகள் குறித்த கண்டத்தை அல்லது பிராந்தியத்தை அடிப்படையாகக் கொண்டு சமூக, பொருளாதார, வர்த்தக, அரசியல் மற்றும் பிற நோக்கங்களின் நிமித்தம் உருவாக்கப்படு கின்றன.

# 34

## அரபு லீக் (Arab League)

*__1944__ இல்* Alexandria Protocol *இல் ஏற்றுக்கொள்ளப் பட்டதன்படி அரபுலகை மையப்படுத்தி 'அரபு நாடுகளின் லீக்'* (League of Arab States) *என __1945__ மார்ச் __22__ இல் எகிப்து தலை நகர் கெய்ரோவில் தாபிக்கப்பட்டது. ஆபிரிக்க மற்றும் மேற்கு ஆசியாவில் பரந்துள்ள அரபு நாடுகளை அடிப்படையாகக் கொண்டு எகிப்து, ஈராக், ஜோர்தான், லெபனான், சவூதி அரேபியா, சிரியா ஆகிய __6__ நாடுகளைக் கொண்டு இவ்வமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.*

*__1945__ மே __5__ இல் யெமன் அங்கத்துவம் பெற்றது. தற்போது __22__ நாடுகள் அமைப்பில் அங்கம் வகிக்கின்றன. __1979__ இல் எகிப்து ஜனாதிபதி அன்வர் சாதாத் இஸ்ரேலுடன் சமாதான இணக்கப் பாட்டுக்குச் சென்றதால் எகிப்து அமைப்பிலிருந்து நீக்கப்பட்டு மீண்டும் __1989__ இல் சேர்த்துக் கொள்ளப்பட்டது.*

பிராந்திய அரசு சார்பு அமைப்பான அரபு லீக்கின் தலைமை யகம் எகிப்து தலைநகர் கெய்ரோவில் அமைந்துள்ளது. 1964 ஜனவரி முதல் 2019 ஏப்ரல் வரை 36 உச்சி மாநாடுகள் நடைபெற்றுள்ளன. League Council இல் ஒவ்வொரு அங்கத்துவ நாட்டுக்கும் ஒரு வாக்குண்டு. சகல முடிவுகளும் வாக்கெடுப்பில் மேற்கொள்ளப்படுகின்றன.


அங்கத்துவ நாடுகளுக்கிடையில் நெருக்கமான உறவை ஏற்படுத்தல், இந்நாடுகளின் சுதந்திரம், இறைமையைப் பாதுகாக் கும் ஒத்துழைப்பை ஒருங்கிணைத்தல் மற்றும் அரபு நாடுகள் சம்பந்தமான விவகாரங்கள், அக்கறைகளில் கவனமெடுத்தல் என்பன அமைப்பின் முக்கிய இலக்குகளாகும்.

அரபுலகின் அரசியல், பொருளாதார, கலாசார, விஞ்ஞான, சமூகத் திட்டங்களை வடிவமைத்து விருத்தி செய்வதற்கு அரபு லீக் அனுசரணை வழங்குகின்றது. 'இணை அரபு பொருளாதார, நடவடிக்கை சாசனம்' (Joint Arab Economic Action Charter) போன்ற பிராந்தியத்தில் பொருளாதாரத்தை மேம்படுத்தும் திட் டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

1950 ஏப்ரல் 13 இல் 'இணை பாதுகாப்பு, பொருளாதார ஒத்து ழைப்பு' (Joint Defence and Economic Cooperation) கைச்சாத் திடப்பட்டது. 2015 மார்ச்சில் 'இணை அரபுப் படை' (Joint Arab Force) அமைப்பதற்கு அரபு லீக் செயலாளர் நாயகம் அழைப்பு விடுத்திருந்தார். மனித உரிமைகள் பற்றிய அரபு சாசனம் தயாரிக் கப்பட்டு 2004 முதல் சில நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டு வந்துள் ளது. பலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வாக பலஸ்தீன சுதந்திரத்தை வலியுறுத்துகிறது.

அரபு லீக் பனிப்போர் காலத்தில் அதிக சவாலுக்குட்பட்டது. 1956 சுயஸ் கால்வாயை எகிப்து தேசிய உடைமையாக்கியமை, 1958 லெபனான் நெருக்கடி, 1967 இஸ்ரேல் - அரபுலக 6 நாள் யுத் தம், 1990 - 1991 வளைகுடா யுத்தம், 2003 ஈராக் யுத்தம் என்பன தொடர்பாக அரபு லீக் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி

யது. மத்திய கிழக்கு சமாதானத் திட்டத்தை 2020 பெப்ரவரியில் அரபு லீக் மீண்டும் வலிறுத்தியுள்ளது.



# 35

## வட அத்லாந்திக் ஒப்பந்த அமைப்பு (NATO)

(North Atlantic Treaty Organization)

*12 நாடுகளுடன் ஆரம்பிக்கப்பட்ட 'வட அத்லாந்திக் ஒப்பந்த அமைப்பு'* (NATO) *தற்போது 30 அங்கத்துவ நாடுகளைக் கொண்டுள்ளது. இது அரசியல் மற்றும் இராணுவக் கூட்டமைப்பாகும். சுதந்திரம் மற்றும் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தல்* NATO *வின் முக்கிய நோக்கமாகக் குறிப்பிடப்படுகிறது.*

*1949 ஏப்ரல் 4 இல் செய்து கொள்ளப்பட்ட வொஷிங்டன் ஒப்பந்தம்* (the Washington Treaty) *மூலம் இவ்வமைப்பு உருவானது. 14 சரத்துக்களைக் கொண்ட இவ்வொப்பந்தம் 1949 ஓகஸ்ட் 24 இல் நடைமுறைக்கு வந்தது. அமைப்பின் முடிவுகள் இணக்கப்பாட்டு அடிப்படையில் மேற்கொள்ளப்படும். தலைமையகம் பெல்ஜியத்தின் தலைநகர் பிரஸ்ஸல்ஸில் அமைந்துள்ளது.*

*கூட்டுப் பாதுகாப்பு அடிப்படையில் அங்கத்துவ நாடொன்று வேறு நாடுகளால் ஏதேனும் பாதிப்புக்கு - அச்சுறுத்தலுக்கு*

உள்ளாகும் சந்தர்ப்பத்தில் அமைப்பு ரீதியாக கூட்டு நடவடிக்கை மேற்கொள்ள முடியும். குறிப்பாக 2 ஆம் உலக மகா யுத்தத்தின் பின்னர் பனிப்போர் காலத்தில் கொம்யூனிச சோவியத் ரஷ்யா வுக்கு எதிராகவும் கிழக்கு ஐரோப்பாவில் அதன் விரிவாக்கத்தைத் தடுப்பதற்காகவும் மேற்கு ஐரோப்பிய நாடுகளை இணைத்துக் கொண்டு ஐக்கிய அமெரிக்கா உருவாக்கிய தாபனமே நேடோ வாகும்.

1990 இல் சோவியத் ரஷ்யா சீர்குலைந்ததைத் தொடர்ந்து WARSAW அங்கத்துவ நாடுகளும் NATO அமைப்பில் இணைந்து வருகின்றன. 1989 பேர்லின் சுவர் உடைக்கப்பட்டமை NATO விரிவாக்கத்தின் முக்கிய கட்டமாகும். 2001 செப்டெம்பர் 11 ஐக்கிய அமெரிக்கா மீது நடத்தப்பட்ட தாக்குதல் NATO வின் செயற்பாட்டை அவசியமாக்கியது.

1995 இல் Bosnia and Herzegovina வில் முதலாவது நெருக் கடி முகாமைத்துவ நடவடிக்கையில் NATO ஈடுபட்டது. 2003 இல் சர்வதேச பாதுகாப்பு உதவிப்படையை (International Security Assistance Force– ISAF) ஆப்கானிஸ்தானில் நிலை நிறுத்தியது.

2010 இல் நவீன பாதுகாப்பை செயற்பாட்டு ரீதியாக நிச்சயப் படுத்திக் கொள்ளும் மூலோபாயக் கொள்கையை NATO அங்கீக ரித்துக் கொண்டது. இதில் கூட்டுப் பாதுகாப்பு, நெருக்கடி முகா மைத்துவம், ஒத்துழைப்புடனான பாதுகாப்பு என்பன முக்கியம் பெறுகின்றன.

NATO கட்டமைப்பின் சகல நாடுகளும் அங்கம் வகிக்கும் ‘வட அத்திலாந்திக் சபை’ (North Atlantic Council) மிகப் பிரதான மானது. செயலாளர் நாயகம் தலைமை தாங்குகிறார். அங்கத்துவ நாடுகளின் தூதுவர்கள் அல்லது நிரந்தரப் பிரதிநிதிகளை இச்சபை கொண்டிருக்கும். NATO வின் சகல நடவடிக்கைகளை யும் இச்சபை ஒருங்கிணைக்கின்றது.

1966 இல் NATO விலிருந்து வெளியேறிய பிரான்ஸ் 1995 இல்


மீண்டும் சேர்ந்து கொண்டது. அரசியல், பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாக அங்கத்துவமற்ற 40 நாடுகள் நேடோவுடன் பரந்த தொடர்புகளைப் பேணி வருகின்றன.

2019 டிசெம்பர் 3-4 திகதிகளில் அமைப்பின் 70 ஆவது உச்சி மகாநாடு லண்டனில் நடைபெற்றது. உலகில் பாதுகாப்போடு தொடர்பான பல்வேறு விவகாரங்களிலும் குறித்த சில நாடுகளைக் கொண்ட நேடோவின் தன்னிச்சையான தலையீடுகள் குறித்து பல விமர்சனங்கள் உள்ளன.

| அங்கத்துவ நாடுகள் (இணைந்த ஆண்டு) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **1** | Belgium | 1949 | **11** | The United Kingdom | 1949 | **21** | Estonia | 2004 |
| **2** | Canada | 1949 | **12** | The United States | 1949 | **22** | Latvia | 2004 |
| **3** | Denmark | 1949 | **13** | Greece | 1952 | **23** | Lithuania | 2004 |
| **4** | France | 1949 | **14** | Turkey | 1952 | **24** | Romania | 2004 |
| **5** | Iceland | 1949 | **15** | Germany | 1955 | **25** | Slovakia | 2004 |
| **6** | Italy | 1949 | **16** | Spain | 1982 | **26** | Slovenia | 2004 |
| **7** | Luxembourg | 1949 | **17** | Czech Republic | 1999 | **27** | Albania | 2009 |
| **8** | Netherlands | 1949 | **18** | Hungary | 1999 | **28** | Croatia | 2009 |
| **9** | Norway | 1949 | **19** | Poland | 1999 | **29** | Montenegro | 2017 |
| **10** | Portugal | 1949 | **20** | Bulgaria | 2004 | **30** | North Macedonia | 2020 |

| ***Article 5 of the Washington Treaty*** |
|---|
| *NATO is committed to the principle that an attack against one or several of its members is considered as an attack against all* |
| ***This is the principle of collective defence*** |

# 36



## ஐரோப்பிய ஒன்றியம் (EU)

(European Union)

*இரண்டாம் உலக மகா யுத்தத்தில் ஐரோப்பிய நாடுகள் பாரிய மனித மற்றும் பௌதீக அழிவுகளைச் சந்தித்ததன் காரணமாக ஐரோப்பிய ஒருங்கிணைப்பு அவசியமானது. 1950 மே மாதம் 9 ஆம் திகதி பிரான்சிய வெளிவிவகார அமைச்சர்* Robert Schuman *ஐரோப்பிய ஒன்றிணைவு குறித்த கருத்தை முதன்முதலாக வெளி யிட்டார். அதனால் ஒவ்வொரு வருடமும் மே 9 ஆந் திகதி 'ஐரோப்பிய தினம்' கொண்டாடப்படுகிறது.*

*ஆரம்பத்தில் பெல்ஜியம், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, லக்ஸ ம்பேர்க், நெதர்லாந்து ஆகிய 6 நாடுகளைக் கொண்டு ஒப்பந்தங் களின் மூலம் பின்வரும் 3 அமைப்புகள் தோற்றுவிக்கப்பட்டன.*

1. *ஐரோப்பிய நிலக்கரி, உருக்கு சமூகம்* (European Coal and Steel Community) – 1951 Paris
2. *ஐரோப்பிய பொருளாதார சமூகம்* (European Economic

Community) – 1957 Rome

3. *ஐரோப்பிய அணுசக்திச் சமூகம்* (European Atomic Energy Community) – 1957 Rome

*ஐரோப்பிய நிலக்கரி, உருக்கு சமூகமானது வளங்கள், உற்பத்தி, வர்த்தகம் போன்றவற்றை முகாமைத்துவம் செய்வதற்கான தாபனங்களை உருவாக்கவும், ஐரோப்பிய பொருளாதார சமூகமானது பிராந்திய நாடுகளிடையே சமூக, பொருளாதார துறைகளில் சமத்துவத்தை ஏற்படுத்துவதையும் பிரஜைகளின் வாழ்க்கைத் தரத்தை விருத்தி செய்வதையும் நோக்காகக் கொண்டது. ஐரோப்பிய அணுசக்தி சமூகம் அணுசக்தித் துறையில் ஆராய்ச்சி, உற்பத்தி, பாதுகாப்பு என்பவற்றுடன் தொடர்புபட்டதாகும். இம்மூன்று சமூகங்களும் இணைந்து 1967 இல் 'ஐரோப்பிய சமூகம்'*(Europeon Community) *எனப் பெயர் பெற்றது.*

***1973** இல் பிரித்தானியா, அயர்லாந்து, டென்மார்க் ஆகியனவும் **1981** இல் கிரேக்கமும் **1986** இல் ஸ்பெயின், போர்த்துக்கல் என்பனவும் **1992** இல் ஒஸ்ட்ரியா, சுவீடன், பின்லாந்து ஆகியனவும் **2004** இல் சைப்ரஸ், செக் குடியரசு, எஸ்தோனியா, ஹங்கேரி, லத்வியா, லிதுவேனியா, மால்டா, போலாந்து, சுலோவேனியா, சுலோவாகியா ஆகியனவும் **2007** இல் பல்கேரியா, ரொமேனியா ஆகியனவும் **2013** இல் இல் குரோஷியாவும் இக்கூட்டமைப்பில் சேர்ந்து கொண்டன. **2020** ஆம் ஆண்டு பிரித்தானியா அமைப்பிலிருந்து வெளியேறியது. இதன்படி ஐரோப்பிய யூனியனில் தற்போது **27** நாடுகள் அங்கம் வகிக்கின்றன.*

***1992** இல் மாஸ்ட்ரிச் ஒப்பந்தம் மூலம் **1993.11.01** இல் ஐரோப்பிய சமூகம்* (European Community) *'ஐரோப்பிய யூனியன்'* (European Union) *என மாற்றம் பெற்றது. இவ்வொப்பந்தமானது வெளிநாட்டுக் கொள்கை, ஐரோப்பிய பாதுகாப்பு, பொதுமக்கள் சேவை, தனிச் சந்தை, யூரோ தனி நாணயம் போன்றவற்றில் திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. மானுட கௌரவம்* (Human dignity), *சுதந்திரம்* (Freedom), *ஜனநாயகம்* (Democracy), *சமத்துவம்* (Equality), *சட்ட ஆட்சி* (Rule of Law), *மனித உரி*

மைகள் (Human Rights) என்பன ஐரோப்பிய ஒன்றியத்தின் பெறுமானங்களாகும் (Values).

**ஐரோப்பிய ஒன்றியத்தின் இலக்குகள் (Goals)**

1. சமாதானம், அதன் பெறுமானங்கள் மற்றும் பிரஜைகளின் நல்வாழ்வு என்பவற்றை விருத்தி செய்தல்
2. உள்ளக எல்லைகளின்றி சுதந்திரம், பாதுகாப்பு, நீதி வழங்குதல்
3. நிலையான அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட சமநிலையான பொருளாதார வளர்ச்சி, விலையின் ஸ்திரத் தன்மை மற்றும் முழுமையான வேலைவாய்ப்பு, சமூக முன்னேற்றத்துடன் கூடிய உயர் போட்டித் தன்மை வாய்ந்த சந்தைப் பொருளாதாரம் மற்றும் சூழல் பாதுகாப்பு
4. சமூக ஒதுக்கல் மற்றும் பாரபட்சத்துக்கு எதிராகப் போராடுதல்
5. விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றத்தை விருத்தி செய்தல்
6. ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மத்தியில் பொருளாதார, சமூக, ஆள்புல ஒருமையும் ஐக்கியமும்
7. அதன் உயர் கலாசாரத்தையும் பன்மைத்துவத்தையும் மதித்தல்
8. ஒரு பொருளாதார, நாணய ஒன்றியத்தைத் தாபித்தல், அது யூரோ நாணயமாகும்.

ஒவ்வொன்றும் குறித்த பணியினைச் செய்வதற்காக ஐரோப்பிய ஒன்றியம் பின்வரும் 7 நிறுவனங்களைக் (Institutions) கொண்டுள்ளது.

1. ஐரோப்பிய பாராளுமன்றம் (European Parliament)

   (அங்கத்துவ நாட்டு மக்களின் பிரதிநிதிகள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.)

2. ஐரோப்பிய சபை (European Council)

   (அங்கத்துவ நாடுகளின் அரச / அரசாங்கத் தலைவர்களையும் ஆணைக்குழுத் தலைவரையும் கொண்டது.)

3. ஐரோப்பிய ஒன்றிய சபை (Council of the European Union)

*(அங்கத்துவ நாட்டு அரசாங்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்டது.)*

4. *ஐரோப்பிய ஆணைக்குழு* (European Commission)

   *(செயற்பாட்டுப் படையும் நிறைவேற்றுப் பகுதியும்)*

5. *நீதிமன்றம்* (Court of Justice)

   *(செயற்பாடுகளின் சட்டபூர்வத் தன்மையை உறுதிப்படுத்தல்)*

6. *ஐரோப்பிய மத்திய வங்கி* (European Central Bank)

   *(நாணயக் கொள்கை மற்றும் யூரோ முகாமைத்துவத்துக்குப் பொறுப்பு)*

7. *கணக்காய்வாளர் மன்றம்* (Court of Auditors)

   *(ஐரோப்பிய ஒன்றிய வரவு - செலவுத் திட்டக் கட்டுப்பாடும் சட்டப்படியான முகாமைத்துவமும்)*

**ஐரோப்பிய ஒன்றியம் பின்வரும் தாபனங்களையும் கொண்டுள்ளது.**

1. *ஐரோப்பிய முதலீட்டு வங்கி* (European Investment Bank)

   *(முதலீட்டுத் திட்டம் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் அதன் குறிக்கோள்களை அடைய உதவுதல்)*

2. *ஐரோப்பிய பொருளாதார, சமூகக் குழு* (European Economic and Social Committee)

   *(பொருளாதார, சமூகப் பிரச்சினைகள் குறித்து ஒழுங்கமைந்த சிவில் சமூகத்தின் கருத்துக்கள் வெளிப்பாடு)*

3. *பிராந்தியங்களின் குழு* (Committee of the Regions)

   *(பிராந்திய, உள்ளூர் அதிகார சபைகளின் கருத்துக்கள் வெளிப்பாடு)*

*அத்துடன் ஐரோப்பிய ஒன்றிய முறைமையில்* (System) *இன்னும் சில முகவரகங்களும்* (Agencies) *ஏனைய பகுதிகளும்* (Other bodies) *உள்ளன.*

**யூரோ வலயம் (EURO)**

உலகில் பலம் பொருந்திய பிராந்திய பொருளாதார அமைப்பான ஐரோப்பிய யூனியன் உலகில் 2 ஆவது பலமிக்க நாணயமான யூரோ (Euro) நாணயத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கும் 27 நாடுகளில் 19 நாடுகள் யூரோவை ஒரு பொது நாணயமாகப் பயன்படுத்தி வருகின்றன. 2002 இல் யூரோ வங்கித் தாள்களும் குற்றி நாணயங்களும் அறிமுகப்படுத்தப் பட்டன.

1999 – Belgium, Germany, Ireland, Spain, France, Italy, Luxembourg, the Netherlands, Austria, Portugal, and Finland, 2001 – Greece, 2007 – Slovenia, 2008 – Cyprus, Malta, 2009 – Slovakia, 2011 – Estonia, 2014 – Latvia, 2015 – Lithuania



| The Motto of the EU |
| --- |
| United in Diversity |
| வேற்றுமையில் ஒற்றுமை |

நோர்வே, அயர்லாந்து, சுவிட்சர்லாந்து, அல்பேனியா, மெசிடோனியா, மொன்டிநீக்ரோ, ரஷ்யா, துருக்கி ஆகிய ஐரோப்பிய நாடுகள் ஐரோப்பிய யூனியன் அங்கத்துவ நாடுகள் இல்லை.

# 37

# அமெரிக்க அரசுகளின் அமைப்பு (OAS)

(Organization of American States)

*அமெரிக்க தலைநகர் வோஷிங்டன் D.C. இல் **1889** ஒக்டோபர் முதல் **1890** ஏப்ரல் வரை நடைபெற்ற அமெரிக்க அரசுகளின் முதலாவது சர்வதேச மாநாடு வர்த்தக தகவல், விநியோகம் குறித்த அமெரிக்கக் குடியரசுகளின் சர்வதேச ஒன்றியத்தைத் தாபிக்க அனுமதி வழங்கியது. இது மிகப் பழைமைமிக்க சர்வதேச நிறுவன முறைமையாக இருந்தது. பின்னர் Pan American Union ஆக மாற்றப்பட்டது.*

***1923** இல் சிலியின் சந்தியாகோவில் இடம்பெற்ற அமெரிக்க அரசுகளின் **5** ஆவது சர்வதேச மாநாட்டில் அமெரிக்க அரசுகளிடையே முரண்பாடுகளைத் தவிர்த்தல் அல்லது தடுத்தல் தொடர்பான ஒப்பந்தம் மற்றும் **1933** இல் உருகுவேயின் மொன்டிவீடியோவில் இடம்பெற்ற **7** ஆவது மாநாட்டின் அரசுகளின் உரிமைகள், கடமைகள் பற்றிய கூட்டம் என்பன முக்கிய கட்டங்களாகும்.*

இதன் தொடர்ச்சியாக **1948** இல் கொலம்பியாவின் Bogota வில் இடம்பெற்ற **9** ஆவது அமெரிக்க அரசுகளின் சர்வதேச மாநாட்டில் **21** நாடுகளால் கைச்சாத்திடப்பட்ட 'அமெரிக்க அரசுகள் அமைப்பின்' (OAS) சாசனம் (Pact of Bogota) **1951** டிசெம்பரில் நடைமுறைக்கு வந்தது. இச்சாசனம் பின்வரும் திருத்தங்களுக்கு உட்பட்டிருந்தது.

- 1967.02.27 – Protocol of Buenos Aires 1970 பெப்ரவரியிலும்
- 1985.12.05 – Protocol of Cartagena de Indias 1988 நவம்பரிலும்
- 1993.06.10 – Protocol of Managua 1996 ஜனவரியிலும்
- 1992.12.04 – Protocol of Washington 1997 செப்டெம்பரிலும் நடைமுறைக்கு வந்தது.

OAS இன் தலைமையகம் வோஷிங்டன் D.C. இல் அமைந்துள்ளது. OAS சாசனத்தின் முதலாவது விதியில் குறிப்பிடப்பட்டதன்படி அங்கத்துவ நாடுகள் மத்தியில் சமாதானமும் நீதியும் நிலவ ஒற்றுமையை ஊக்குவித்தல், இணைந்திருப்பை பலப்படுத்தல், இறைமையையும் ஆள்புல ஒருமையையும் சுதந்திரத்தையும் பாதுகாத்தல் போன்ற முக்கிய நோக்கங்களுக்காக OAS தாபிக்கப்பட்டுள்ளது.

OAS அமெரிக்கக் கண்டத்திலுள்ள சகல **35** நாடுகளையும் சேர்த்து Hemisphere இல் முக்கிய அரசியல், நீதி, சமூக, அரசாங்க மன்றத்தை (Forum) தாபித்துள்ளது. மேலதிகமாக **69** நாடுகளுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் (EU) நிரந்தர பார்வையாளர் அந்தஸ்து வழங்கியுள்ளது.

OAS ஜனநாயகம், மனித உரிமைகள், பாதுகாப்பு, அபிவிருத்தி ஆகிய **4** பிரதான தூண்களின் அடிப்படையில் செயற்பாடுகளை வினைத்திறன்மிக்கதாக முன்கொண்டு செல்லும் அணுகுமுறையைப் பின்பற்றி வருகின்றது.

| **பனாமா காங்கிரஸ்** (Congress of Panama) – 1826 |
|---|
| இலத்தீன் அமெரிக்காவின் புதிய குடியரசுகளை ஒன்று சேர்க்கும் நோக்கில் 'சிமோன் பொலீவர்' (Simon Bolivar) என்பவரால் 1826 ஜூன் 22 - ஜூலை 15 வரை ஒழுங்குபடுத்தப் பட்ட கூட்டமே OAS அமைப்பின் வித்தாகும். |

| **சிமோன் பொலீவர்** (Simon Bolivar) |
|---|
| ➢ Gran Columbia வின் முதலாவது ஜனாதிபதி<br>➢ பொலீவியாவின் முதலாவது ஜனாதிபதி<br>➢ பெருவின் 6 ஆவது ஜனாதிபதி<br>➢ 3 ஆம் வெனிசுலா குடியரசின் ஜனாதிபதி<br>➢ 2 ஆம் வெனிசுலா குடியரசின் ஜனாதிபதி |

| **Gran Columbia (1819 – 1831)** |
|---|
| கொலம்பியா, ஈக்குவடோர், பனாமா, வெனிசுலா |

# 38

# ஆபிரிக்க ஒன்றியம் (AU)

(African Union)

*ஆபிரிக்கக் கண்டத்திலுள்ள நாடுகளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட 'ஆபிரிக்க ஒன்றியம்'* (African Union) ***55*** *நாடுகளைக் கொண்டது.* ***1963 - 1999*** *கால ஆபிரிக்க ஒற்றுமை அமைப்புக்கு* (Organization of African Unity) *மாற்றீடாக* ***2002*** *இல் 'ஆபிரிக்க ஒன்றியம்'* (AU) *அமைக்கப்பட்டது.*

***1963*** *மே* ***25*** *இல்* ***32*** *ஆபிரிக்க நாட்டுத் தலைவர்கள் எதியோப்பிய தலைநகர் அடிஸ் அபாபாவில் சந்தித்து செய்து கொண்ட ஒப்பந்தப்படி 'ஆபிரிக்க ஒற்றுமை அமைப்பு'* (OAU) *தாபிக்கப்பட்டது. ஒன்றுபட்ட ஆபிரிக்க தேசத்தை கட்டியெழுப்பி ஆபிரிக்கக் கண்டத்தில் அமைதியையும் ஐக்கியத்தையும் வளர்ப்பதன் மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்துவதே அமைப்பின் இலட்சியமாக இருந்தது.*

*ஐக்கியம், சுதந்திரம், சுய தீர்மானம் என்பவற்றின் அடிப்*

படையில் ஆபிரிக்க மக்களுடைய நியாயமான அபிலாஷைகளை அடைந்து கொள்வதற்கு சுதந்திரம், சமத்துவம், நீதி, கண்ணியம் என்பன அத்தியாவசியக் குறிக்கோள்களாக இருக்குமென அமைப்பை உருவாக்கியோர் இணங்கியிருந்தனர்.

ஆபிரிக்க மக்கள் மத்தியில் இன, தேச வேறுபாடுகளுக்கு அப்பால் சகோதரத்துவத்துவம், ஒருமைப்பாடு, புரிந்துணர்வை ஏற்படுத்தவும் கலாசாரம், பொதுப் பாரம்பரியம் என்பவற்றை மேம்படுத்தவும் ஒன்றியத்தின் சாசனம் வலியுறுத்தியுள்ளது. குறிப்பாக குடியேற்றவாதத்தையும் இனவொதுக்கலையும் (Apartheid) ஆபிரிக்கக் கண்டத்திலிருந்து நீக்குதல், இறைமை, ஆள்புல ஒருமையை ஏற்படுத்தல் என்பன சாசனத்தின் முக்கிய அம்சங்களாகும்.

அல்ஜீரியா - மொரோக்கோ (1964), சோமாலியா - கென்யா (1968) எல்லைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் அமைப்பு வெற்றி கண்டது. கினி பிஸ்ஸாஉ, அங்கோலா, மொசாம்பிக் ஆகிய நாடுகள் 1974 இல் போர்த்துக்கலிலிருந்து சுதந்திரம் பெற அமைப்பு உதவியிருந்தது.

மேலும் தென்னாபிரிக்கா, ஸிம்பாப்வே, நமீபியா ஆகிய நாடுகளில் ஆங்கிலேயரின் ஆட்சிக்கெதிராக இயங்கி வந்த இயக்கங்களுக்கு அமைப்பு ஆதரவு வழங்கி வந்தது. ஐ.நா. சபையில் ஆபிரிக்காவின் குரல் ஒன்றுபட்டு ஒலிக்க OAU முக்கிய காரணமாக இருந்தது.

அமைப்பின் பொதுச் செயலாளராக சலீம் அகமட் சலீம் (1989 - 2001) பணியாற்றிய காலம் மிகச்சிறப்பாக இருந்தது. சமூக, பொருளாதார, வர்த்தக, பாதுகாப்பு ரீதியில் ஆபிரிக்க ஒற்றுமை அமைப்பு (OAU) கணிசமானளவு இயங்கி வந்துள்ளது. ஆபிரிக்க ஒற்றுமை அமைப்பின் (OAU) கடைசி செயலாளர் நாயகமாக Amara Essy (2001 – 2002) கடமையாற்றினார்.

எனினும் முழு ஆபிரிக்கக் கண்டத்திற்குமான ஒரு பலமிக்க சக்தியாக செயற்படவும் நவீன காலத்துக்கு முகங்கொடுக்கவும்

முடியாத நிலை ஏற்பட்டது. அங்கோலா விவகாரம் (1974), ஸயர் மீதான அங்கோலத் தாக்குதல் (1977), எதியோப்பியா மீதான சோமாலியப் படையெடுப்பு (1978), உகண்டா - தன்சானியா நெருக்கடி (1978) போன்றவற்றை சமாதான வழியில் முடிவுக்குக் கொண்டுவர அமைப்பினால் முடியவில்லை. அத்துடன் உலக மயமாதல் நெருக்கடியும் முக்கிய ஒன்றாக இருந்தது.

இதனால் 1999.09.09 இல் லிபியாவின் Sirte இல் கூடிய ஆபிரிக்க ஒற்றுமை அமைப்பு (OAU) 'Sirte Declaration' மூலம் ஆபிரிக்க ஒன்றியத்தை (AU) தாபிக்க அழைப்பு விடுத்தது. உலகளாவிய பொருளாதாரத்தில் சரியான பாத்திரத்தை வகிக்கவும் பல்வேறு வகையான சமூக, பொருளாதார, அரசியல் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கவும் இது அவசியமாக இருந்தது.

1999 செப்டெம்பர் 09 தீர்மானத்தின்படியும் 2001 மே 26 அடிஸ் அபாபா உறுதிமொழியின்படியும் 2002 ஜூலை 09 இல் தென்னாபிரிக்காவின் டர்பனில் 'ஆபிரிக்க ஒன்றியம்' (AU) உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

**ஆபிரிக்க ஒன்றியத்தின் தீர்மானம் மேற்கொள்ளும் பிரதான அங்கங்கள் வருமாறு.**

1. அரச / அரசாங்கத் தலைவர்கள் பேரவை (The Assembly of Heads of State and Government)
2. நிறைவேற்று சபை (The Executive Council)
3. பாராளுமன்ற பிரதிநிதிகள் குழு (The Parliament Represen tatives Committee) (PRC)
4. விசேடத்துவ தொழில்நுட்பக் குழுக்கள் (The Specialised Technical Committees) (STCs)
5. சமாதானம் மற்றும் பாதுகாப்புச் சபை (The Peace and Se curity Council)
6. ஆபிரிக்க ஒன்றிய ஆணைக்குழு (The African Union Commi ssion)

ஆபிரிக்கா முழுவதற்குமான பாராளுமன்றம் (Pan-African Parliament) மற்றும் பொருளாதார, சமூக, கலாசார சபையின் (ECOSOCC) மூலம் ஆபிரிக்க பிரஜைகள் மற்றும் சிவில் சமூகம் பங்காற்ற ஆபிரிக்க ஒன்றியக் கட்டமைப்பு ஊக்குவிக்கின்றது.

**Chairpersons of the African Union**

| Name | Beginning of term | End of term | Country |
|---|---|---|---|
| Thabo Mbeki | 9 July 2002 | 10 July 2003 | South Africa |
| Joaquim Chissano | 10 July 2003 | 6 July 2004 | Mozambique |
| Olusegun Obasanjo | 6 July 2004 | 24 January 2006 | Nigeria |
| Denis Sassou-Nguesso | 24 January 2006 | 24 January 2007 | Republic of the Congo |
| John Kufuor | 30 January 2007 | 31 January 2008 | Ghana |
| Jakaya Kikwete | 31 January 2008 | 2 February 2009 | Tanzania |
| Muammar al-Gaddafi | 2 February 2009 | 31 January 2010 | Libya |
| Bingu wa Mutharika | 31 January 2010 | 31 January 2011 | Malawi |
| Teodoro Obiang Nguema Mbasogo | 31 January 2011 | 29 January 2012 | Equatorial Guinea |
| Yayi Boni | 29 January 2012 | 27 January 2013 | Benin |
| Hailemariam Desalegn | 27 January 2013 | 30 January 2014 | Ethiopia |
| Mohamed Ould Abdel Aziz | 30 January 2014 | 30 January 2015 | Mauritania |
| Robert Mugabe | 30 January 2015 | 30 January 2016 | Zimbabwe |
| Idriss Déby | 30 January 2016 | 30 January 2017 | Chad |
| Alpha Condé | 30 January 2017 | 28 January 2018 | Guinea |
| Paul Kagame | 28 January 2018 | 10 February 2019 | Rwanda |
| Abdel Fattah el-Sisi | 10 February 2019 | 10 February 2020 | Egypt |
| Cyril Ramaphosa | 10 February 2020 | *Incumbent* | South Africa |

The AU is guided by its vision of ***"An Integrated, Prosperous and Peaceful Africa, driven by its own citizens and representing a dynamic force in the global arena."***

| |
|---|
| **Motto:**- "A United and Strong Africa" |
| **Anthem:**- "Let Us All Unite and Celebrate Together" |

# 39

## தென்கிழக்காசிய நாடுகளின் சங்கம் (ASEAN)

(Association of South East Asian Nations)

தென்கிழக்காசிய நாடுகளின் சங்கம் 1967 ஆகஸ்ட் 8 ஆந் திகதி தாய்லாந்தின் தலைநகர் பேங்கொக்கில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய 5 நாடுகளால் ஆரம்பிக்கப்பட்ட இவ்வமைப்பில் புரூணை, வியட்னாம், லாவோஸ், மியன்மார், கம்போடியா ஆகிய 5 நாடுகள் பின்னர் சேர்ந்து கொண்டதோடு தற்போது 10 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இதுவொரு பிராந்திய அரசு சார்பு அமைப்பாகும். தலைமை அலுவலகம் இந்தோனேசிய தலைநகர் ஜகார்த்தாவில் அமைந்துள்ளது.

இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய் லாந்து ஆகிய 5 நாடுகள் 1967 ஒகஸ்ட் 8, புரூணை 1984 ஜனவரி 7, வியட்னாம் 1995 ஜூலை 28, லாவோஸ், மியன்மார் ஆகியன 1997 ஜூலை 23, கம்போடியா 1999 ஏப்ரல் 30 திகதிகளில் ASEAN அமைப்பில் அங்கத்துவம் பெற்றன.

### நோக்கங்களும் குறிக்கோள்களும் (Aims and Objectives)

1. தென்கிழக்காசிய நாடுகளில் அமைதியானதும் சுபீட்சமானது மான ஒரு சமூகத்தை கட்டியெழுப்பி பலப்படுத்துமுகமாக சமத்துவம் மற்றும் பங்களிப்பிலான கூட்டு முயற்சியின் மூலம் பிராந்தியத்தில் பொருளாதார வளர்ச்சி, சமூக முன்னேற்றம், கலாசார அபிவிருத்தி என்பவற்றை துரிதப்படுத்தல்

2. ஐ.நா. சாசனத்தின் அடிப்படைகளை கண்டிப்பாகக் கடைப் பிடித்தல் மற்றும் பிராந்திய நாடுகள் மத்தியில் நீதியையும் சட்டவாட்சியையும் பின்பற்றுவதன் மூலம் பிராந்திய சமாதா னம் மற்றும் ஸ்திரத்தன்மையை மேம்படுத்தல்

3. பொருளாதார, சமூக, கலாசார, தொழில்நுட்ப, விஞ்ஞான மற்றும் நிருவாகம் போன்ற பொது அக்கறையுள்ள விடயங் களில் பரஸ்பர உதவியையும் செயலாக்கமிக்க பங்களிப்பை யும் மேம்படுத்தல்

4. கல்வி, தொழில்வாண்மை, தொழில்நுட்ப மற்றும் நிருவாகத்து றைகளில் பயிற்சி, ஆராய்ச்சி வசதிகளுக்கு உதவி வழங்குதல்

5. விவசாயம், கைத்தொழில் துறைகளின் அதிக பயன்பாட் டிற்கும் சர்வதேச ரீதியான முக்கிய வர்த்தகப் பிரச்சினைகளை ஆராய்தல் உட்பட அவற்றின் வர்த்தக விரிவாக்கத்துக்கும் போக்குவரத்து, தொடர்பாடல் போன்ற வசதிகளை முன்னேற் றுவதற்கும் அவை சார்ந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் பயன்மிக்க பங்களிப்பைச் செலுத்துதல்

6. தென்கிழக்காசிய கல்வித்துறையை மேம்படுத்தல்

7. இதனை ஒத்த நோக்கங்களையும் குறிக்கோள்களையும் கொண் டியங்கும் சர்வதேச - பிராந்திய அமைப்புகளுடன் நெருக்கமா னதும் நன்மை அடிப்படையிலானதுமான ஒத்துழைப்பைப் பேணுதலும் அவற்றிற்கிடையே நெருக்கமான ஒத்துழைப்பைப் பேண எல்லா வழிவகைகளை கண்டறிதலும்

ஆசியான் அமைப்பு 'ஆசியான் அரசியல் பாதுகாப்பு சமூகம்' (ASEAN Political – Security Community – (APSC), 'ஆசியான் பொருளாதார சமூகம்' (ASEAN Economic Community– (AEC) 'ஆசியான் சமூக - கலாசார சமூகம்' (ASEAN Socio– Community– (ASCC) ஆகியவற்றைக் கொண்ட ஆசியான் சமூகத்தை 2015 ஆம் ஆண்டளவில் (ASEAN Community) (AC15) உருவாக்க எதிர் பார்த்தது. இதன் தொடர் 2025 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது (ASEAN Community Vision 2025). ஆசியான் சமூகத்தின் இம்மூன்று தூண்களின் மூலம் எதிர்காலத்தில் ஆசியான் நாட்டு மக்கள் ஒன்றுபட்ட சமூகமாகப் பயணிப்பதற்கான பாதையை வகுத்துக் கொள்வது முக்கிய நோக்கமாகும்.

| ASEAN Summits | | | |
|---|---|---|---|
| **No.** | **Date** | **Country** | **Host City** |
| **1.** | 23–24 February 1976 | Indonesia | Bali |
| **2.** | 4–5 August 1977 | Malaysia | Kuala Lumpur |
| **3.** | 14–15 December 1987 | Philippines | Manila |
| **4.** | 27– 29 January 1992 | Singapore | Singapore |
| **5.** | 14– 15 December 1995 | Thailand | Bangkok |
| **6.** | 15– 16 December 1998 | Vietnam | Hanoi |
| **7.** | 5– 6 November 2001 | Brunei | Bandar Seri Begawan |
| **8.** | 4– 5 November 2002 | Cambodia | Phnom Penh |
| **9.** | 7– 8 October 2003 | Indonesia | Bali |
| **10.** | 29– 30 November 2004 | Laos | Vientiane |
| **11.** | 12– 14 December 2005 | Malaysia | Kuala Lumpur |
| **12.** | 9– 15 January 2007 | Philippines | Cebu |
| **13.** | 18– 22 November 2007 | Singapore | Singapore |
| **14.** | 26 February–1 March 2009 | Thailand | Cha-am |
| **15.** | 23–25 April 2009 | Thailand | Cha-am and Hua Hin |
| **16.** | 8–9 April 2010 | Vietnam | Hanoi |
| **17.** | 28-30 October 2010 | Vietnam | Hanoi |
| **18.** | 7–8 May 2011 | Indonesia | Jakarta |
| **19.** | 14–19 November 2011 | Indonesia | Bali |
| **20.** | 3-4 April 2012 | Cambodia | Phnom Penh |
| **21.** | 18 November 2012 | Cambodia | Phnom Penh |
| **22.** | 24–25 April 2013 | Brunei | Bandar Seri Begawan |
| **23.** | 9–10 October 2013 | Brunei | Bandar Seri Begawan |
| **24.** | 10–11 May 2014 | Myanmar | Nay Pyi Taw |
| **25.** | 11–13 November 2014 | Myanmar | Nay Pyi Taw |
| **26.** | 26– 28 April 2015 | Malaysia | Kuala Lumpur and Langkawi |
| **27.** | 18–22 November 2015 | Malaysia | Kuala Lumpur |
| **28.** | 6–8 September 2016 | Laos | Vientiane |
| **29.** | 6–8 September 2016 | Laos | Vientiane |
| **30.** | 26–29 April 2017 | Philippines | Manila |

| | | | |
|---|---|---|---|
| **31.** | 13–14 November 2017 | Philippines | Manila |
| **32.** | 27–28 April 2018 | Singapore | Singapore |
| **33.** | 11–15 November 2018 | Singapore | Singapore |
| **34.** | 20–23 June 2019 | Thailand | Bangkok |
| **35.** | 1–4 November 2019 | Thailand | Bangkok |
| **36.** | 26 June 2020 | Vietnam | Hanoi |

# 40

## கரீபியன் சமூகம் (CARICOM)

(Caribbean Community)

*'கரீபியன் சமூகம்'* (CARICOM) *15 அங்கத்துவ நாடுகளை யும் 5 இணை அங்கத்துவத்தையும் கொண்டது. கரீபியன் பிராந் தியம் பல்லின, பன்மொழி மக்களையும் அபிவிருத்தியடைந்து வருகின்ற- நிலப்பரப்பிலும் சனத்தொகையிலும் சிறியனவாக வுள்ள நாடுகளையும் கொண்டது. அமைப்பின் தலைமைச் செயல கம்* Guyana *வின்* Georgetown *இல் அமைந்துள்ளது.*

*கரீபியன் சமூகத்தைத் தாபிக்கும் முன்மொழிவை* Trinidad & Tobago *அரசாங்கமே முதன் முதலில் வெளியிட்டது. 1973 ஜூலை 4 இல் 4 நாடுகளால்* Trinidad & Tobago *வில் கைச்சாத் திடப்பட்ட* Treaty of Chaguaramas *மூலம் 'கரீபியன் சமூகம் மற்றும் பொதுச் சந்தை'* (Caribbean Community and Common Market - CARICOM) *நடைமுறைக்கு வந்தது. இத்தினம்* CARI COM Day *என கொண்டாடப்படுகிறது. இவ்வொப்பந்தம் 1973 ஒகஸ்டில் நடைமுறைக்கு வந்தது.*

2001 ஜூலை 5 இல் The Bahamas இன் Nassau வில் இடம் பெற்ற 22 ஆவது CARICOM மாநாட்டில் இவ்வொப்பந்தம் புதுப்பிக்கப்பட்டு ஒரு தனிச் சந்தையும் தனிப் பொருளாதாரமும் (CARICOM Single Market & Economy–CSME) தாபிக்கப்பட்டது. 25 நிறுவனங்களையும் 7 இணை நிறுவனங்களையும் கரிகொம் கொண்டுள்ளது.

1958 - 1962 காலப்பகுதியில் செயற்பட்டு வந்த 'பிரித்தானிய மேற்கிந்திய சம்மேளனம்' (British West Indies Federation) மற்றும் அதன் பின்னர் 1965 டிசெம்பரில் தாபிக்கப்பட்டு 1968 மே 1 இல் நடைமுறைக்கு வந்த 'கரீபியன் சுதந்திர வர்த்தக சங்கம்' (Caribbean Free Trade Association–CARIFTA) ஆகியன கரீபியன் சமூக உருவாக்கத்தின் ஆரம்ப வித்துகளாகும்.

1972 ஒக்டோபரில் இடம்பெற்ற CARIFTA அமைப்பின் 7 ஆவது அரசாங்கத் தலைவர்களின் மாநாட்டில் ஒரு பொதுச் சந்தையை யும் கரீபியன் சமூகத்தையும் (CARICOM) தாபிப்பதன் மூலம் CARIFTA ஐ மாற்றியமைக்க முடிவு செய்யப்பட்டது. 8 ஆவது CARIFTA மாநாடு 1973 ஏப்ரலில் Guyana வின் Georgetown இல் இடம்பெற்ற போது CARIFTA வின் 11 அங்கத்துவ நாடுகளும் CARICOM இன் சட்ட ரீதியான ஆவணம் குறித்து முடிவு செய்தனர்.

பொருளாதார ஒருங்கிணைப்பு, வெளிநாட்டுக் கொள்கை ஒத்து ழைப்பு, மானிட - சமூக அபிவிருத்தி, பாதுகாப்பு ஆகிய 4 பிரதான தூண்களால் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. ஐக்கியம், நியாயம், ஒருங்கிணைப்பு, மக்கள் மையம், நல்லாட்சி, சிறந்த சூழல் முகாமை ஆகிய செயற்பாடுகள் கரீபியன் சமூகத்தின் மூலப் பெறுமானங் களாக (Core Values) குறிப்பிடப்படுகின்றன.

குறிப்பாக கரிகொம் அங்கத்துவ நாடுகள் மத்தியில் வர்த்தக இணக்கப்பாட்டையும் ஒத்துழைப்பையும் பேணுவது அமைப்பின் அடிப்படை நோக்கமாகும். இதில் நியாயமான பரிமாற்றங்களை யும் வெளியுறவுக் கொள்கையையும் விருத்தி செய்து கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

கியூபாவுடன் நெருங்கிய உள்ளக அரசியல் உறவை கரிகொம் கொண்டுள்ளது. **2017** இல் 'கரிகொம்- கியூபா வர்த்தக, பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம்' (CARICOM – Cuba Trade and Economic Cooperation Agreement) கைச்சாத்திடப்பட்டது. 'கரீபியன் நாடுகளின் சங்கம்' (Association of Caribbean States– ACS) உருவாக கரிகொம் காரணமாக இருந்தது. **1989** இல் கரிகொம் தலைவர்களால் ஆரம்பிக்கப்பட்ட 'மேற்கிந்திய ஆணைக்குழுவின்' (West Indies Commission) சிபாரிசினால் ACS தாபிக்கப்பட்டது.

| Member States & Associate Members (CARICOM) | | | | |
|---|---|---|---|---|
| **No.** | **Member States** | **Admission Date** | **More Developed Countries (MDC)** | **Less Developed Countries (LDC)** |
| **1.** | Antigua & Barbuda | 1974 May 1 | | ✓ |
| **2.** | Bahamas | 1983 July 4 | ✓ | |
| **3.** | Barbados | 1973 July 4 | ✓ | |
| **4.** | Belize | 1974 May 1 | | ✓ |
| **5.** | Dominica | 1974 May 1 | | ✓ |
| **6.** | Grenada | 1974 May 1 | | ✓ |
| **7.** | Guyana | 1973 July 4 | ✓ | |
| **8.** | Haiti | 2002 July 3 | | ✓ |
| **9.** | Jamaica | 1973 July 4 | ✓ | |
| **10.** | Montserrat | 1974 May 1 | | ✓ |
| **11.** | Saint Lucia | 1974 May 1 | | ✓ |
| **12.** | St Kitts & Nevis | 1974 May 1 | | ✓ |
| **13.** | St Vincent & Grenadines | 1974 May 1 | | ✓ |
| **14.** | Suriname | 1995 July 4 | ✓ | |
| **15.** | Trinidad & Tobago | 1973 July 4 | ✓ | |
| | **Associate Members** | | | |
| **1.** | Anguilla | 1999 July | | |
| **2.** | Bermuda | 2003 July 2 | | |
| **3.** | British Virgin Islands | 1991 July | | |
| **4.** | Cayman Islands | 2002 May 16 | | |
| **5.** | Turks & Caicos Islands | 1991 July | | |

| Milestone of CARICOM | | |
|---|---|---|
| West Indies Federation | 1958.01.03 | 1962.05.31 |
| CARIFTA | 1965 | 1972 |
| CARICOM | 1973.08.01 | Up to now |

## மேற்கிந்திய சம்மேளனம்
### (The West Indies Federation)



*1958 முதல் 1962 வரை நடைமுறையிலிருந்த மேற்கிந்திய சம்மேளனம்* Antigua - Barbuda, Barbados, Dominica, Grenada, Jamaica, Montserrat, St Kitts – Nevis – Anguilla, Saint Lucia, St Vincent, Trinidad and Tobago *ஆகிய 10 நிலப்பிராந்தியங்களைக் கொண்டு அமைக்கப்பட்டது. 1956 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் கரீபியன் சம்மேளன சட்டத்தின்படி* (the British Caribbean Federation Act of 1956) *அங்கத்துவப் பிராந்தியங்களை ஒன்றிணைத்து ஒரு அரசியல் ஒன்றியத்தை* (Political Union) *தாபிப்பதே இச்சட்டத்தின் நோக்கமாகும்.*

*சமஷ்டி மாதிரியிலான இவ்வரசாங்கத்திற்கு பிரித்தானிய அரசினால் ஒரு நிறைவேற்று ஆளுநர் நாயகம் நியமிக்கப்பட்டிருந்தார். 1958 ஏப்ரல் 22 இல்* Trinidad & Tobago *வின்* Port of Spain *இல் மேற்கிந்திய சமஷ்டி சட்டமன்றம் இளவரசி மார்க்ரட்டினால் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. பிரதிநிதிகள் சபையினால்* (House of Representatives) *பிரதமர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டார். பிரதமரையும் அவரால் தெரிவு செய்யப்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர்களையும் கொண்டதாக ஒரு அமைச்சரவை அமைக்கப்பட்டது.*

*அரச சபை* (Council of States) *ஆளுநர் நாயகத்தால் தலைமை தாங்கப்பட்டது. இச்சபை பிரதமரையும் அமைச்சர்களையும் ஆளுநர் நாயகம் தெரிவு செய்யும் 3 செனட் சபை உறுப்பினர்கள், 3 சிவில் சேவையாளர்களையும் கொண்டிருந்தது. இச்சபையே*

தீர்மானமெடுக்கும் பிரதான அங்கமாக இருந்தது. எனினும் 1960 இல் பிரித்தானியா இச்சபையைக் கலைத்துவிட்டு இதன் அதிகாரங்கள் முழுவதையும் அமைச்சரவைக்கு வழங்கியது.

பிரதிநிதிகள் சபை பிராந்தியங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 45 அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது. செனட் சபை (Senate) பிரதமரின் கலந்தாலோசனையுடன் ஆளுநர் நாயகத்தினால் நியமிக்கப்படும் 19 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. இச்சம்மேளனத்தில் வரி அறவீடு, அபிவிருத்தி குறித்த மத்திய திட்டமிடல், ஒரு பிராந்திய சுங்க ஒன்றியத்தைத் தாபித்தல், சமஷ்டி யாப்பு சீர்திருத்தம் போன்ற பல அடிப்படைப் பிரச்சினைகள் காணப்பட்டிருந்தன.

1961 இல் ஜமைகாவில் நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பில் பெரும்பான்மையான மக்கள் சம்மேளனத்திலிருந்து விலக வாக்களித்ததால் மிகப்பெரும் அங்கத்துவப் பிராந்தியம் பிரித்தானியாவிலிருந்து சுதந்திர நாடாகும் நிலைக்கு வந்தது. தொடர்ந்து Trinidad & Tobago வும் சம்மேளனத்திலிருந்து விலகத் தீர்மானித்தது. 1962 ஜனவரியில் சம்மேளனம் உடைந்து போனது.

| | |
|---|---|
| ஆளுநர் நாயகம் | Lord Hailes of Britain |
| பிரதமர் | Sir Grantley Adams (Premier of Barbados) |
| சமஷ்டி தலைநகரம் | Port of Spain |

# 41

# கிழக்கு கரீபிய அரசுகளின் அமைப்பு (OECS)

Organisation of Eastern Caribbean States

கிழக்குக் கரீபியன் பிராந்திய ஒருங்கிணைப்புக்காக 'கிழக்குக் கரீபியன் நாடுகளின் அமைப்பு' (OECS) St. Kitts and Nevis இன் தலைநகரில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் (Treaty of Basseterre) மூலம் 1981 ஜூன் 18 இல் தாபிக்கப்பட்டது. அங்கத்துவ நாடுகள் மத்தியில் ஐக்கியம், ஒற்றுமைக்கு ஒத்துழைப்பு வழங்கவும் அவற்றை மேம்படுத்தவும் இந்நாடுகள் உடன்பட்டுள்ளன.

2010 ஜூன் 18 இல் இடம்பெற்ற அதிகார சபையின் (Authority) 51 ஆவது கூட்டம் St. Lucia வில் இடம்பெற்ற போது இவ்வொப்பந்தம் திருத்தியமைக்கப்பட்டது. சுங்கத் தீர்வையை குறைக்கவும் நீக்கவும் பொருளாதாரத் தடைகளை அகற்றவும் பொருட்கள், மக்கள், முதலீடு போன்றவற்றின் சுதந்திர நகர்வுக்கான ஒரு தனியான நிதி, பொருளாதார உருவாக்கத்துக்கும் இத்திருத்தம் உதவுகிறது. வர்த்தகம், சுகாதாரம், கல்வி, சுற்றாடல், விவசாயம்,

சுற்றுலா, சக்தி போன்றவற்றில் ஒரு பொது அணுகுமுறையைப் பின்பற்றவும் அங்கத்துவ நாடுகள் உடன்பட்டுள்ளன.

இவ்வமைப்பில் கிழக்குக் கரீபியனைச் சுற்றிப் பரந்துள்ள 11 தீவு நாடுகள் அங்கம் வகிக்கின்றன. அவற்றில் 7 நாடுகள் நடைமுறை அங்கத்துவ நாடுகளாகவும் (Protocol Members) 4 நாடுகள் இணை அங்கத்துவ நாடுகளாகவும் (Associate Members) அந்தஸ்து பெறு கின்றன. அமைப்பின் அதிக நடவடிக்கைகளை 7 அடிப்படை அங்கத்துவ நாடுகளே முன்கொண்டு செல்கின்றன.

| **OESC Member States** | | | | | |
|---|---|---|---|---|---|
| **Leeward Island** | | **Protocol Members** | **Associate Members** | **Overseas Members** | |
| | | | | **UK** | **France** |
| **1.** | Antigua and Barbuda | ✓ | | | |
| **2.** | St. Kitts and Nevis | ✓ | | | |
| **3.** | Montserrat | ✓ | | ✓ | |
| **4.** | Anguilla | | ✓ | ✓ | |
| **5.** | British Virgin Island | | ✓ | ✓ | |
| **Windward Island** | | | | | |
| **6.** | Commonwealth of Dominica | ✓ | | | |
| **7.** | St. Lucia | ✓ | | | |
| **8.** | St. Vincent | ✓ | | | |
| **9.** | The Grenadines and Grenada | ✓ | | | |
| **10.** | Martinique | | ✓ | | ✓ |
| **11.** | Guadeloupe | | ✓ | | ✓ |

# 42

## ‘தென்னாசிய பிராந்திய ஒத்துழைப்பு அமையம்’ (SAARC)

(South Asian Association for Regional Co-operation)

‘தென்னாசிய பிராந்திய ஒத்துழைப்பு அமையம்’ (South Asian Association for Regional Co–operation) எனும் ‘சார்க்’ அமைப்பு, 1985 டிசம்பர் 8 ஆந் திகதி பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் ஆரம்பிக்கப்பட்டது. இதுவொரு பிராந்திய அரசு சார்பு அமைப்பாகும்.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலைதீவு, நேபாளம், பூட்டான் ஆகிய 7 நாடுகளுடன் ஆரம்பிக்கப்பட்ட சார்க் அமைப்பில் பின்னர் ஆப்கானிஸ்தான் இணைந்ததோடு தற்போது 8 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. சார்க் அமைப்பின் 18 ஆவது உச்சி மாநாடு 2014 நவம்பர் 26-27 ஆம் திகதிகளில் நேபாளத்தின் தலைநகர் காத்மண்டில் நடைபெற்றது. சார்க் செயலகம் 1987 இல் காத்மண்டில் திறக்கப்பட்டுள்ளது.

1980 களில் தென்னாசிய பிராந்திய கூட்டுறவு பற்றிய தோற்றப்

பாடுகள் அதிகரிக்கலாயிற்று. 1977 - 1980 கால கட்டத்தில் மறைந்த பங்களாதேஷ் ஜனாதிபதி 'ஸியாஉர்ரஹ்மான்' பிராந்திய ஒத்துழைப்பு, ஒருமைப்பாடு பற்றிய சிந்தனையை இப்பிராந்திய நாடுகள் மத்தியில் உருவாக்கப் பாடுபட்டார்.

1980 மே 2 இல் பிராந்திய கூட்டுறவை விரும்பும் ஒருவர் என்ற வகையில் ஸியாஉர்ரஹ்மான் பிராந்தியத்திலுள்ள இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளுக்கு பிராந்திய ஐக்கியம், நல்லுறவுக்கான சாத்தியப்பாடு கள் பற்றியும் அவற்றை வலுப்படுத்தும் மாநாட்டு சந்திப்புக்கான வழிவகைகள் பற்றியுமான முன்மொழிவை வெளியிட்டார். 'சார்க்' அமைப்பு உருவாக்கப்பட்ட போது ஸியாஉர்ரஹ்மான் உயிருடன் இல்லாவிட்டாலும் அமைப்பின் ஸ்தாபகராக அவர் நினைவு கூறப்படுகிறார்.

1981 ஏப்ரல் 21-23 வரை தென்னாசியாவின் மேற்படி 7 நாடு களின் வெளிநாட்டமைச்சின் செயலாளர்களும் கொழும்பில் கூடினர். அதில் கூட்டுறவுக்கென விவசாயம், கிராமிய அபிவி ருத்தி, தொலைத் தொடர்புகள், வானிலையியல், சுகாதாரமும் சனத்தொகை நடவடிக்கைகளும் ஆகிய 5 துறைகள் இனங்கா ணப்பட்டன.

அத்துடன் கூட்டுறவுக்கென புதிய அம்சங்களை இனங்காண வென குழுக்களும் ஏற்படுத்தப்பட்டன. 1981 நவம்பர் 2 - 4 வரை காத்மண்டில் இடம்பெற்ற வெளிநாட்டுச் செயலாளர்களின் 2 ஆவது சந்திப்பில் போக்குவரத்து, அஞ்சல் சேவைகள், விஞ்ஞான தொழில்நுட்பக் ஒத்துழைப்பு ஆகிய 3 புதிய துறைகள் அடை யாளப்படுத்தப்பட்டன.

அடுத்து வெளிநாட்டுச் செயலாளர்களின் 3 ஆவது சந்திப்பு 1982 ஒகஸ்ட் 7-8 வரை இஸ்லாமாபாத்தில் நடைபெற்றது. அதில் விளையாட்டு - கலை - கலாசாரம் எனும் ஒரு துறை இனங்கா ணப்பட்டது. மேலும் கல்வி, பெண்களும் அபிவிருத்தியும், போதைப் பொருள் கடத்தலையும் துஷ்பிரயோகத்தையும் தடுத்தல் ஆகிய 3 துறைகள் பின்னர் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

வெளிநாட்டமைச்சுச் செயலாளர்களின் 3 சந்திப்புகளிலும் இனங்காணப்பட்ட 12 துறைகளையும் உள்ளடக்கிய செயற்றிட்டமொன்று 1983 ஜனவரி 10 - 13 வரை கொழும்பில் கூடிய செயற்குழுவினால் தயாரிக்கப்பட்டு, 1983 ஒகஸ்ட் 1 - 2 வரை புதுடில்லியில் நடைபெற்ற 7 நாடுகளின் முதலாவது வெளிநாட்டமைச்சர்களின் சந்திப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1984 ஜூலை 10 - 11 வரை மாலேயில் இடம்பெற்ற வெளிநாட்டமைச்சர்களின் 2 ஆவது சந்திப்பில் 7 நாடுகளின் தலைவர்கள் மட்டத்திலான முதலாவது உச்சி மாநாட்டை 1985 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் டாக்காவில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. 1985 மே 13 - 14 வரை வெளிநாட்டமைச்சர்களின் 3 ஆவது சந்திப்பு டாக்காவில் நடைபெற்றபோது தலைவர்களின் உச்சி மாநாட்டிற்கான முன்னேற்பாடுகள் மீள்பரிசீலனை செய்யப்பட்டதுடன், நிகழ்ச்சி நிரலும் (Agenda) பூர்த்தி செய்யப்பட்டது.

மேலும் உச்சி மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு சமர்ப்பிக்கவென 'சார்க் சாசனம்' (SAARC Charter), 'டாக்கா உறுதி மொழி' (Dhaka Declaration) 'சார்க் இலச்சினை' (SAARC Emblem) என்பன, 1985 டிசம்பர் 5 ஆந் திகதி டாக்காவில் நடைபெற்ற வெளிவிவகார அமைச்சர்களின் சந்திப்பில் பூர்த்தி செய்யப்பட்டன.

இதன்படி 7 நாடுகளின் அரச / அரசாங்கத் தலைவர்களின் முதலாவது உச்சி மாநாடு 1985 டிசம்பர் 7 - 8 வரை டாக்காவில் நடைபெற்றதோடு 'சார்க்' அமைப்பு உத்தியோகபூர்வமாக உதயமானது. அமைப்பின் முதலாவது தலைமைப் பொறுப்பை பங்களாதேஷ் அதிபர் முஜீபுர் ரஹ்மான் ஏற்றுக் கொண்டார். இலங்கையின் சார்பில் அப்போதைய ஜனாதிபதி J.R. ஜயவர்தன கலந்து கொண்டார்.

சார்க் அமைப்பின் முதலாவது டாக்கா உச்சி மாநாட்டில் சார்க் சாசனம் அங்கீகரிக்கப்பட்டது. 10 நிபந்தனைகளை கொண்டுள்ள சார்க் சாசனம் அமைப்பின் நோக்கங்கள், கோட்பாடுகள்,

நிறுவன ரீதியான கட்டமைப்பு, நிதி ஏற்பாடுகள் என்பன பற்றிக் கூறுகிறது. ஐக்கிய நாடுகள் சாசனத்தினதும் அணிசேராமையின தும் அடிப்படையில் முரண்படாத வகையில் சார்க் அமைப்பு தன் குறிக்கோள்களை முன்கொண்டு செல்லும் என சார்க் சாசனம் அதன் முகவுரையில் கூறுகிறது.

இறைமைச் சமத்துவம், ஆள்புல ஒருமைப்பாடு, தேசிய சுதந்தி ரம், ஏனைய நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடாமையும் படைபலம் பிரயோகிக்காமையும், சகலவற்றிற்கும் சமாதானத் தீர்வு என்பன சார்க் அமைப்பின் அடிப்படையாக விளங்கும்.

**சார்க் அமைப்பின் நோக்கங்கள் வருமாறு.**

1. தென்னாசிய மக்களின் நலனை மேம்படுத்தலும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை விருத்தி செய்தலும்
2. பிராந்தியத்தில் பொருளாதார வளர்ச்சி, சமூக முன்னேற்றம், கலாசார அபிவிருத்தி என்பவற்றைத் துரிதப்படுத்தலும், கண்ணியமாக வாழ்ந்து, உள்ளார்ந்த பண்புகளை பூரணமாக உருப்பெறச் செய்வதற்கு தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் வாய்ப்பளித்தலும்
3. தென்னாசிய நாடுகள் கூட்டாக தம்மையே தாம் நம்பியிருக் கும் நிலையை வலுப்படுத்தலும் மேம்படுத்தலும்
4. பரஸ்பர நம்பிக்கை, புரிந்துணர்வு மற்றும் ஒருவர் மற்றவரு டைய பிரச்சினையை அறிந்துணர்தல் என்பவற்றிற்குப் பங் களிப்புச் செய்தல்
5. பொருளாதார - சமூக - கலாசார - தொழிநுட்ப - விஞ்ஞானத் துறைகளில் பரஸ்பர - செயலாக்கமிக்க உதவியை மேம்ப டுத்தல்
6. ஏனைய வளர்முக நாடுகளுடன் கூட்டுறவை பலப்படுத்தல்
7. பொது அக்கறையுள்ள விடயங்களில் சர்வதேச மன்றங்களில் தம்மத்தியில் கூட்டுறவை பலப்படுத்தல்
8. இதுபோன்ற குறிக்கோள்களையும் நோக்கங்களையும் கொண்ட சர்வதேச - பிராந்திய அமைப்புகளுடன் ஒத்துழைத் தல்

**சார்க் அமைப்பு பின்வரும் கோட்பாடுகளைக் கொண்டுள்ளது.**

- இறைமைச்சமத்துவம் (Sovereign Equality), ஆள்புல ஒருமைப் பாடு (Territorial Integrity), அரசியல் சுதந்திரம், ஏனைய அரசு களின் உள்விவகாரங்களில் தலையிடாமை, பரஸ்பர நன்மை அடிப்படையில் அமைப்புக்குள்ளான ஒத்துழைப்பு வரைய றுக்கப்பட்டிருக்கும்.
- இரு தரப்பு, பல் தரப்பு கூட்டுறவுக்கு மாற்றீடாக இருத்தலாகாது.
- இரு தரப்பு, பல் தரப்பு கூட்டுறவுக் கடமைப்பாடுகளுக்கு முரணாக இருத்தலாகாது.

**சார்க் அமைப்பின் நிறுவன ரீதியான கட்டமைப்பு வருமாறு.**

➢ உச்சிமாநாடுகள் - அரசாங்க / அரச தலைவர்களின் உச்சிமா நாடு சார்க் அமைப்பின் அதியுச்ச அதிகார பீடமாகும் (Meetings of the heads of States or Governments). வருடத்தில் ஒரு தடவை தலைவர்கள் சந்தித்துக் கொள்வர். அங்கத்துவ நாடுகள் தேவையெனக் கருதின் மேலதிக சந்திப்புகளையும் மேற்கொள்ளலாம்.

➢ அமைச்சர்கள் சபை - அமைச்சர்கள் சபை (Council of Ministers) அங்கத்துவ நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களைக் கொண்டு காணப்படும். இச்சபையானது வருடத்தில் 2 தடவை கள் கூடும். அங்கத்துவ நாடுகளால் ஏற்பாடு செய்யப்படின் மேலதிக அமர்வுகளையும் நடத்தலாம்.

- அமைப்பின் கொள்கைகளைத் தெளிவாக்குதல்
- அமைப்பின் கீழ் கூட்டுறவின் முன்னேற்றத்தை மதிப்பிடுதல்
- கூட்டுறவுக்கான புதிய துறைகள் பற்றி முடிவெடுத்தல்
- தேவையெனக் கருதும் பட்சத்தில் அமைப்பின் கீழ் மேலதிக இயந்திரமயமாக்கலை ஆரம்பித்தல்
- பொது அக்கறையுள்ள ஏனைய விடயங்கள் பற்றி முடிவெடுத் தல்

- ➢ நிலையியற் குழு - நிலையியற் குழு (Standing Committee) 8 நாடுகளின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர்களைக் கொண்டுள்ளது. தேவையான போதெல்லாம் இக்குழு அடிக்கடி கூட்டம் நடத்தலாம். இக்குழுவின் முடிவுகள் அமைச்சர்கள் சபைக்கு அறிவிக்கப்படும். இக்குழு பின்வரும் பொறுப்புக்களைக் கொண்டுள்ளது.

- ■ கூட்டுறவுத் திட்டத்தை ஒழுங்குபடுத்தலும் கண்காணித்தலும்
- ■ கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றை அங்கீகரித்தலும் தேவையான நிதியினைத் தரப்படுத்தலும்
- ■ துறைகளுக்கிடையிலான சலுகைகளை நிர்ணயம் செய்தல்
- ■ பிராந்திய வெளிநாட்டு வளங்களைத் திரட்டுதல்
- ■ பொருத்தமான ஆய்வுகளின் அடிப்படையில் கூட்டுறவுக் கான புதிய துறைகளை இனங்காணல்

- ➢ தொழில்நுட்பக் குழுக்கள் - தொழில்நுட்பக் குழுக்கள் (Technical Committees) பல அமைக்கப்பட்டிருக்கும். இக்குழுக்கள் அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்டிருக்கும். தொழில்நுட்பக் குழுக்கள் தமது நடவடிக் கைகள் குறித்து நிலையியற் குழுவுக்குப் பொறுப்பாக இருக்கும். தொழில்நுட்பக் குழுக்களின் தலைமைத்துவம் 2 வருடங்களுக்கொரு தடவை ஆங்கில அகர வரிசைப்படி அங்கத்துவ நாடுகளுக்கு வழங்கப்படும்.

- ➢ செயற்குழுக்கள்- வேலைத்திட்டங்களுக்குத் தேவையான 'செயற்குழுக்களை' (Action Committees) நிலையியற் குழு தாபிக்கும்.

**1995** இல் கைச்சாத்திடப்பட்ட 'சார்க் முன்னுரிமை வர்த்தக ஏற்பாடு' (SAARC Preferencial Trade Arrangement– SAPTA) பற்றிய ஒப்பந்தம் மற்றும் அதனைத் தொடர்ந்து எதிர்பார்க்கப் படும் 'தென்னாசிய சுதந்திர வர்த்தகப் பிராந்தியம்' (South Asian Free Trade Area – SAFTA) என்பன சார்க் அமைப்பின் முக்கிய வர்த்தக, பொருளாதார ஒத்துழைப்புக் கட்டங்களாகும்.

**சார்க் அமைப்பின் நிலையங்கள் வருமாறு.**

- சார்க் கலாசார நிலையம் (SCC) - கொழும்பு (இலங்கை) 2009
- சார்க் சக்தி நிலையம் (SEC) - இஸ்லாமாபாத் (பாகிஸ்தான்) 2006
- சார்க் விவசாய நிலையம் (SAC) - டாக்கா (பங்களாதேஷ்) 1989
- சார்க் காசநோய், எச்.ஐ.வீ. / எயிட்ஸ் நிலையம் (STAC) - காத் மண்ட் (நேபாளம்) 1992
- சார்க் அனர்த்த முகாமைத்துவ நிலையம் (SDMC) – புதுடில்லி (இந்தியா) 2016
- சார்க் வானிலையியல் ஆராய்ச்சி நிலையம் (SMRC) - டாக்கா (பங்களாதேஷ்)
- சார்க் வனவியல் நிலையம் (SFC) - திம்பு (பூட்டான்)
- சார்க் கரையோர வலய முகாமைத்துவ நிலையம் (SCZMC) - மாலே (மாலைதீவு)
- தென்னாசியப் பல்கலைக்கழகம் (SAU) - புதுடில்லி (இந்தியா) (2010)
- சார்க் அபிவிருத்தி நிதியம் (SDF) - திம்பு (பூட்டான்) (2010)
- சார்க் ஆவணப்படுத்தல் நிலையம் (SDC)- புதுடில்லி (இந்தியா)
- சார்க் மனித வளங்கள் அபிவிருத்தி நிலையம் (SHRDC)- இஸ்லாமாபாத் (பாகிஸ்தான்)
- சார்க் தகவல் நிலையம் (SIF) - காத்மண்ட் (நேபாளம்)

**சார்க் திட்டங்கள் சில வருமாறு.**

- சார்க் கேள்வி - பார்வை பரிமாற்றத் திட்டம் (SAVE)
- சார்க் விசா விலக்குத் திட்டம் (SVES)
- சார்க் உணவு பாதுகாப்பு ஒதுக்கு (1988)

***சார்க் அமைப்பின் சவால்கள் வருமாறு.***

- *பிராந்திய நாடுகளிடையே காணப்படும் நெருக்கடிகள்*
- *பிராந்திய நாடுகளுக்குள் இடம்பெறும் உள்நாட்டு பிரச்சினை கள்*
- *சார்க் கூட்டங்கள் மற்றும் உச்சிமாநாடுகளுக்கு அதிக நிதி செலவளிக்கப்படல்*

**சார்க் உச்சி மாநாடுகள்**

| | **ஆண்டு** | **நகரம்** | **நாடு** |
|---|---|---|---|
| **1.** | 1985 | டாக்கா | பங்களாதேஷ் |
| **2.** | 1986 | பெங்களூர் | இந்தியா |
| **3.** | 1987 | காத்மண்ட் | நேபாளம் |
| **4.** | 1988 | இஸ்லாமாபாத் | பாகிஸ்தான் |
| **5.** | 1990 | மாலே | மாலைதீவு |
| **6.** | 1991 | கொழும்பு | இலங்கை |
| **7.** | 1993 | டாக்கா | பங்களாதேஷ் |
| **8.** | 1995 | புதுடில்லி | இந்தியா |
| **9.** | 1997 | மாலே | மாலைதீவு |
| **10.** | 1998 | கொழும்பு | இலங்கை |
| **11.** | 2002 | காத்மண்ட் | நேபாளம் |
| **12.** | 2004 | இஸ்லாமாபாத் | பாகிஸ்தான் |
| **13.** | 2005 | டாக்கா | பங்களாதேஷ் |
| **14.** | 2007 | புதுடில்லி | இந்தியா |
| **15.** | 2008 | கொழும்பு | இலங்கை |
| **16.** | 2010 | திம்பு | பூட்டான் |
| **17.** | 2011 | அத்து நகர் | மாலைதீவு |
| **18.** | 2014 | காத்மண்ட் | நேபாளம் |

# 43

# ஆசிய - பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு (APEC)

(Asia-Pacific Economic Cooperation)

*'ஆசிய- பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு'* (APEC) *ஒரு பிராந்திய பொருளாதார மன்றமாகும். **1989** நவம்பர் **6, 7** இல் அவுஸ்திரேலியாவின் தலைநகர்* Canberra *வில் தாபிக்கப்பட்ட* APEC *அமைப்பில் **21** நாடுகள் அங்கம் வகிக்கின்றன. நிரந்தர செயலகம் சிங்கப்பூரில் அமைந்துள்ளது. உள்ளடக்கம், நிலை பேறு, புத்தாக்கம், பாதுகாப்பான வளர்ச்சி போன்றவற்றை சமமாக ஊக்குவிப்பதன் மூலமும் பிராந்திய பொருளாதார ஒருங்கிணைப்பை முடுக்கிவிடுவதன் மூலமும் பிராந்திய மக்களின் சிறப்பான சுபீட்சத்தை உருவாக்கும் இலக்கை* APEC *கொண்டுள்ளது.*

*குறிப்பாக வர்த்தக, பொருளாதார பிரச்சினைகளில்* APEC *அதிக கவனம் செலுத்துகின்றது. பொருட்கள், சேவைகள், முதலீடு, மக்கள் எல்லைகளை இலகுவாகக் கடந்து செல்லல், எல்லைகளில் சுங்க நடைமுறைகளை விரைவாக்குதல் மூலமான வர்த்தகம், எல்லைகளுக்கு அப்பால் அதிக விருப்பமான வர்த்தக சூழல்,*

ஒழுங்குமுறையினதும் தரநிலையினதும் சீரமைப்பு போன்ற வற்றை உறுதிப்படுத்த உதவுகிறது.

கிராமிய சமுதாயத்திற்கு டிஜிடல் திறன்களை வழங்குதல், உள்ளூர் பெண்களின் உற்பத்திப் பொருட்களுக்கு வெளிநாட்டு சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல், சக்தி வினைத் திறனை அதிகரித்தல், வனவள - கடல்வள நிலையான முகாமைத் துவத்தை மேம்படுத்தல் போன்ற விடயங்கள் உட்பட அனர்த்த நிலை, சர்வதேச நோய் பரவல், பயங்கரவாதம் என்பவற்றிற்கு முகங்கொடுத்தல் APEC கவனம் குவிக்கின்றது.

அவுஸ்திரேலியா, புரூணை, கனடா, சிலி, சீனா, ஹொங்கோங் (சீனா), இந்தோனேசியா, ஜப்பான், தென் கொரியா, மலேசியா, மெக்சிகோ, நியூசிலாந்து, பப்புவா நியூகினி, பெரு, பிலிப்பைன்ஸ், றஷ்யா, சிங்கப்பூர், தைபே (சீனா), தாய்லாந்து, ஐக்கிய அமெரிக் கா, வியட்னாம் ஆகியன APEC இல் அங்கம் வகிக்கின்றன.

**APEC அமைப்பின் தற்போதைய பிரதான நடவடிக்கைகள் வருமாறு.**

1. ஒத்துழைப்பும் ஒருமித்த கருத்தும் (APEC: Cooperation and Consensus)
2. இயலுமையைக் கட்டியெழுப்பும் செயற்றிட்டம் (APEC: Capacity Building Project)

# 44



# வட அமெரிக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (NAFTA)

(North American Free Trade Agreement)

*ஐக்கிய அமெரிக்கா, கனடா, மெக்சிகோ ஆகிய முத்தரப்பு வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொள்ள 1990 ஜூன் 10 இல் 3 நாடுகளும் இணங்கின. 1991 பெப்ரவரி 5 இல் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகி 1992 டிசெம்பர் 17 இல் 'வட அமெரிக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கை'* (NAFTA) *கைச்சாத்திடப்பட்டது. 1993 ஒகஸ்டில் மேலதிக உடன்பாடொன்று காணப்பட்டு 1994 ஜனவரி 1 இல்* NAFTA *நடைமுறைக்கு வந்தது.* NAFTA *மூலம் வட அமெரிக்கக் கண்டத்தை ஒரு சுதந்திர வர்த்தகப் பிராந்தியமாக மாற்ற எதிர் பார்க்கப்படுகின்றது.*

*திறந்த சந்தை வசதி, நம்பிக்கையான நீண்டகால முதலீடு, சுங்கத் தீர்வை குறைப்பு என்பன* NAFTA *வின் முக்கிய அம்சங்களாகும்.* NAFTA *மூலம் அங்கத்துவ நாடுகளின் தொழில் அமைச்சர்களைக் கொண்ட 'தொழிலாளர் ஒத்துழைப்புக்கான ஆணைக்குழு'* (CLC), *சுற்றாடல் அமைச்சர்களைக் கொண்ட 'சுற்றாடல் ஒத்துழைப்*

புக்கான ஆணைக்குழு' (CEC) என்பன நடைமுறையில் உள்ளன.

2017 ஜனவரியில் NAFTA ஒப்பந்தத்தை மறுசீரமைக்கும் அறிவிப்பை ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் வெளியிட்டார். 2018 செப்டெம்பரில் 3 நாடுகளும் 'ஐக்கிய அமெரிக்கா - மெக்சிகோ - கனடா உடன்பாட்டுக்கு' (USMCA) வந்தது. 2020 ஜூலை 1 இல் NAFTA என்பது USMCA ஆக மாற்றம் பெற்றது.

தற்போது நடைமுறையில் கனடாவும் ஐக்கிய அமெரிக்காவும் பல பொருட்கள் விடயத்தில் தடைகளற்ற வர்த்தகத் தாராளத் தன்மையைப் பின்பற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

| சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (FTA) |
|---|
| ஐக்கிய அமெரிக்காவுடன் சுதந்திர வர்த்தக உடன்பாட்டுக்கு வரும் முன்மொழிவை கனடா 1985 செப்டெம்பர் 26 இல் வெளியிட்டது. 1987 ஒக்டோபர் 4 இல் இதுகுறித்து பேசப்பட்டது. 1988 ஜனவரி 2 இல் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 1989 ஜனவரி 1 இல் 'கனடா - ஐக்கிய அமெரிக்கா சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்' (FTA) நடைமுறைக்கு வந்தது. NAFTA உடன்படிக்கை இதனூடே தொடர்ந்தது. |

# 45

## கரீபியன் நாடுகளின் சங்கம் (ACS)

(Association of Caribbean States)

கரீபியன் பிராந்திய நாடுகளுக்கு ஆலோசனை, ஒத்துழைப்பு, ஒருங்கிணைந்த நடவடிக்கை போன்றவற்றிற்கான ஒரு அமைப் பாக இருக்கும் நோக்கில் 'கரீபியன் நாடுகளின் சங்கம்' (ACS) தாபிக்கப்பட்டுள்ளது. 1994 ஜூலை 24 இல் கொலம்பியாவின் Cartagena வில் கைச்சாத்திடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட ACS அமைப்பு 25 அங்கத்துவ நாடுகளையும் 10 இணை அங்கத்துவத் தையும் கொண்டுள்ளது.

அமைப்பின் கீழ் வர்த்தக அபிவிருத்தியும் வெளிநாட்டு பொரு ளாதார உறவுகளும், பேண்தகு சுற்றுலா, போக்குவரத்து, அனர்த்த அபாயத் தணிப்பு, வரவு செலவும் நிருவாகமும் ஆகிய 5 விசேட குழுக்கள் இயங்கி வருகின்றன.

ACS இன் பிரதான அங்கம் அமைச்சர்கள் பேரவையாகும் (Min isterial Council). இது கொள்கைகளை உருவாக்கி நடைமுறைப் படுத்தும் பிரதான அதிகாரங் கொண்டது. அரச / அரசாங்கத் தலைவர்களின் உச்சி மாநாடு (Summit) அமைப்பின் அதியுச்ச அதிகார பீடமாகும்.

| **Summits** | | | |
|---|---|---|---|
| **No.** | **Date** | **City** | **Country** |
| **1.** | August 17–18, 1995 | Port of Spain | Trinidad and Tobago |
| **2.** | April 16–17, 1999 | Santo Domingo | Dominican Republic |
| **3.** | December 12, 2001 | Isla Margarita | Venezuela |
| **4.** | July 29, 2005 | Panama City | Panama |
| **5.** | April 23–26, 2013 | Pétion-Ville | Haiti |
| **6.** | April 28–30, 2014 | Mérida | México |
| **7.** | June 4, 2016 | La Habana | Cuba |
| **8.** | March 29, 2019 | Managua | Nicaragua |

| **Member States & Associate Members (ACS)** | | | |
|---|---|---|---|
| **No.** | **Member States** | **No.** | **Associate Members** |
| **1.** | Antigua & Barbuda | **1.** | Aruba |
| **2.** | Bahamas | **2.** | Bonaire (The Netherlands) |
| **3.** | Barbados | **3.** | British Virgin Islands |
| **4.** | Belize | **4.** | Curacao |
| **5.** | Colombia | **5.** | French Guiana (France) |
| **6.** | Costa Rica | **6.** | Guadeloupe |
| **7.** | Cuba | **7.** | Martinique |
| **8.** | Dominica | **8.** | Saba (The Netherlands) |
| **9.** | Dominican Republic | **9.** | Saint Barthelemy (France) |
| **10.** | El Salvador | **10.** | Saint Martin |
| **11.** | Grenada | **11.** | Sint Eustatius (The Netherlands) |
| **12.** | Guatemala | **12.** | Sint Maarten |
| **13.** | Guyana | | |
| **14.** | Haiti | | **Note :** |
| **15.** | Honduras | | **1.** France on behalf of (French Guiana and Saint Barthelemy) |
| **16.** | Jamaica | | |
| **17.** | Mexico | | **2.** The Netherlands Antilles on behalf of (Saba and Eustatius) |
| **18.** | Nicaragua | | |
| **19.** | Panama | | |
| **20.** | Saint Lucia | | |
| **21.** | St Kitts & Nevis | | |
| **22.** | St Vincent & Grenadines | | |
| **23.** | Suriname | | |
| **24.** | Trinidad & Tobago | | |
| **25.** | Venezuela | | |

# 46

# மேர்கோஸர் (MERCOSUR)

உத்தியோகபூர்வமாக 'தென் பொதுச் சந்தை' (The Southern Common Market) எனப்படுவது MERCOSUR என ஸ்பானிய மொழியின் முதலெழுத்துக்களால் அழைக்கப்படும் ஒரு அரசு சார்பு அமைப்பாகும். 1991 மார்ச் 26 இல் Treaty of Asuncion மற்றும் 1994 டிசெம்பர் 16 இல் Protocol of Ouro Preto மூலம் அமைப்பு தாபிக்கப்பட்டது.

MERCOSUR ஆர்ஜன்டீனா, பிரேசில், பரகுவே, உருகுவே ஆகிய 4 முழு அங்கத்துவ நாடுகளைக் கொண்டது. வெனிசுலா ஒரு முழு அங்கத்துவ நாடாயினும் 2016 டிசெம்பர் 1 முதல் அமைப்பிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளது. சிலி, பொலீவியா, கொலம்பியா, ஈக்வடோர், கயானா, பெரு, ஸூரினம் ஆகிய 7 இணை அங்கத்துவ நாடுகளையும் நியூசிலாந்து, மெக்சிகோ ஆகிய 2 பார்வையாளர் நாடுகளையும் கொண்டுள்ளது.

ஜனநாயகம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்பன அமைப்பின் அடிப்படைகளாகும். இதன்மூலம் சுதந்திர வர்த்தகத்தை ஊக்குவிப்பது அமைப்பின் முக்கிய நோக்கமாகும். ஸ்பேனிஷ் மற்றும் போர்த்துகீஸ் ஆகியன அமைப்பின் உத்தியோகபூர்வ மொழிகளாகும்.

**அமைப்பின் தீர்மானம் மேற்கொள்ளும் முக்கிய 3 அங்கங்கள் வருமாறு.**

1. பொதுச் சந்தைச் சபை (CMC) - அரசியல் ரீதியான உறவு நிலையை முன்னெடுத்துச் செல்லல்
2. பொதுச் சந்தைக் குழு (GMC) - அமைப்பின் நாளாந்த நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்
3. வர்த்தக ஆணைக்குழு (CCM) - பொது வர்த்தகக் கொள்கைக் கருவிகளின் நிருவாகத்துக்குப் பொறுப்பு வகித்தல்

# 47

## இந்து சமுத்திர கரையோரச் சங்கம் (IORA)

(Indian Ocean Rim Association)

இந்து சமுத்திர கரையோரத்தில் அமைந்துள்ள **22** நாடுகள் அங்கம் வகிக்கும் ‘இந்து சமுத்திர கரையோரச் சங்கம்’ (IORA) (Indian Ocean Rim Association) என **2014** இலிருந்து அழைக்கப்பட்டு வரும் IORA முன்னர் ‘பிராந்திய ஒத்துழைப்புக்கான இந்து சமுத்திர கரையோரச் சங்கம்’ (Indian Ocean Rim Association for Regional Cooperation (IOR–ARC) என **1997** இல் ஆரம்பிக்கப்பட்டது.

**1995** இல் நெல்சன் மண்டேலா இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டபோது இந்து சமுத்திர கரையோர நாடுகள் மத்தியில் பொருளாதார ஒத்துழைப்பின் அவசியம் பற்றித் தெரிவித்த கருத்தில் கருக்கொண்டதே இவ்வமைப்பாகும்.

**1995** மார்ச் **29-31** இல் இந்து சமுத்திரப் பிராந்தியத்திலுள்ள அவுஸ்திரேலியா, இந்தியா, கென்யா, மொரீசியஸ், ஓமான்,

சிங்கப்பூர், தென்னாபிரிக்கா ஆகிய 7 நாடுகளின் பிரதிநிதிகள் (core group states or M–7) இதுகுறித்து கலந்துரையாடினர். 1995 ஓகஸ்ட் 15-17 இல் மீண்டும் மொரீசியஸில் இடம்பெற்ற சந்திப்பில் அமைப்பு உருவாக்க முடிவு மேற்கொள்ளப்பட்டது. 1996 செப்டெம்பரில் அமைப்பின் சாசனம் தயாரிக்கப்பட்டது. இந்தோனேசியா, மலேசியா, இலங்கை, யெமன், தன்சானியா, மடகாஸ்கார், மொசாம்பிக் ஆகியன இணைந்து கொண்டதோடு G–14 என அறியப்பட்டது.

எனினும் 1997 மார்ச் 6-7 இல் மொரீசியஸ் தலைநகர் Port Louis இல் இடம்பெற்ற முதலாவது அமைச்சரவை மட்ட உச்சி மாநாட்டில் IORA சாசனம் அங்கீகரிக்கப்பட்டு உத்தியோகபூர் வமாக தாபிக்கப்பட்டது. அமைப்பின் செயலகம் மொரீசியஸில் அமைந்துள்ளது. வருடாந்தம் கூடும் 'வெளிவிவகார அமைச்சர்கள் சபையே' (Council of Foreign Ministers – COM) அமைப்பின் அதிகாரமிக்க உச்ச பீடமாகும்.

அமைப்பின் முதலாவது அமைச்சர் மட்ட மாநாடு (IORA Meeting) 1997 இல் மொரீசியஸ் தலைநகர் Port Louis இல் இடம்பெற்றது. 2 ஆவது மாநாடு 1999 இல் மொசாம்பிக் தலை நகர் Maputo விலும் 3 ஆவது மாநாடு 2001 (ஏப்ரல் 4-8) இல் ஓமான் தலைநகர் மஸ்கட்டிலும் என இந்து சமுத்திர மேற்குக் கரையில் இடம்பெற்றதைத் தொடர்ந்து 4 ஆவது மாநாடு 2003 இல் கிழக்குக் கரையான இலங்கையில் இடம்பெற்றது. இதற்கு வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னேண்டோ தலைமை தாங்கினார். அமைச்சர் சபையின் 11 ஆவது மாநாடு 2014 இல் இந்தியாவின் பெங்களூர் நகரிலும் 20 ஆவது மாநாடு 2017 இல் ஜகார்த்தாவில் முதலாவது அரச தலைவர்களின் உச்சி மாநாட்டின் போதும் இடம்பெற்றது.

அமைப்பின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 2017 மார்ச் 7 இல் இந்தோனேசியத் தலைநகர் ஜகார்த்தாவில் முதலாவது தலைவர்களின் உச்சி மாநாடு (IORA Summit) நடை பெற்றது. 21 அங்கத்துவ நாடுகள் கலந்து கொண்ட இவ்வுச்சி

மாநாடு 'அமைதி, நிலைத்திருப்பு, சுபீட்சம் கொண்ட இந்து சமுத்திரத்துக்காக கரையோர ஒத்தழைப்பை பலப்படுத்தல்' எனும் தொனிப்பொருளில் இடம்பெற்றது.

கடல் பாதுகாப்பு, வர்த்தக முதலீட்டு வசதி, மீன்பிடி முகாமைத்துவம், அனர்த்த அபாயக் குறைப்பு, நிபுணத்துவ - விஞ்ஞான ஒத்துழைப்பு, சுற்றுலா மேம்பாடு- கலாசார பரிமாற்றங்கள் ஆகிய 6 முன்னுரிமைப் பரப்புக்கள் அமைப்பின் ஒத்துழைப்புக்காக இனங்காணப்பட்டுள்ளன. மேலும் கடல்சார் பொருளாதாரம் (Blue Economy), மகளிர் பொருளாதார வலுப்படுத்தல் ஆகிய 2 மேலதிக துறைகளும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வமைப்பு பிராந்தியத்தில் வர்த்தக முதலீட்டை அதிகரித்தலையும் வர்த்தகத்தைத் தாராளமயப்படுத்தலையும் அடிப்படை நோக்கங்களாகக் கொண்டுள்ளது. அதற்காக சுங்கத் தீர்வையைத் தளர்த்துவதன் மூலம் சுதந்திர வர்த்தகப் பிராந்தியமொன்றை உருவாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

**அமைச்சர் மட்ட மாநாட்டைத் தவிர பின்வரும் கட்டமைப்பையும் கொண்டுள்ளது.**

- 'இந்து சமுத்திர கரையோர நாடுகளின் வர்த்தக மன்றம்' (Indian Ocean Rim Business Forum)
- 'இந்து சமுத்திர கரையோர நாடுகளின் கல்விப்புலக் குழு' (Indian Ocean Rim Academic Group)
- 'சிரேஷ்ட அதிகாரிகளின் குழு' (Committee of Senior Offcials)

அமைப்பில் அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், கொமரோஸ், இந்தியா, இந்தோனேசியா, ஈரான், கென்யா, மடகாஸ்கார், மலேசியா, மாலைதீவு, மொரீசியஸ், மொசாம்பிக், ஓமான், சீசெல்ஸ், சிங்கப்பூர், சோமாலியா, தென்னாபிரிக்கா, இலங்கை, தன்சானியா, தாய்லாந்து, ஐக்கிய அரபு இராச்சியம், யெமன் ஆகிய 22 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

*சீனா, பிரான்ஸ், பிரித்தானியா, ஜப்பான், எகிப்து, துருக்கி, தென் கொரியா, ஜேர்மனி, இத்தாலி, ஐக்கிய அமெரிக்கா ஆகிய **10** நாடுகள் 'கலந்துரையாடல் பங்காளர்களாகவும்'* (Dialgue Partners) *'இந்து சமுத்திர சுற்றுலாத்துறை அமைப்பு'* (Indian Ocean Tourism Organisation), *'இந்து சமுத்திர ஆராய்ச்சிக் குழு'* (Indian Ocean Research Group) *என்பன பார்வையாளர்களாக வும்* (Observers*)* ***உள்ளன.***

# 48

## பிம்ஸ்டெக் (BIMSTEC)

*'பல்துறை தொழில்நுட்ப, பொருளாதார ஒத்துழைப்புக் கான வங்காள விரிகுடா முயற்சி' (பிம்ஸ்டெக்)* (Bay of Bengal Initiative for Multi–Sectoral Technical and Economic Coo peration– BIMSTEC) *எனும் பிராந்திய அமைப்பு பங்களாதேஷ், இந்தியா, இலங்கை, நேபாளம், பூட்டான் ஆகிய 5 தென்னாசிய நாடுகளையும் மியன்மார், தாய்லாந்து ஆகிய 2 தென்கிழக்காசிய நாடுகளையுமாக 7 நாடுகளைக் கொண்டுள்ளது. இவ்வுப பிராந்திய அமைப்பு 1997 ஜூன் 6 ஆம் திகதி 'பேங்கொக் பிரகடனம்' மூலம் ஆரம்பிக்கப்பட்டது. நிரந்தர செயலகம் 2014 செப்டெம்பர் 13 இல் டாக்காவில் நிறுவப்பட்டுள்ளது.*

*ஆரம்பத்தில் (1997) வர்த்தகமும் முதலீடும், தொழில்நுட்பம், சக்தி, போக்குவரத்தும் தொடர்பாடலும், சுற்றுலா, மீன்பிடி ஆகிய 6 துறைகளும் பின்னர் (2008) விவசாயம், பொது சுகாதா ரம், வறுமையைக் கட்டுப்படுத்தல், பயங்கரவாத எதிர்ப்பும் நாடு*

கடந்த குற்றமும், சுற்றாடலும் அனர்த்த முகாமைத்துவமும், கலாசார ஒத்துழைப்பு, மக்களுக்கிடையிலான தொடர்பு, கால நிலை மாற்றம் ஆகிய 8 துறைகளுமாக மொத்தம் 14 முன்னுரிமை துறைகள் ஒத்துழைப்புக்கென இனங்காணப்பட்டுள்ளன.

ஆரம்பத்தில் 'பங்களாதேஷ், இந்தியா, இலங்கை, தாய்லாந்து பொருளாதார ஒத்துழைப்பு' (BIST–EC) என 4 நாடுகளால் அறிமுகப் படுத்தப்பட்ட இவ்வமைப்பு 1997 டிசெம்பர் 22 இல் மியன்மார் சேர்ந்த பின்னர் 'பங்களாதேஷ், இந்தியா, மியன்மார், இலங்கை, தாய்லாந்து பொருளாதார ஒத்துழைப்பு' (BIMST–EC) என பெயர் மாற்றம் பெற்றது. 2004 பெப்ரவரியில் நேபாளும் பூட்டானும் சேர்ந்து கொண்டதோடு தற்போது 'பல்துறை தொழில்நுட்ப, பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முனைப்பு' - 'பிம்ஸ்டெக்' (Bay of Bengal Initiative for Multi–Sectoral Techni cal and Economic Cooperation– BIMSTEC) என அழைக் கப்படுகிறது.

சார்க் மற்றும் ஆசியான் அமைப்பு நாடுகளின் ஒரு கலவையா கக் காணப்படுகின்ற பிம்ஸ்டெக் தென்னாசிய மற்றும் தென்கிழக் காசிய பிராந்தியங்களுக்கிடையிலான ஒத்துழைப்புக்கு ஒரு அத்தி வாரமாக அமைந்துள்ளது. 1.5 பில்லியன் மக்களை (22%) கொண் டுள்ள இப்பிராந்தியம் உலக பொருளாதாரத்தில் ஒரு முக்கிய கேந்திரமாக அமைந்துள்ளது. 'பிம்ஸ்டெக் சக்தி நிலையம்' (BEC) மற்றும் 'பிம்ஸ்டெக் வானிலை, காலநிலை நிலையம்' (BCWC) ஆகிய இரு தாபனங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வருடாந்தம் அமைச்சரவை மட்ட மாநாடு (MM) இடம்பெறும். 16 ஆவது அமைச்சரவை மட்ட மாநாடு 2018 இல் நேபாளத் தலை நகர் காத்மண்டில் நடைபெற்றது. இதுவரை அரச தலைவர்களின் 4 உச்சிமாநாடுகள் (BIMSTEC Summit) நடைபெற்றுள்ளன.

| உச்சி மாநாடுகள் | | | |
|---|---|---|---|
| **No.** | **Date** | **Host country** | **Host city** |
| **1.** | 2004 July 31 | Thailand | Bangkok |
| **2.** | 2008 November 13 | India | New Delhi |
| **3.** | 2014 March 4 | Myanmar | Nay Pyi Taw |
| **4.** | 2017 February 2 | Nepal | Kathmandu |

# 49

## கருங்கடல் பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பு (BSEC)

(Organization of the Black Sea Economic Cooperation)

*'கருங்கடல் பொருளாதார ஒத்துழைப்பு'* (BSEC) *பல்தரப்பு அரசியல், பொருளாதார நோக்கில் பிராந்திய நாட்டு அரச, அரசாங்கத் தலைவர்களின் இஸ்தான்பூல் மாநாட்டுப் பிரகடனம் மற்றும்* Bosphorus *அறிக்கை மூலம் 1992 ஜூன் 25 இல் கருக் கொண்டது. எனினும் 1999 மே 1 இல் நடைமுறைக்கு வந்த சாசனத் தின் மூலம் 'கருங்கடல் பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பு'* (BSEC) (Organization of the Black Sea Economic Coopera tion) *எனும் சட்ட ரீதியான அடையாளத்தைப் பெற்றுக் கொண் டது.*

*அல்பேனியா, ஆர்மேனியா, அஸர்பைஜான், பல்கேரியா, ஜோர்ஜியா, கிறீஸ், மோல்டோவா, ரோமேனியா, றஷ்யா, சேர்பியா, துருக்கி, உக்ரைன் போன்ற 12 நாடுகள்* BSEC *இல் அங்கம் வகிக்கின்றன. அமைப்பின் நிரந்தர சர்வதேச செயலகம்* (BSEC PERMIS) *துருக்கியின் இஸ்தான்பூல் நகரில் 1994 மார்ச்சில்*

நிறுவப்பட்டது.

கருங்கடல் பிராந்திய நாடுகள் மத்தியில் ஒருங்கிணைப்பு, நல்லிணக்கம், சமாதானம், ஸ்திரத்தன்மை, சுபீட்சம் என்பவற்றை உறுதிப்படுத்தவும் நட்புறவு, சிறந்த அயலுறவை ஊக்குவிக்கவும் BSEC பரந்தளவில் தொழிற்பட்டு வருகின்றது.

விவசாயம், விவசாய கைத்தொழில், வங்கியும் நிதியும், போரியல் ரீதியான குற்றம், கலாசாரம், சுங்க விடயங்கள், கல்வி, அவசர உதவி, சக்தி, சூழல் பாதுகாப்பு, புள்ளிவிபரத் தரவு மற்றும் பொருளாதாரத் தகவல் பரிமாற்றம், சுகாதாரப் பராமரிப்பும் மருந்துகளும், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்கள், நிறுவன புதுப்பிப்பும் நல்லாட்சியும், விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், சிறிய - நடுத்தர வர்த்தக நிறுவனங்கள் (SMEs), சுற்றுலா, வர்த்தகமும் பொருளாதார அபிவிருத்தியும், போக்குவரத்து என்பன ஒத்துழைப்புக்கான அமைப்பின் முக்கிய துறைகளாகும்.

**BSEC சம்பந்தப்பட்ட அங்கங்களும் இணை நிறுவனங்களும் வருமாறு.**

- BSEC இன் பாராளுமன்றப் பேரவை (PABSEC)
- BSEC வர்த்தக சபை (BSECBC)
- சர்வதேச கருங்கடல் கற்கைகளுக்கான நிலையம் (ICBSS)
- கருங்கடல் வர்த்தக அபிவிருத்தி வங்கி (BSDTB)

# 50

## எமது அமெரிக்க மக்களுக்கான போலிவேரியன் கூட்டணி (ALBA)

(Bolivarian Alliance for the Peoples of Our America)

*சமூக, பொருளாதார, அரசியல் ஒருங்கிணைப்புக்காக லத்தீன் அமெரிக்க, கரீபியன் நாடுகள் அமைத்துக் கொண்டதே 'எமது அமெரிக்க மக்களுக்கான போலிவேரியன் கூட்டணி'* (Bolivarian Alliance for the Peoples of Our America – ALBA) *ஆகும். வெனிசுலா ஜனாதிபதியாக இருந்த ஹியூகோ ஷாவேஸ்* ALBA *உருவாக்கத்தின் காரணகர்த்தா ஆவார்.*

*'எமது அமெரிக்க மக்களுக்கான போலிவேரியன் கூட்டணி - மக்கள் வர்த்தக ஒப்பந்தம்'* Bolivarian Alliance for the Peoples of Our America–Peoples Trade Treaty – ALBA–TCP) *எனவும் இவ்வமைப்பு அழைக்கப்படுகிறது. 19 ஆம் நூற்றாண்டில்* Hispanic America *எனும் தனிப்பெரும் தேசம்* (Great Nation) *குறித்து சிந்தித்த தென்னமெரிக்க சுதந்திரத்தின் தலைவர் சிமோன் போலீவர் என்பாரை அடையாளப்படுத்தி இக்கூட்டணி அமைக்கப்பட் டுள்ளது.*

2004 டிசெம்பர் 14 இல் பிடல் கஸ்ட்ரோவும் ஹியூகோ ஷாவேஸூம் செய்து கொண்ட கியூபா – வெனிசுலா உடன் படிக்கையானது மருத்துவ – கல்வி வளங்கள், பெற்றோலியம் ஆகியவற்றை இரு நாடுகளும் பரிமாறிக் கொள்ள வழிவகுத்தது. வெனிசுலாவிலிருந்து கியூபாவுக்கு மிகக்குறைந்த விலையில் எண்ணெய்யையும் கியூபாவிலிருந்து வெனிசுலாவுக்கு மருத்துவப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களையும் பரஸ்பரம் பரிமாறிக் கொண்டுள்ளன.

Venezuela, Cuba, Antigua & Barbuda, Bolivia, Dominica, Grenada, Nicaragua, St. Kitts & Nevis, St. Lucia, St. Vincent & the Grenadines ஆகிய 10 நாடுகள் தற்போது இவ்வமைப்பில் அங்கம் வகிக்கின்றன. Suriname விசேட விருந்தினர் நாடாக அனுமதிக்கப்பட்டுள்ளது. அமைப்பின் தலைமையகம் Caracas இல் அமைந்துள்ளது.

இவ்வமைப்பு சமதர்ம, சமூக ஜனநாயக அரசாங்கங்களுடன் இணைந்து சமூக நலன்புரி மற்றும் பரஸ்பர பொருளாதார உதவி ஆகிய துூர நோக்கின் அடிப்படையில் பிராந்திய பொருளாதார ஒருங்கிணைப்பைத் திரட்ட விருப்பங் கொண்டுள்ளது.

பிராந்தியத்தில் SUCRE எனும் ஒரு பொது நாணயத்தை உரு வாக்க 2009 பொலீவியா மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. 2010 இல் நடைமுறைக்கு வரவிருந்தது. எனினும் பொலீவியா, கியூபா, நிகரகுவா, ஈக்குவடோர், வெனிசுலா ஆகிய நாடுகளுக்கு இடையிலான வர்த்தக நடவடிக்கைகளில் மாத்திரம் இந்நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படுகிறது.

ஈக்குவடோர் 2018 ஓகஸ்டில் அமைப்பிலிருந்து விலகியது. பொலீவியா 2019 நவம்பரில் உள்நாட்டு அரசியல் நெருக்கடி காரணமாக அமைப்பிலிருந்து விலகி 2020 பொதுத்தேர்தலைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட புதிய அரசாங்கத்துடன் மீண்டும் சேர்ந்து கொண்டது. 2020 டிசெம்பர் 14 இல் அமைப்பின் 16 ஆண்டு பூர்த்தி நாள் உச்சி மாநாடு வீடியோ மூலம் இடம்பெற்றது.

| Membership - ALBA | | |
|---|---|---|
| **No.** | **Country Name** | **Join date** |
| 1. | Antigua and Barbuda | 24 June 2009 |
| 2. | Bolivia | 29 April 2006 |
| 3. | Cuba | 14 December 2004 |
| 4. | Dominica | 20 January 2008 |
| 5. | Grenada | 14 December 2014 |
| 6. | Nicaragua | 23 February 2007 |
| 7. | Saint Kitts and Nevis | 14 December 2014 |
| 8. | Saint Lucia | 20 July 2013 |
| 9. | St. Vincent and the Grenadines | 24 June 2009 |
| 10. | Venezuela | 14 December 2004 |

| Summits - ALBA | | | | |
|---|---|---|---|---|
| **No.** | **Summit** | **Date** | **Location** | **Country** |
| 1. | I Ordinary | 14 December 2004 | Havana | Cuba |
| 2. | II Ordinary | 27–28 April 2005 | Havana | Cuba |
| 3. | III Ordinary | 29 April 2006 | Havana | Cuba |
| 4. | IV Ordinary | 10 January 2007 | Managua | Nicaragua |
| 5. | V Ordinary | 28–29 April 2007 | Barquisimeto | Venezuela |
| 6. | VI Ordinary | 24–26 January 2008 | Caracas | Venezuela |
| 7. | I Extraordinary | 22 April 2008 | Caracas | Venezuela |
| 8. | II Extraordinary | 25 August 2008 | Tegucigalpa | Honduras |
| 9. | III Extraordinary | 26 November 2008 | Caracas | Venezuela |
| 10. | IV Extraordinary | 2 February 2009 | Caracas | Venezuela |
| 11. | V Extraordinary | 16–17 April 2009 | Cumaná | Venezuela |
| 12. | VI Extraordinary | 24 June 2009 | Maracay | Venezuela |
| 13. | VII Extraordinary | 29 June 2009 | Managua | Nicaragua |
| 14. | VII Ordinary | 16–17 October 2009 | Cochabamba | Bolivia |
| 15. | VIII Ordinary | 13–14 December 2009 | Havana | Cuba |
| 16. | IX Ordinary | 19 April 2010 | Caracas | Venezuela |
| 17. | X Ordinary | 25 June 2010 | Otavalo | Ecuador |
| 18. | XI Ordinary | 4–5 February 2012 | Caracas | Venezuela |
| 19. | XII Ordinary | 30 July 2013 | Guayaquil | Ecuador |
| 20. | VIII Extraordinary | 20 October 2014 | Havana | Cuba |
| 21. | XIII Ordinary | 14 December 2014 | Havana | Cuba |
| 22. | IX Extraordinary | 17 March 2015 | Caracas | Venezuela |
| 23. | XIV Ordinary | 5 March 2017 | Caracas | Venezuela |
| 24. | XV Ordinary | 5 March 2018 | Caracas | Venezuela |
| 25. | XVI Ordinary | 14 December 2018 | Havana | Cuba |
| 26. | XVII Ordinary | 14 December 2019 | Havana | Cuba |
| 27. | XVIII Ordinary | 14 December 2020 | videoconference | --- |

# 51

## மத்தியதரை ஒன்றியம் (UfM)

(Union for the Mediterranean)

*மத்தியதரைப் பிராந்தியத்தில் அமைதி மற்றும் பாதுகாப்பைப் பேணுமுகமாக **1995** இல்* Barcelona Process *மூலம் ஐரோப்பாவுக்கும் தென் மத்தியதரை நாடுகளுக்கும் இடையில் கூட்டுறவை ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது.*

***2008** ஜூலை **13** இல் பாரிஸ் நகரில் கூடிய மத்தியதரைப் பிராந்திய நாடுகளின் அரச / அரசாங்கத் தலைவர்கள் 'மத்தியதரை ஒன்றியத்தை'* (UfM) *உருவாக்கினர். அமைப்பின் செயலகம் **2010** மார்ச் **4** இல் ஸ்பெயினின் பார்சிலோனா நகரில் தாபிக்கப்பட்டது. மத்தியதரைப் பிராந்திய பிரஜைகளின் வாழ்வில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தும் விடயங்கள் குறித்து தயாரிக்கப்படும் திட்டங்களை செயலகம் நடைமுறைப்படுத்துகின்றது.*

*இணைத்தலைமை* (Co-Presidency), *சிரேஷ்ட அலுவலர்களின் கூட்டம்* (SOM), *செயலகம் என்பன* UfM *இன் பிரதான கட்ட*

மைப்பாகும். 2008 - 2012 கால இணைத்தலைமையில் வடக்கு சார்பாக பிரான்சும் தெற்கு சார்பாக எகிப்தும் செயற்பட்டன. 2012 இலிருந்து வடக்கு சார்பாக ஐரோப்பிய ஒன்றியமும் தெற்கு சார்பாக ஜோர்தானும் இணைத்தலைமையில் இயங்கி வருகிறன.

2017 ஜனவரியில் இடம்பெற்ற 2 ஆவது மத்தியதரை ஒன்றிய பிராந்திய மன்றத்தின் போது 43 அங்கத்துவ நாடுகளின் வெளி விவகார அமைச்சர்களும் பிரதிநிதிகளும் மத்தியதரை ஒன்றியம் ஒரு பொதுக்குறிக்கோளுடன் இயங்கும் பாதையில் பயணிக்க இணங்கிக் கொண்டனர். 2011 டிசெம்பர் 1 முதல் சிரியாவின் அங் கத்துவம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. லிபியா அமைப்பின் ஒரு பார்வையாளர் அந்தஸ்துடைய நாடாக உள்ளது.

25 YEARS 1995 - 2020
BARCELONA PROCESS
#25BCNProcess

# 52

# தென் அமெரிக்க நாடுகளின் ஒன்றியம் (UNASUR)

(Union of South American Nations)

அரசு சார்பு பிராந்திய அமைப்பான 'தென்னமெரிக்க நாடுகளின் ஒன்றியம்' (UNASUR) 12 தென்னமெரிக்க நாடுகளைக் கொண்டிருந்தது. 2019 இல் பல நாடுகள் விலகிக் கொண்டன. தென்னமெரிக்காவைச் சேர்ந்த 12 நாடுகள் 2004 டிசெம்பர் 8 இல் பெரு நாட்டில் 3 ஆவது தென்னமெரிக்க மாநாட்டில் கைச்சாத்திட்டு வெளியிட்ட Cusco Declaration மூலம் தோற்றுவிக்கப்பட்ட 'தென்னமெரிக்க நாடுகளின் சமூகமே' (South American Community of Nations) இவ்வமைப்பின் முன்னோடியாகும்.

2007 ஏப்ரல் 16 இல் வெனிசுலாவின் Isla Margarita வில் இடம்பெற்ற தென்னமெரிக்க நாடுகளின் முதலாவது சக்தி மாநாட்டில் அமைப்பின் பெயர் 'தென்னமெரிக்க நாடுகளின் ஒன்றியம்' (Union of South American Nations – UNASUR) என அங்கீகரிக்கப்பட்டது.

தென்னமெரிக்க நாட்டு அரச தலைவர்களின் 3 ஆவது சந்திப்பே UNASUR அமைப்பின் முதலாவது உச்சி மாநாடாகும். 2008 மே 23 இல் பிரேசிலின் பிரேசிலியாவில் இடம்பெற்ற அம்மாநாட்டிலேயே UNASUR ஒப்பந்தம் கைச்சாத்தானது. ஒப்பந்தப்படி அமைப்பின் தலைமையகம் ஈக்வடோரின் Quito வில் அமைந்திருக்கும். குறித்த ஒப்பந்தம் 2011 மார்ச் 11 இல் நடைமுறைக்கு வந்தது.

அரச தலைவர்களின் முதலாவது சந்திப்பு 2005 செப்டெம்பர் 29 - 30 இல் பிரேசிலியாவிலும் 2 ஆவது சந்திப்பு 2006 டிசெம்பர் 8 - 9 இல் பொலீவியாவின் Cochamamba விலும் இடம்பெற்றது. தென்னமெரிக்க பாராளுமன்றம் Cochabamba விலும் தெற்கு வங்கி வெனிசுலாவின் Caracus இலும் அமைந்துள்ளது.

2019 ஏப்ரலில் ஆர்ஜன்டீனா, பிரேசில், சிலி, கொலம்பியா, பரகுவே, பெரு ஆகிய 6 நாடுகள் அமைப்பிலிருந்து இடைநிறுத்தப்பட்டன. 2018 ஒகஸ்டில் கொலம்பியாவும் 2019 மார்ச்சில் பிரேசிலும் விலகின. 2019 மார்ச் 13 இல் ஈக்வடோரும் 2020 மார்ச் 10 இல் உருகுவேயும் விலகின.

| உச்சி மாநாடுகள் 8 (2008 – 2014) | | | | |
|---|---|---|---|---|
| No. | Date | Country | Host | Host leader |
| 1st | 15 September 2008 | Chile | Santiago de Chile | Michelle Bachelet |
| 2nd | 10 August 2009 | Ecuador | Quito | Rafael Correa |
| 3rd | 28 August 2009 | Argentina | Bariloche | Cristina Fernández de Kirchner |
| 4th | 26 November 2010 | Guyana | Georgetown | Bharrat Jagdeo |
| 5th | 29 October 2011 | Paraguay | Asunción | Fernando Lugo |
| 6th | 30 November 2012 | Peru | Lima | Ollanta Humala |
| 7th | 30 August 2013 | Suriname | Paramaribo | Dési Bouterse |
| 8th | 4 December 2014 | Ecuador | Guayaquil | Rafael Correa |

| |
|---|
| Spanish: *Unión de Naciones Suramericanas* – **UNASUR** |
| **Motto:** "Soy del Sur" (I am from the South) / |

| **PROSUR** |
|---|
| 2019 ஜனவரியில் PROSUR எனும் பெயரில் புதிய அமைப்பை உருவாக்க வெனிசுலா அழைப்பு விடுத்தது. 2019 மார்ச் 22 இல் PROSUR மாநாடு (வெனிசுலா இல்லாமல்) சிலியில் இடம்பெற்றது. |

# 53

## பசிபிக் கூட்டணி
## (Pacific Alliance)

*பசிபிக் பிராந்திய ஒருங்கிணைப்பின் ஒரு ஆரம்பமாக சிலி, கொலம்பியா, மெக்சிகோ, பெரு ஆகிய 4 முக்கிய லத்தீன் அமெரிக்க நாடுகளால் 'லீமா பிரகடனத்தின்'* (Declaration of Lima) *மூலம் 2011 ஏப்ரல் 28 இல் பசிபிக் கூட்டணி தாபிக்கப் பட்டது. பசிபிக் கூட்டணி உலகில் பொருளாதார பலத்திலும் ஏற்றுமதியிலும் 8 ஆவது சக்தியாக விளங்குகின்றது. அடிப்படை யில் இதுவொரு வர்த்தக அமைப்பாகும்.*

*பொருட்கள், சேவைகள், வளங்கள், மக்கள் ஆகியவற்றின் சுதந்திர நகர்வு, அரசியல்- சமூக– பொருளாதார- வர்த்தக விருத்தி என்பன இக்கூட்டணியின் முக்கிய நோக்கங்களாகும். மேலும் சுற்றாடல் பாதுகாப்பு, காலநிலை மாற்றம் குறித்த விஞ்ஞான ஆய்வு வலைப்பின்னல், கல்விப்புல - மாணவர் பரிமாற்றம், கலாசார மேம்பாடு, பாதுகாப்பான சந்தை முறை, உயர்தர நிறுவனக் கட்டமைப்பு, சுற்றுலா தொடர்பான ஒத்துழைப்பு*

என்பனவும் அமைப்பின் செயற்பாடுகளாகும்.

| List of Summits | | | |
|---|---|---|---|
| **No.** | **Date** | **Host country** | **Location held** |
| **1.** | 28 April 2011 | Peru | Lima |
| **2.** | 4 December 2011 | Mexico | Merida |
| **3.** | 5 March 2012 | None | None |
| **4.** | 6 June 2012 | Chile | Antofagasta |
| **5.** | 17 November 2012 | Spain | Cadiz |
| **6.** | 27 January 2013 | Chile | Santiago |
| **7.** | 20–23 May 2013 | Colombia | Cali |
| **8.** | 8–10 February 2014 | Colombia | Cartagena de Indias |
| **9.** | 19–20 June 2014 | Mexico | Nayarit |
| **10.** | 1–3 July 2015 | Peru | Paracas |
| **11.** | 1 July 2016 | Chile | Puerto Varas |
| **12.** | 29–30 June 2017 | Colombia | Cali |
| **13.** | 24–25 July 2018 | Mexico | Puerto Vallarta |
| **14.** | 5–6 July 2019 | Peru | Lima |

# 54

## லத்தீன் அமெரிக்க, கரீபியன் நாடுகளின் சமூகம் (CELAC)

(Community of Latin American and Caribbean States)

*லத்தீன் அமெரிக்க, கரீபியனைச் சேர்ந்த நாடுகள் அரசியல் ரீதியான கலந்துரையாடலுக்காக **2011** டிசெம்பர் **3** இல் வெனிசுலாவின்* Caracas *இல் தாபித்துக் கொண்ட அமைப்பே 'லத்தீன் அமெரிக்க, கரீபியன் நாடுகளின் சமூகம்'* (CELAC) *ஆகும். **2010** பெப்ரவரி **23** இல் மெக்சிகோவின்* Playa del Carmen *இல் **21** ஆவது* Rio Group *உச்சி மாநாடும் **2** ஆவது ஒருங்கிணைப்பு, அபிவிருத்தி குறித்த லத்தீன் அமெரிக்க, கரீபியன் உச்சி மாநாடும்* (CALC) *இணைந்த 'ஐக்கிய உச்சி மாநாட்டின்'* (the Unity Summit) *போது* CELAC *அமைப்பை உருவாக்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.*

*லத்தீன் அமெரிக்காவின் சகல **33** நாடுகளால் தாபிக்கப்பட்ட இவ்வமைப்பில் தற்போது **32** நாடுகள் அங்கம் வகிக்கின்றன. லத்தீன் அமெரிக்காவின் முதன்மை பொருளாதார சக்தியான பிரேசில் **2020** ஜனவரியில் அமைப்பிலிருந்து இடைநிறுத்தப்*

பட்டது. சமூக அபிவிருத்தி, கல்வி, அணுவாயுதப் பரிகரணம், குடும்ப விவசாயம், கலாசாரம், நிதி, சக்தி, சுற்றாடல் போன்ற விடயங்களில் பிராந்திய நாடுகள் மத்தியில் கௌரவமான கலந்துரையாடலுக்கு இவ்வமைப்பு உதவுகிறது. இதன்மூலம் பிராந்திய ஒருங்கிணைப்பு, நிலையான அபிவிருத்தி, அரசியல் ஒத்துழைப்பு என்பன எதிர்பார்க்கப்படுகின்றன.

4 ஆவது உச்சி மாநாடு ஈக்குவடோரில் இடம்பெற்ற போது Zika வைரஸ் மற்றும் அப்போதைய பொருளாதார நெருக்கடி பற்றியும் 5 ஆவது உச்சி மாநாடு டொமினிகன் குடியரசில் இடம் பெற்ற போது ஐக்கிய அமெரிக்க - கியூப உறவு மற்றும் கட்டாயப்படுத்தல் பொருளாதாரக் கொள்கை பற்றியும் கவனம் செலுத்தப்பட்டது.

| **Summits** | | | |
|---|---|---|---|
| **No.** | **Date** | **City** | **Country** |
| **1.** | 2011 December 3 (1st) | Caracas | Venezuela |
| **2.** | 2013 January 28 (2nd) | Santiago | Chile |
| **3.** | 2014 January 28 (3rd) | Havana | Cuba |
| **4.** | 2015 January 29 | Belen | Costa Rica |
| **5.** | 2016 January 27 (4th) | Quito | Ecuador |
| **6.** | 2017 January 25 (5th) | Punta Cana | Dominican Republic |
| **7.** | 2019 January | | Bolivia |
| **8.** | 2020 January | | Mexico |

# செயலிழந்த பாதுகாப்பு அமைப்புகள்

| இல. | அமைப்பு | ஆரம்பம் |
|---|---|---|
| **55.** | சர்வதேச கழகம் (LN) | 1920 January |
| **56.** | அன்சஸ் (ANZUS) | 1952 April |
| **57.** | சியாடோ (SEATO) | 1955 February |
| **58.** | சென்டோ (CENTO) | 1955 February |
| **59.** | வார்ஸோ (WARSAW) | 1955 May |

சர்வதேச ரீதியாகவோ அல்லது பிராந்திய ரீதியாகவோ பாதுகாப்புக் கருதி உருவாகிய சில அமைப்புகள் தற்போது நடைமுறையில் காணப்பட வில்லை. எனினும் அவை குறித்த கற்கை கடந்த கால சர்வதேச அரசியல் போக்கை அறிந்து கொள்ள பெரிதும் உதவுகின்றது.

# 55

## சர்வதேச கழகம் (LN)

(League of Nations)

***1914 - 1918*** *காலப்பகுதியில் இடம்பெற்ற முதலாம் உலக மகா யுத்தத்தைத் தொடர்ந்து இனியொரு உலக யுத்தம் இடம் பெறாமல் சமாதானத்தைப் பாதுகாக்கும் நோக்கில்* ***1920*** *ஜனவரி* ***10*** *ஆம் திகதி சர்வதேச அரசு சார்பு அமைப்பான 'சர்வதேச சங்கம்' தாபிக்கப்பட்டது. கூட்டுப் பாதுகாப்பு, ஆயுதப் பரிக ரணம் இதன் முக்கிய அம்சங்களாக இருந்தன.*

*சர்வதேச அமைதி, பாதுகாப்புக்காக சர்வதேச சங்கம் அமைக் கப்பட வேண்டுமென்பதை ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி வூட்ரோ வில்சன்* ***1919*** *பாரிஸ் சமாதான மாநாட்டில் வெளி யிட்ட* ***14*** *அம்சத் திட்டத்தில் குறிப்பிட்டிருந்தார். இதற்காகவே அவர் சர்வதேச நோபல் சமாதான விருதைப் பெற்றார். இதன்படி சர்வதேச சங்கம்* ***1919*** *ஜூன்* ***28*** *இல் கைச்சாத்திடப் பட்ட வேர்செய்ல்ஸ் உடன்படிக்கையின்* (Treaty of Versailles) *ஒரு பகுதியாக தாபிக்கப்பட்டது. செனட் அங்கீகரிக்காததால்*

ஐக்கிய அமெரிக்கா அமைப்பில் சேரவில்லை.

பொதுச்சபை (Assembly), பேரவை (Council), நிரந்தரச் செயலகம் (Permanent Secretariat), சர்வதேச நீதிமன்றம் (ICJ) ஆகிய கட்டமைப்பினைக் கொண்டிருந்தது. பொதுச்சபையில் ஆரம்பத்தில் 42 அடிப்படை அங்கத்துவ (Founder Members) நாடுகள் இருந்தன. ஒரு நாட்டுக்கு 3 பிரதிநிதிகளும் ஒரு வாக்கும் வழங்கப்பட்டிருந்தது. புதிய அங்கத்துவ நாடொன்றை 2/3 பெரும்பான்மையில் சேர்க்கலாம். வருடாந்தம் ஜெனீவாவில் கூடும். நீதிபதிகளை நியமித்தல், வரவு-செலவுத் திட்டம் தயாரித்து நிறைவேற்றல், சர்வதேச பிரச்சினைகளை ஆராய்தலும் விவாதித்த லும் ஆகிய முக்கிய செயற்பாடுகளை மேற்கொண்டது.

பேரவையானது பிரித்தானியா, பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான் ஆகிய 4 நிரந்தர அங்கத்துவ நாடுகளையும் 4 தற்காலிக அங்கத்துவ நாடுகளையும் கொண்டிருந்தது. இவை 3 வருடத்துக்கென பொதுச்சபையால் தெரிவாகின. பேரவையின் கட்டமைப்பு அடிக்கடி மாற்றப்பட்டன. பின்னர் 5 ஆவது நிரந்தர அங்கத்துவ நாடாக ஜேர்மனியும் சேர்த்துக் கொள்ளப்பட்டது. தற்காலிக அங்கத்துவ எண்ணிக்கை 1922 இல் 6 ஆகவும் 1926 இல் 9 ஆகவும் பின்னர் 11 ஆகவும் அதிகரிக்கப்பட்டது. ஜேர்மனியும் ஜப்பானும் விலகியதுடன் சோவியத் றஷ்யா நிரந்தர அங்கத்துவ நாடானதும் அங்கத்துவ எண்ணிக்கை 15 ஆனது. பேரவை வருடத்துக்கு 4 தடவைகள் கூடும். பொதுச்சபையின் தீர்மானங்களைச் செயற் படுத்தலும் உலக அமைதியைப் பேணலும் பேரவையின் பிரதான கடமைகளாகும்.

செயலகம் ஜெனீவாவில் அமைந்திருந்தது. பொதுச் செயலாளர் தலைமையில் இயங்கியது. நிருவாகத் தேவைக்காக 15 பிரிவுக ளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சர்வதேச நீதிமன்றம் 1921 இல் ஹேக் நகரில் தாபிக்கப்பட்டது. 11 நீதிபதிகளும் 4 துணை நீதி பதிகளும் 9 வருட பதவிக் காலத்துக்கு நியமிக்கப்பட்டனர். அங்கத்துவ நாடுகளின் வழக்குகளை விசாரணை செய்யும் அதிகா ரம் கொண்டிருந்தது.

*1919 இல் தாபிக்கப்பட்ட சர்வதேச தொழிலாளர் தாபனம் (ILO) சர்வதேச சங்கத்தின் ஒரு முக்கிய நிறுவனமானது. சர்வதேச சங்கம் செயலிழந்த போதிலும் ஐ.நா. வின் முக்கிய நிறுவனமாக ILO தொடர்ந்தும் தொழிற்பட்டு வருகிறது. (2 winks – ICJ & ILO)*

*1921 இல் அல்பேனியா மீது யூகோஸ்லேவியாவும் 1925 இல் கிரேக்கத்தின் மீது பல்கேரியாவும் நடத்திய தாக்குதல்களை தடுத்து நிறுத்த சர்வதேச சங்கம் மேற்கொண்ட முயற்சிகள் வரவேற்கப்பட்டன. எனினும் சர்வதேச சங்கத்தில் இணைந்து செயற்படுவதிலிருந்து ஐக்கிய அமெரிக்கா ஒதுங்கியிருந்தமை, பிரித்தானியாவுக்கும் பிரான்சுக்கும் இடையிலான போட்டி நிலை என்பன சர்வதேச சங்கம் தோல்வியடைய முக்கிய காரணங்களா கும்.*

*எந்தக் கூட்டுப் பாதுகாப்புக் குறிக்கோளைக் கொண்டு சர்வதேச சங்கம் தாபிக்கப்பட்டதோ அது நிறைவேற்றப்படவில்லை. 1923 இல் கிரேக்கத் தீவான Corfu, 1934 இல் அபீசீனியா (எதியோப் பியா) என்பன இத்தாலியினால் ஆக்கிரமிக்கப்பட்டமை, 1931 இல் சீனாவின் மஞ்சூரியா, 1937 இல் சங்காய் மீதான ஜப்பானிய ஆக்கிரமிப்பு, 1938 இல் ஒஸ்ட்ரியா, 1939 இல் செகோஸ்லோவாக் கியா மீதான ஜேர்மனிய ஆக்கிரமிப்பு போன்றவற்றை சர்வதேச சங்கத்தினால் கட்டுப்படுத்த முடியவில்லை.*

*இவ்வமைப்பில் ஐக்கிய அமெரிக்கா உட்பட உலக நாடுகள் பல அங்கம் வகிக்கவில்லை. அங்கத்துவ நாடுகள் பலவும் விலகின. எந்தவொரு தீர்மானத்தையும் அங்கீகரிக்க முடியாதிருந்தது. எந்தவொரு நடவடிக்கையையும் பலவந்தமாக மேற்கொள்ளும் அதிகாரம் இருக்கவில்லை.*

*2 ஆம் உலக மகா யுத்தத்தைத் தடுக்கக்கூடிய வல்லமை இல்லாத தோடு 1939 இல் சர்வதேச சங்கம் தோல்வியடைந்தது. எனினும் 2 ஆம் உலக மகா யுத்த முடிவில் 1945 இல் ஐக்கிய நாடுகள் சபை உருவாக முக்கிய ஒரு மாதிரியாக சர்வதேச சங்கம் விளங்கியி ருந்தது.*

*1926 இல் ஜேர்மனி சேர்ந்து 1933 இல் விலகியது. 1934 இல் றஷ்யா சேர்ந்து 1939 இல் நீக்கப்பட்டது. 1932 இல் துருக்கி சேர்ந்தது. 1933 இல் ஜப்பான் விலகியது. 1937 இல் எகிப்தும் இத்தாலியும் சேர்ந்தது. 1939 இல் ஹங்கேரி விலகியது. 1934 இல் ஈக்வடோர் சேர்ந்தது. 1935 இல் பரகுவே வெளியேறியது.*

*1920 இல் ஆரம்ப அடிப்படை அங்கத்துவ நாடுகள் 42 இருந்தன. 1935 இல் ஆகக்கூடிய அங்கத்துவ நாடுகளாக 58 காணப்பட்டிருந்தன. 1946 ஏப்ரல் 20 ஆம் திகதி சர்வதேச சங்கம் கலைக்கப்படும் போது 23 அங்கத்துவ நாடுகள் இருந்தன. சர்வதேச சங்கத்தின் சொத்துக்கள் அனைத்தும் ஐ.நா. சபையிடம் சட்ட ரீதியாக ஒப்படைக்கப்பட்டன.*

# 56

## அன்ஸஸ் (ANZUS)

(Australia, New Zealand, United States)

அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகள் தமது கூட்டுப் பாதுகாப்புக்காக 1951 செப்டெம்பர் 1 இல் சன்பிரான்சிஸ்கோவில் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தின் மூலம் தாபிக்கப்பட்ட அமைப்பே 'அன்ஸஸ்' (Australia, New Zealand, United States – ANZUS) ஆகும். 1952 இல் நடைமுறைக்கு வந்தது. பசிபிக் சமுத்திரத்தில் இராணுவ விடயங்களில் தமக்கிடையே ஒத்துழைத்து செயற்படுவது அமைப்பின் நோக்கமாகும். இதனால் இவ்வமைப்பு 'பசிபிக் பாதுகாப்பு ஒப்பந்தம்' (Pacific Security Treaty) எனவும் அழைக்கப்பட்டது.

பனிப்போர் காலத்தில் கொம்யூனிச அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் ஒரு யுக்தியாகவே ஐக்கிய அமெரிக்கா ANZUS உடன்படிக்கையைச் செய்து கொண்டதாகக் கருதலாம். குறிப்பாக 1949 இல் சீன கொம்யூனிச வெற்றியும் 1950 - 1953 கால கொரிய யுத்தமும் மேற்குலகை பலப்படுத்த இத்தகைய அவசியத்தை ஏற்படுத்தியது.

எனினும் 1980 களின் நடுப்பகுதியில் நியூசிலாந்து 'அணுவாயுதம் அற்ற வலயமாக' (Nuclear-free Zone) தமது கடல் பிராந்தியத்தில் நடவடிக்கைகளை ஆரம்பித்ததால் தமது நாட்டுத் துறைமுகங்களில் அமெரிக்கா உட்பட எந்தவொரு நாட்டின் அணுவாயுதக் கப்பல்களும் தரிப்பதற்கு தடை விதித்தது. இதனால் 1986 இல் நியூசிலாந்து இடைநிறுத்தப்பட்ட நிலையில் 2 நாடுகளுடன் ANZUS சுருங்கிப் போனது.



*1982 இல் ஒரு இராணுவ ஒத்திகையின் போது அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளின் விமானங்கள்*

# 57



## தென்கிழக்கு ஆசிய ஒப்பந்த அமைப்பு (SEATO)

(Southeast Asia Treaty Organization)

*'தென்கிழக்காசிய ஒப்பந்த அமைப்பு' (சியாட்டோ), 1955 - 1977 காலப்பகுதியில் செயற்பட்ட பிராந்திய கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தமாகும். இது 1954 செப்டெம்பர் 8 ஆம் திகதி பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் கைச்சாத்திடப்பட்டது. 1955 பெப்ரவரி 19 இல் நடைமுறைக்கு வந்த இவ்வமைப்பில் அவுஸ்திரேலியா, பிரான்ஸ், நியூசிலாந்து, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய 8 நாடுகள் அங்கம் வகித்தன.*

*சோவியத் றஷ்யா மூலம் பரவிவரும் பொதுவுடைமைவாதத்தை தடுத்துக் கொள்வதே அமைப்பின் பிரதான நோக்கமாகும். மேலும் அங்கத்துவ நாடுகளின் பாதுகாப்புத் திறனை வளர்த்தல், பொருளாதார ஒத்துழைப்பு, அரசைக் கவிழ்க்க மேற்கொள்ளப்படும் சதிகளைத் தடுத்தல் என்பனவும் அமைப்பின் முக்கிய குறிக்கோள்களாகும்.*

*பாகிஸ்தானுக்கு இந்தியா, தாய்லாந்துக்கு வியட்நாம், கம்போடியா, செஞ்சீனா (Red China) ஆகியவற்றுடன் பிரச்சினைகள் இருந்ததால் இக்கூட்டு தேவைப்பட்டது. எனினும் இவ்வாறான ஒப்பந்தங்கள் மூலம் ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானிய போன்றன மீண்டும் தமது நாடுகளுக்குள் ஏகாதிபத்தியத்தை நிலைநிறுத்தலாம் என்ற அச்சம் ஏற்பட்டது.*

*1968 இல் பாகிஸ்தான் அமைப்பிலிருந்து விலகியது. 1975 இல் பிரான்ஸ் அமைப்புக்கான நிதியுதவியை நிறுத்தியது. 1976 பெப்ரவரி 20 இல் அமைப்பு இறுதியாக செயற்பட்டது. 1977 ஜூன் 30 இல் முறைப்படி முடிவுக்கு வந்தது.*

# 58



## மத்திய ஒப்பந்த அமைப்பு (CENTO)

(Central Treaty Organization)

*'பக்தாத் ஒப்பந்த அமைப்பு'* (Baghdad Pact Organization) *என பொதுவாக அறியப்பட்ட 'மத்திய கிழக்கு ஒப்பந்த அமைப்பு'* (Middle East Treaty Organization) ***1955*** *இல் ஆரம்பிக்கப் பட்டது. பரஸ்பரம் பாதுகாப்பு உதவி வழங்கும் ஒரு இராணுவ கூட்டமைப்பான இதில் துருக்கி, ஈரான், ஈராக், பாகிஸ்தான், பிரித் தானியா ஆகிய நாடுகள் அங்கம் வகித்தன. தலைமையகம் பக் தாதில் இருந்தது.*

*ஈராக், துருக்கி ஆகியன தமது பாதுகாப்புக்காக பக்தாதில் செய்து கொண்ட ஒப்பந்தமே மத்திய ஒப்பந்த அமைப்பாகும். மத்திய கிழக்கின் பாதுகாப்புக்காக எந்தவொரு நாடும் இவ்வமைப் பில் சேரலாம்.* ***1955*** *ஏப்ரலில் பிரித்தானியாவும்* ***1955*** *ஜூலையில் ஈரானும் சேர்ந்தன.* ***1959*** *இல் ஈராக்கில் இடம்பெற்ற அரசியல் மாற்றத்தினால் ஈராக் அமைப்பிலிருந்து விலகியது.*

சோவியத் றஷ்யாவின் ஊடுருவலைத் தடுக்க தமக்கிடையே ஐக்கியத்தை உருவாக்கி அமைப்பு ரீதியான பாதுகாப்பைப் பலப்படுத்துவதே இதன் முக்கிய குறிக்கோளாகும். இந்நிலை ஐக்கிய அமெரிக்காவுக்கு சாதகமாக இருந்ததால் அந்நாடு CENTO வுக்கு ஆதரவு வழங்கியது. அங்கத்துவ நாடுகளுக்கிடையிலான முரண்பாடுகளால் - குறிப்பாக ஐக்கிய அமெரிக்காவின் சில சுயநல நடவடிக்கைகளால் மத்திய கிழக்கு நாடுகளுக்கிடையே பதற்றநிலை அதிகரித்து அமைப்பின் குறிக்கோளை அடையமுடியாதிருந்தது.

ஐக்கிய அமெரிக்கா CENTO வுக்கு உதவினாலும் இஸ்ரேலுடனான நெருங்கிய உறவினால் அங்கத்துவ நாடுகள் ஐக்கிய அமெரிக்காவுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கத் தொடங்கின. CENTO அமைப்பு ஆரம்பத்தில் சோவியத் றஷ்யாவுக்கு எதிராக உருவான போதிலும் பிற்காலத்தில் றஷ்யாவுடன் இந்நாடுகள் நட்புறவானமை குறிப்பிடத்தக்கது. துருக்கி இவ்வுடன்படிக்கைக்கு அடிப்படையாக இருந்த போதிலும் பிற்பட்ட காலத்தில் மத்திய கிழக்கு நாடுகளுடனான பிணக்குகள் காரணமாக ஒதுங்கி விட்டது.

1959 இல் அமைப்பிலிருந்து ஈராக் வெளியேறியதுடன் ஐக்கிய அமெரிக்கா அமைப்பின் இணை அங்கத்துவ நாடாக இணைந்து கொண்டதோடு அமைப்பின் பெயர் 'மத்திய ஒப்பந்த அமைப்பு' (CENTO) என மாற்றப்பட்டு அங்காராவை தலைமையகமாகக் கொண்டு 1979 வரை செயற்பட்டது.

மத்திய கிழக்கு எண்ணெய் உற்பத்தியோடு தொடர்புபட்டும் சோவியத் றஷ்யாவுக்கு எதிரான ஒரு சக்தியாகவும் செயற்பட்டு வந்த சென்டோ அமைப்பு 1979 இல் ஷா (Shah) மன்னரின் வீழ்ச்சியோடு ஈரான் அமைப்பிலிருந்து வெளியேறியதும் கலைக்கப்பட்டது.

# 59

## வார்சோ (WARSAW)

NATO அமைப்பைப் போன்றதும் NATO அமைப்புக்கு எதிராக வும் உருவாக்கப்பட்ட இராணுவக் கூட்டமைப்பே WARSAW ஆகும். இவ்வொப்பந்தம் போலாந்து தலைநகர் WARSAW இல் *1955* மே *14* இல் செய்து கொள்ளப்பட்டது. அல்பேனியா, பல்கேரியா, ஹங்கேரி, செகோஸ்லோவாகியா, கிழக்கு ஜேர்மனி, போலாந்து, ரொமேனியா, சோவியத் றஷ்யா ஆகிய *8* நாடுகள் இதில் இருந்தன. இவ்வொப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது மக்கள் சீனக் குடியரசிலிருந்து ஒரு பார்வையாளர் பிரசன்னமாகி இருந்தார்.

முதலாளித்துவ சித்தாந்தத்துக்காகவும் பரஸ்பரப் பாதுகாப் புக் கருதியும் ஐக்கிய அமெரிக்கா தலைமையில் NATO உருவாக் கப்பட்டது போலவே கொம்யூனிச சித்தாந்தத்திற்காகவும் பரஸ் பரப் பாதுகாப்புக் கருதியும் சோவியத் றஷ்யா தலைமையில் WAR SAW தாபிக்கப்பட்டது.

சமாதான முறையில் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்பதையும் ஆயுதக் குறைப்புப் பிரச்சினை எழுகின்ற போது கலந்துரையாடல், பரஸ்பரப் பாதுகாப்பு கவனத்திற் கொள்ளப்பட வேண்டும் என்பதையும் WARSAW வலியுறுத்தியது.

குறிப்பாக எதேச்சாதிகாரமுள்ள முதலாளித்துவ நாடுகளை ஒன்றுபட்டு எதிர்க்கும் வகையிலும் அங்கத்துவ நாடொன்று தாக்கப்பட்டால் அங்கத்துவ நாடுகள் அனைத்தும் தாக்கப்பட்டதாகக் கருதி கூட்டுப் பாதுகாப்பு (Collective Security) நடவடிக்கை மேற்கொள்ளும் வகையிலும் செயற்பட்டு வந்தது.

ஐரோப்பாவுக்கான கூட்டுப் பாதுகாப்பு உருவாகும் பட்சத்தில் WARSAW கலைக்கப்படுவதாகவும் உடன்பாடிருந்தது. எனினும் **1975** இல் ஹெல்சிங்கி ஒப்பந்தத்தில் ஐரோப்பிய உடன்பாட்டுக்கான இணக்கம் காணப்பட்ட பின்னரும் **1985** இல் அடுத்த **20** வருடங்களுக்கு WARSAW புதுப்பிக்கப்பட்டிருந்தது.

சோவியத் றஷ்யாவின் தலைமையில் ஒரு கூட்டு இராணுவம் அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. **1961** முதல் சோவியத் தலைமையிலான கூட்டு இராணுவ ஒத்திகை அங்கத்துவ நாடுகளில் அடிக்கடி இடம்பெற்றது. இதன்மூலம் இராணுவ பலம் வெளியுலகுக்கு நிரூபிக்க முயற்சிக்கப்பட்டது.

WARSAW நாடுகளில் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட பிரச்சினைகள் அடக்கப்பட்டன. **1956** இல் ஹங்கேரி புரட்சியும் **1961** இல் செகோஸ்லோவாகியா புரட்சியும் அடக்கப்பட்டன. **1961** இல் அல்பேனியா அமைப்பிலிருந்து விலகியது. **1960** இலிருந்து ரொமேனியா அமைப்பில் ஈடுபாடு காட்டுவதைத் தவிர்த்து வந்தது.

பொதுவுடைமைச் சித்தாந்தத்திலிருந்தும் WARSAW அமைப்பிலிருந்தும் அங்கத்துவ நாடுகள் விடுபடத் தொடங்கியதும் **1990** இல் சோவியத் றஷ்யா சீர்குலைந்ததும் WARSAW அமைப்பு செயலிழந்து போனது. WARSAW நாடுகள் பலவும் NATO அமைப்பில் அங்கத்துவம் பெற்றுள்ளன.

# சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகள்

| இல. | அமைப்பு | ஆரம்பம் |
|---|---|---|
| 60. | சர்வதேச செஞ்சிலுவைக் குழு (ICRC) | 1863 February |
| 61. | சர்வதேச மன்னிப்புச் சபை (AI) | 1963 September |
| 62. | மனித உரிமைகள் கண்காணிப்பு (HRW) | 1978 |

சர்வதேச அரசு சாரா அமைப்புகள் தனி நபர்களால் அல்லது சிலரால் ஏதேனும் நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெறுகின்றன. கால ஓட்டத்தில் அவற்றில் சில உலகளவில் பிரபல்யம் பெற்று அதிக வளர்ச்சி காண்கின்றன.

# 60

ICRC

## சர்வதேச செஞ்சிலுவைக் குழு (ICRC)

(The International Committee of the Red Cross)

*சர்வதேச செஞ்சிலுவைக் குழு* ***1863*** *இல் தாபிக்கப்பட்டது. எனினும்* ***1864*** *இல் ஜெனீவா மாநாட்டில்* (Geneva Convention) *உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. இதுவொரு சர்வதேச அரச சார்பற்ற - மனிதாபிமான அமைப்பாகும். இவ்வமைப்பில் உலகம் பூராகவும் சுமார்* ***97*** *மில்லியன் தன்னார்வ தொண்டர்கள் பணியாற்றுகின்றனர்.*

*சுவிஸ்ட்சர்லாந்தைச் சேர்ந்த* Henry Dunant *இதனைத் தாபித்தார்.* ***1859*** *இல் வட இத்தாலியின் 'சொல்பெரினோ' வில் இடம்பெற்ற யுத்தத்தில் காயமடைந்த ஆயிரக்கணக்கான பிரான்ஸ், ஒஸ்ட்ரியா, இத்தாலி போர் வீரர்கள் எவ்வித மருத்துவ வசதிகளுமின்றி துன்புற்றிருந்த நிலையைக் கண்ட ஹென்றி டுணான்ட் அவ்வாறானவர்களுக்கு உதவுவதற்கு முன்வந்தார். 'சொல்பெரினோ நினைவு'* (A Memory of Solferino – 1862) *எனும் அவரது நூலில் இதுகுறித்த விடயங்களை*

வெளியிட்டார்.

**1863** இல் ஹென்றி டுணான்ட் உட்பட்ட **5** ஜெனீவாக்காரர்களால் 'சர்வதேச நிவாரணத் தேவையுடையோருக்கான குழு' (The International Committee for Relief to the Wounded) தாபிக்கப்பட்டது. பின்னர் 'சர்வதேச செஞ்சிலுவைக் குழு' (ICRC) என பெயர் மாற்றம் பெற்றது. தொடர்ந்த ஆண்டுகளில் **12** அரசுகளே ஜெனீவா மாநாட்டை அங்கீகரித்தன. மனிதாபிமான வரலாற்றில் செஞ்சிலுவைச் சங்கத்தின் பணியானது யுத்த களத்தில் நடுநிலையாக நின்று தேவையுடையோருக்கு கவனிப்பும் மருத்துவ சேவையும் வழங்குவதாகும்.

**1965** வியன்னா சர்வதேச மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனிதாபிமானம் (Humanity), பாரபட்சமின்மை (Impartiality), நடுநிலைமை (Neutrality), சுதந்திரம் (Independence), தன்னார்வ சேவை (Voluntary Service), பரந்த வியாபகம் (Universality), ஒற்றுமை (Unity) ஆகிய **7** அடிப்படைக் கோட்பாடுகளின்படி செயற்பட்டு வருகிறது. **1986** இல் இவை ICRC இன் உத்தியோகபூர்வ கோட்பாடுகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

**ICRC இன் நோக்கங்கள் வருமாறு.**

- எந்தவொரு இடத்திலும் மனித சமூகத்துக்கு நேர்கின்ற துன்பகரமான நிகழ்வுகளைத் தவிர்ப்பதற்கு - குறைப்பதற்கு முயற்சி செய்தல்
- மனித சமூகத்தின் கௌரவத்தைப் பேணும் வகையில் செயற்படல்
- அனைவரது நம்பிக்கையையும் பெறக்கூடியவாறு விவாதத்திற்குள்ளாகாமல் பக்கச் சார்பற்ற முறையில் நடந்து கொள்ளல்
- இலாப நோக்கற்ற முறையில் தொண்டர் அடிப்படையில் நிவாரணம் வழங்குதல்
- ஒரு நாட்டில் ஒரு செஞ்சிலுவைச் சங்கக் கிளையை மாத்திரம் நிறுவுதல்

- *செஞ்சிலுவைச் சங்கமானது நாட்டின் எல்லாப் பிரஜைகளுக் கும் திறந்ததாகும். நாட்டு எல்லைக்குள் மனித இனத்தின் நன்மை கருதி செயற்படல்.*
- *இன, மத, சாதி பேதமின்றி நபர்களின் தேவைகளை நிறைவேற் றுதல்.*
- *அந்தந்த நாடுகளின் சட்ட திட்டங்களுக்கும் செஞ்சிலுவை சங்கத்தின் கொள்கைகளுக்கும் அமைவாகச் செயற்படல்.*

*1948 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் மே 8 ஆந் திகதி சர்வதேச செஞ்சிலுவை மற்றும் சர்வதேச செம்பிறை தினம்* (International Red Cross and Red Crescent Day) *உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. (ஹென்றி டுணான்ட் பிறந்த நாள் - 1828 மே 8)*

*1949 ஜெனீவா மாநாட்டின்படி உலக நாடுகள் பலவும்* ICRC *இன் செயற்பாடுகளை அங்கீகரித்துள்ளன.* ICRC *இன் செயற்பாடு களுக்கான நிதி அரசாங்கங்கள், தனிநபர்கள் மற்றும் நாடுகளி லுள்ள செஞ்சிலுவை, செம்பிறைச் சங்கங்களிலிருந்து நன்கொ டையாகக் கிடைக்கின்றது. தலைமையகம் ஜெனீவாவில் அமைந் துள்ளது. உலகில் எந்தவொரு நாட்டிலும் செஞ்சிலுவைச் சங்கக் கிளை தாபிக்கப்பட முடியும். அதில் அந்நாட்டைச் சேர்ந்த எந்த வொரு நபரும் அங்கத்துவமாக முடியும்.*

*1864 - 1949 காலப்பகுதியில் ஜெனீவாவில் செய்து கொள்ளப் பட்ட தொடர் ஒப்பந்தங்களே 'ஜெனீவா ஒப்பந்தம்'* (Geneva Covention) *எனப்படுகின்றது. 1949 ஒகஸ்ட் 12 இல் 4 ஜெனீவா ஒப்பந்தங்களும் 1977 ஜூன் 8 இல் அவ்வொப்பந்தங்களுக்கான 2 பிற்சேர்க்கைகளும்* ICRC *செயற்பாடுகளின் சட்ட ரீதியான அடிப் படைகளாகும். அவை வருமாறு.*

### *1949 ஆம் ஆண்டின் 4 ஒப்பந்தங்கள்*

1. *யுத்த வேளையில் களத்தில் நோயுற்ற, காயமடைந்த படை வீரர்களுக்கான பாதுகாப்பு*
2. *யுத்த வேளையில் கடலில் நோயுற்ற, காயமடைந்த, கப்பலின்*

அழிவினால் பாதிக்கப்பட்ட படைவீரர்களுக்கான பாது காப்பு

3. யுத்தக் கைதிகள் நடத்தப்படும் விதம்

4. யுத்த காலத்தில் பொதுமக்களின் பாதுகாப்பு

**1977 ஆம் ஆண்டின் 2 பிற்சேர்க்கைகள்**

1. சர்வதேச ஆயுத மோதல்களால் பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பு

2. சர்வதேசம் அல்லாத ஆயுத மோதல்களினால் பாதிக்கப்பட் டவர்களின் பாதுகாப்பு

**பின்வரும் ஒப்பந்தங்கள் வரைவதில் ICRC பங்களிப்புச் செய்துள்ளது.**

1. 'கண்களைக் குருடாக்கும் கதிர்வீச்சு ஆயுதங்களின் பாவனை யைத் தடுக்கும் நெறிமுறை' (பிற்சேர்க்கை) (The Protocol on Blinding Laser Weapons) – 1995.10.13

2. 'மனிதரைத் தாக்கும் மிதிவெடிகளின் பாவிப்புக்கு எதிரான மாநாடு' (ஒட்டாவா உடன்படிக்கை) (Anti–Personnel Mine Ban Convention) – 1997.12.03

3. 'சர்வதேச குற்றவியல் நீதிமன்ற' (ICC) சட்டக் கோவை - 1998

**ICRC இன் முக்கிய பிரிவுகள் வருமாறு.**

1. சர்வதேச செஞ்சிலுவைச் செயற்குழு

2. சர்வதேச செஞ்சிலுவை, செம்பிறைச் சங்கங்களின் சம்மேள னம்

3. தேசிய செஞ்சிலுவை, செம்பிறைச் சங்கங்கள்

## ‘சர்வதேச செஞ்சிலுவை, செம்பிறைச் சங்கங்களின் சம்மேளனம்’ (IFRC) (The International Federation of Red Cross and Red Crescent Societies)

முதலாம் உலக மகா யுத்தத்தைத் தொடர்ந்து ‘சர்வதேச செஞ்சிலுவை, செம்பிறைச் சங்கங்களின் சம்மேளனம்’ (The Inter national Federation of Red Cross and Red Crescent Societies – IFRC) பிரான்சிய தலைநகர் பாரிசில் 1919 இல் நிறுவப்பட்டது. தேசிய சங்கங்களின் சம்மேளனத்தைத் தாபிக்கும் முன்மொழிவை அமெரிக்க செஞ்சிலுவை யுத்தக் குழுவின் தலைவர் ஹென்றி டேவிசன் முன்வைத்தார். அவர் நடத்திய சர்வதேச மருத்துவ மாநாட்டின் போதே ‘செஞ்சிலுவைச் சங்கங்களின் கழகம்’ (Leaque of Red Cross Socities) ஆரம்பிக்கப்பட்டது.

1983 ஒக்டோபரில் ‘செஞ்சிலுவை, செம்பிறைச் சங்கங்களின் கழகம்’ என பெயர் மாற்றம் பெற்று 1991 நவம்பர் முதல் ‘சர்வதேச செஞ்சிலுவை, செம்பிறைச் சங்கங்களின் சம்மேளனம்’ (The Inter national Federation of Red Cross and Red Crescent Societ ies – IFRC) என தற்போது நடைமுறையில் உள்ளது.

முதலாம் உலக மகா யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் சுகாதாரத்தை விருத்தி செய்தலே IFRC இன் ஆரம்ப நோக்கமாக இருந்தது. ஆரம்பத்தில் பிரித்தானியா, பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா ஆகிய 5 நாடுகளின் சங்கங்களே அடிப்படை அங்கத்துவ சங்கங்களாக இருந்தன. தற்போது 190 நாடுகளிலிருந்து தலா ஒரு சங்கம் அடிப்படையில் IFRC இல் அங்கத்துவம் பெற்றுள்ளது. சர்வதேச செஞ்சிலுவை, செம்பிறைச் சங்கங்களின் சம்மேளனம் (IFRC) உலகின் மிகப்பெரும் மனிதாபிமான வலையமைப்பாகும்.

## இலங்கையில் ICRC

*1936 பெப்ரவரி 26 இல் பிரித்தானிய செஞ்சிலுவைச் சங்கக் கிளையொன்று இலங்கையில் தாபிக்கப்பட்டது. இது சுதந்திரத் தின் பின்னர் 1949 மார்ச் 31 இல் 'சிலோன் செஞ்சிலுவைச் சங்கம்' (CRC) எனப் பெயர் மாற்றம் பெற்றது.*

*சிலோன் செஞ்சிலுவைச் சங்கம் 1952 இல் ஒரு தேசிய சங்கமாக சர்வதேச செஞ்சிலுவை, செம்பிறைச் சங்க சம்மேளனத்தில் இணைந்து கொண்டது. 1972 இல் 'இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்' (SLRC) எனப் பெயர் மாற்றம் பெற்று 1980 இல் சமூக சேவை அமைப்பொன்றாக இலங்கையில் பதிவு செய்யப்பட்டது.*

*2002 முதல் தனியான முகாமைத்துவம் மற்றும் ஆளுநர் சபை யுடன் தொழிற்பட்டு வரும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நாடு முழுவதும் பல கிளைகளின் ஊடாக பயிற்றப்பட்ட தொண்டர் ஊழியர்கள் மூலம் மனதாபிமானப் பணிகளில் ஈடுபட்டு வருகின் றது.*

# 61

## சர்வதேச மன்னிப்புச் சபை
## (Amnesty International)

*உலகம் முழுவதும் நிகழும் மனித உரிமை மீறல்களை நிறுத்தக் கோரி **1961** ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ‘மன்னிப்புக்கான மேன்முறையீடு’* (Appeal for Amnesty) *எனும் போராட்டத்தைத் தொடர்ந்து **1963** செப்டெம்பர் **30** ஆம் திகதி ‘சர்வதேச மன்னிப் புச் சபை’ தாபிக்கப்பட்டது.*

*போர்த்துக்கல் அரசின் சர்வாதிகார ஆட்சியிலிருந்து சுதந்திரம் கோரி செயற்பட்ட இரு மாணவர்கள் **1960** இல் சிறையிலடைக் கப்பட்டதற்கு எதிராக **1961** மே **28** ஆம் திகதி லண்டன்* The Observer *பத்திரிகையில் பிரித்தானிய சட்டத்தரணி* Peter Benen son *எழுதிய ‘மறக்கப்பட்ட சிறைக் கைதிகள்’* (The Forgotten Prisoners) *எனும் கட்டுரை இதற்கான அடித்தளத்தை வழங்கியது.*

‘*மனசாட்சிக் கைதிகள்*’ (Prisoners of Conscience) (POC) *அனைவரையும் விடுதலை செய்யும் முறையீட்டைக் கோரி நீதிக்*

கும் சுதந்திரத்திற்குமான போராட்டத்தில் ஒன்றுபட்டு குரல் கொடுக்க அவர் மக்களைக் கேட்டுக் கொண்டார். இதுவே சர்வதேச மன்னிப்புச்சபை பிரபல்யமடைய பிரதான காரணமா கும். 1963 இல் முதல் மனசாட்சிக் கைதி பேராயர் Josof Slipyi சைபீரியாவில் விடுதலை செய்யப்பட்டார்.

1972 இல் சித்திரவதைக்கு எதிரான முதலாவது பிரச்சாரத்தை ஆரம்பித்தது. அதனைத் தொடர்ந்தே 1984 இல் சித்திரவ தைக்கு எதிரான செயற்பாட்டை ஐ.நா. முன்னெடுத்தது. 1974 இல் 'அவசர நடவடிக்கை வலையமைப்பை' (Urgent Action Network) உருவாக்கி சிறைக்கைதிகளுக்கு மருத்துவ சட்ட உதவி களை வழங்கத் தொடங்கியது. 1980 இல் மரண தண்டனைக்கு எதிரான பிரச்சாரத்தை முதன்முறையாக ஆரம்பித்தது. 1961 இல் 9 நாடுகள் மாத்திரமே மரண தண்டனையை ஒழித்திருந்த எண்ணிக்கை 2014 இல் 140 நாடுகளானது.

1993 இல் இனச்சுத்திகரிப்புகள், யுத்தக் குற்றங்களுக்கு உரிய வர்களைப் பொறுப்பாக்கி நீதி கோர சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தை (ICC) தாபிக்க வேண்டி பிரச்சாரம் செய்தது. (2002 இல் ICC தாபிக்கப்பட்டது.) 2006 இல் சர்வதேச மன்னிப்புச் சபையின் 'மனசாட்சித் தூதுவராக' (Ambassador of Cons cience) நெல்சன் மண்டேலா நியமிக்கப்பட்டார். (1962 இல் மண்டேலாவின் விசாரணையைக் கண்காணிக்க மன்னிப்புச் சபை சட்டத்தரணியொருவரை அனுப்பியிருந்தது.)

உலகளாவிய இணைய வழி வெளியீட்டு சுதந்திரத்துக்கான (Freedom of Expression) நீண்ட காலப் பிரச்சாரத்தைத் தொடர்ந்து ஜனநாயக ஆதரவு கட்டுரைகளுக்காக சிரியாவில் சிறை வைக்கப் பட்டிருந்த Ali al-Shihabi 2007 இல் விடுதலை செய்யப்பட்டார். சர்வதேச மன்னிப்புச் சபை ஆதரவாளர்களின் வலியுறுத்தலால் 'ஆயுத வர்த்தக உடன்படிக்கை' (Arms Trade Treaty - ATT) 2014 டிசெம்பர் 24 இல் நடைமுறைக்கு வந்தது.

சர்வதேச மன்னிப்புச் சபை மனித உரிமை மீறப்பட்டவர்களுக்கு

நியாயத்தைப் பெற்றுக் கொடுத்தல், மனித உரிமை மீறப்படுவதை முடிவுக்குக் கொண்டு வருதல், அதற்காக ஊடகங்களின் கவனத்தை ஈர்த்தல், நேரடியாக மறுபரிசீலனைக்கு மனுச் செய்தல், அது தொடர்பாக ஆராய்தல் ஆகிய நோக்கங்களை ஆரம்பத்தில் கொண்டிருந்தது. அரசியல் கைதிகளின் விடுதலை, சுதந்திரம், கண்ணியம் என்பன அச்சுறுத்தலுக்குள்ளான எந்தவொருவருக்காகவும் குரல் கொடுக்கிறது.

துயருக்குள்ளானோர், பின்தங்கிய கோத்திரத்தினர், சமயத்தினர், இனத்தினர் தொடர்பாகவும் பெண்களின் உரிமைகள், சிறுவர் உரிமைகள், சித்திரவதையை முடிவுக்குக் கொண்டு வருதல், மரண தண்டனையை ஒழித்தல், அகதிகள் - புலம்பெயர்ந்தோர் உரிமைகள், சிறைக் கைதிகளின் உரிமைகள், பாலியல் - மகப்பேற்று உரிமைகள், பாரபட்சத்தை எதிர்த்தல், மனிதனின் கௌரவத்தைப் பேணுதல் ஆகிய துறைகளில் தற்போது செயற்பட்டு வருகின்றது.

மனித உரிமை துஷ்பிரயோகம் குறித்து புலனாய்வு செய்து உண்மையைக் கண்டறிதல், சம்பந்தப்பட்ட அரசாங்கங்கள், பலம் வாய்ந்த குழுக்கள் போன்றவற்றை சர்வதேச சட்டத்துக்கு மதிப்பளிக்கத் தூண்டுதல், மக்களின் பிரபல்யமான சம்பவங்களை வெளிப்படுத்துவதன் மூலம் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தல், கல்வி - பயிற்சியின் ஊடாக மக்கள் தம் உரிமைகளை அனுபவிக்கவும் பாதுகாப்புப் பெறவும் உதவுதல் என்பன மன்னிப்புச் சபையின் முக்கிய பணிகளாகும்.

இதற்காக விரிவான ஆராய்ச்சி, பிரச்சாரம் மூலம் உலகளவில் மனித உரிமை துஷ்பிரயோகத்துக்கு எதிராகப் போராட உதவுதல், சித்திரவதையாளர்களை நீதியின் முன் நிறுத்துதல், அடக்குமுறையான சட்டங்களை மாற்றுதல், சிறைப்படுத்தப்பட்டோரின் கருத்துக்களை வெளிப்படுத்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ளது.

சுமார் **150** இற்கும் மேற்பட்ட நாடுகளில் இயங்கி வரும் சர்வதேச மன்னிப்புச் சபை, உலகம் பூராகவும் **2** மில்லியனுக்கு

மேற்பட்ட அங்கத்தவர்களையும் ஆதரவாளர்களையும் 5 மில்லியனுக்கு மேற்பட்ட செயற்பாட்டாளர்களையும் கொண்டுள்ளது. ஒரு சர்வதேச அரச சார்பற்ற அமைப்பான சர்வதேச மன்னிப்புச் சபை மனித உரிமைகள் துஷ்பிரயோகத்தை முடிவுக்குக் கொண்டுவர பிரச்சாரம் செய்யும் ஒரு உலகளாவிய இயக்கமாகும்.

தலைமையகம் லண்டனில் அமைந்திருந்தாலும் தற்போது ஆபிரிக்கா, ஆசிய - பசிபிக், மத்திய - கிழக்கு ஐரோப்பா, லத்தீன் அமெரிக்கா, மத்திய கிழக்கு என பிராந்திய அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ளன. அதனால் சுதந்திரத்துக்காகவும் அமைதிக்காகவுமான அதன் பணி துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபை தமது பணிகளை மக்களை விழிப்புணர்வூட்டி ஊடகங்களின் கவனயீர்ப்பின் மூலம் அதிகளவில் முன்னெடுத்துச் செல்கின்றது. அதன் சேவைக்காக 1977 ஆம் ஆண்டு சமாதானத்துக்கான நோபல் பரிசைப் பெற்றுக் கொண்டது. அரை நூற்றாண்டுகளுக்கு மேலான சர்வதேச மன்னிப்புச் சபையின் சேவை அடைவுகள் உலகில் நல்ல பல மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் ஏற்படுத்தியுள்ளன.

# 62

# மனித உரிமைகள் கண்காணிப்பு (Human Rights Watch)

*'மனித உரிமைகள் கண்காணிப்பு'* (Human Rights Watch) *சர்வதேச ரீதியில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் அர்ப் பணிப்புடன் செயற்படும் இலாப நோக்கமற்ற- சுயாதீனமான ஒரு முன்னணி சர்வதேச அரச சார்பற்ற அமைப்பாகும். சர்வதேச ரீதி யாக மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பாக சர்வதேச கவனத்தை ஈர்க்கச் செய்வதன் மூலம் அவற்றைத் தடுத்து நிறுத்த அழுத்தங் கொடுத்துவரும் இவ்வமைப்பு உலகம் பூராகவும் பாதிக் கப்படுகின்ற மக்களுக்கு நீதியையும் பாதுகாப்பையும் பெற்றுக் கொடுக்கப் பாடுபடுகின்றது.*

*மனித உரிமைகள் கண்காணிப்பு* Robert L. Bernstein *மற்றும்* Aryeh Neier *ஆகியோரால் அமெரிக்க அரச சார்பற்ற நிறுவன மொன்றாக **1978** இல் நியூயோர்க் நகரில் ஆரம்பிக் கப்பட்டது. **1975** இல் 'ஹெல்சிங்கி கண்காணிப்பு'* (Helsinki Watch) *இவ்வமைப்பு உருவாக்கத்தின் அடிப்படையாகும்.*

முன்னாள் சோவியத் யூனியனிலும் கிழக்கு ஐரோப்பிய நாடு களிலும் இடம்பெற்ற மனித உரிமைகளுக்கெதிரான வன்முறை களை முடிவுக்குக் கொண்டு வருவதில் 'ஹெல்சிங்கி கண்காணிப்பு' ஈடுபட்டது. 1980 களின் பிற்பகுதியில் ஏற்பட்ட ஜனநாயக மாற் றத்துக்கு இது உதவியது.

அதனைத் தொடர்ந்து 1981 இல் அமெரிக்கக் கண்காணிப்பு (Americas Watch), 1985 இல் ஆசிய கண்காணிப்பு (Asia Watch), 1988 இல் ஆபிரிக்கக் கண்காணிப்பு (Africa Watch), 1989 இல் மத்திய கிழக்கு கண்காணிப்பு (Middle East Watch) உருவாக்கப் பட்டு அவை அனைத்தும் சேர்ந்து 'கண்காணிப்புக் குழுக்கள்' (The Watch Committees) என அறியப்பட்டது. 1988 இலிருந்து 'மனித உரிமைகள் கண்காணிப்பு' (Human Rights Watch) என அழைக்கப்படுகிறது.

அமைப்பின் தலைமையகம் நியூயோர்க் நகரில் அமைந்துள் ளது. 1989 இல் முதலாவது நிரந்தர ஐரோப்பிய அலுவலகம் லண் டனிலும் 1996 இல் ஆசிய அலுவலகம் ஹொங்கொங்கிலும் 2001 இல் ஆபிரிக்க அலுவலகம் கொங்கோவின் கோமாவிலும் 2010 இல் மத்திய கிழக்கு அலுவலகம் பெய்ரூட்லும் 2014 இல் லத்தீன் அமெரிக்க அலுவலகம் பிரேசிலின் சாஓ போலோவிலும் திறக்கப் பட்டது. 1996 இல் பேர்லினிலும் 2009 இல் டோக்கியோவில் 2011 இல் நைரோபியில் 2013 இல் சிட்னியிலும் 2017 இல் தென் கொரியாவின் சியோலிலும் அலுவலகம் திறக்கப்பட்டது.

1990 இல் பெண்ணுரிமை பற்றியும் தொடர்ந்து ஆயுதங்கள், சிறுவர்கள், அங்கவீனர்கள், பாலின உறவுகள் (LGBT), அகதிகள் சம்பந்தமான பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டன. 2006 இல் பிணக்கு கள் மற்றும் ஏனைய நெருக்கடிகள் குறித்துக் கவனிக்க அவசரக் குழு தாபிக்கப்பட்டது. 2016 இல் சுற்றாடல் சார் செயற்பாடு ஆரம்பமானது.

பாதிக்கப்படும் சிறுபான்மையினர், யுத்தத்தில் அகப்படும் பொதுமக்கள், அகதிகள், தேவையுடைய சிறுவர்கள் போன்ற

அதிக நெருக்கடி நிலையிலுள்ளோர் குறித்து கவனமெடுக்கிறது. இதற்காக அரசாங்கம், ஆயுதக் குழுக்கள் என்பன தமது சட்டம், கொள்கை, செயற்பாடுகளை மாற்றிக் கொள்ளவும் பாதிக்கப் பட்டோருக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கவும் செயற்படுகின் றது.

உலகளாவிய ரீதியில் இடம்பெறும் துஷ்பிரயோகங்கள் குறித்து புலனாய்வு செய்தல் (Investigate), வெளிப்படுத்தல் (Expose), மாற்றம் கொண்டு வருதல் (Change) ஆகிய பணிகளை மேற்கொள்கின்றது. மியன்மார் ரோஹிங்ய நெருக்கடி, பிலிப் பைன்ஸில் இடம்பெற்ற பாரிய கொலைகள், ஐக்கிய அமெரிக்க குடிவரவு, ஐரோப்பிய அகதிகள், தென் சூடான் முரண்பாடு போன்ற சமகாலத்தில் உலகளவில் பிரசித்தமான முக்கிய நெருக் கடிகள் குறித்தும் கவனம் செலுத்தி வருகின்றது.

உலகில் நீதி, கண்ணியம், இரக்கம், சமத்துவம் பேணப்பட உதவுகின்றது. உலகின் எந்த மூலையிலும் நிகழும் துஷ்பிரயோக சம்பவம் குறித்து புலனாய்வு செய்து அறிக்கையிடும் பணியினை மேற்கொள்கின்றது. நிலக்கண்ணி வெடிகளைத் தடை செய்தலுக் கான சர்வதேச பிரச்சாரத்தின் ஆரம்பகர்த்தா என்ற வகையில் 1997 இல் நோபல் சமாதானப் பரிசு வழங்கப்பட்டது.

## உசாத்துணைகள்


1. Ministry of Foreign Affairs (1998) *Sri Lanka Foreign Affairs,* Colombo: Ministry of Foreign Affairs
2. Hameed A.C.S. (1988) *Disarmament – a multilateral approach,* Colombo 2: Lake house Investments Ltd.
3. Hameed A.C.S. (1988) *Foreign Policy Perspectives of Sri Lanka – Selected speeches,* Colombo 2: Lake house Investments Ltd.
4. Jayewardene J.R. (1988) *My Quest for Peace – A Collection of Speeches on International Affairs,* Singapore: Stamford Press (Pte) Ltd.
5. United Nations (1998) *Basic Facts about the United Nations,* New York: United Nations.
6. European Commission (1998) *Regional Co – operation and Integration: Perspectives from Europe and South Asia,* Colombo: Delegation of the European Commission to Sri Lanka.

7. https://www.un.org/en/
8. https://lk.one.un.org/
9. https://www.ohchr.org/EN/pages/home.aspx
10. https://www.unhcr.org/
11. https://www.undp.org/content/undp/en/home.html
12. https://www.unicef.org/
13. https://www.ilo.org/global/lang--en/index.htm
14. http://www.fao.org/home/en/
15. https://en.unesco.org/
16. https://whc.unesco.org/
17. https://www.who.int/
18. https://www.worldbank.org/
19. https://en.wikipedia.org/wiki/World_Bank
20. https://www.imf.org/external/index.htm
21. https://www.unfpa.org/
22. https://www.undp.org/

23. https://www.wto.org/
24. https://www.iaea.org/
25. https://www.g77.org/
26. https://www.g24.org/
27. http://www.oas.org/en/
28. http://www.bsec-organization.org/
29. https://ufmsecretariat.org/
30. https://en.wikipedia.org/wiki/Union_for_the_Mediterra nean
31. https://www.apec.org/
32. https://www.iom.int/
33. https://thecommonwealth.org/
34. http://eng.sectsco.org/
35. https://en.wikipedia.org/wiki/Shanghai_Cooperation_ Organisation
36. https://www.nuclearsuppliersgroup.org/en/
37. https://en.wikipedia.org/wiki/Nuclear_Suppliers_Group
38. https://en.wikipedia.org/wiki/Union_of_South_ American_Nations
39. https://en.wikipedia.org/wiki/Trans-Pacific_Partnership
40. https://www.tpp.mfat.govt.nz/
41. https://www.investopedia.com/terms/t/transpacific-partnership-tpp.asp
42. http://www.naftanow.org/
43. https://en.wikipedia.org/wiki/North_American_ Free_Trade_Agreement
44. https://www.mercosur.int/en/
45. www.naaclc.org
46. https://europa.eu/
47. https://au.int/en
48. https://www.iora.int/en
49. http://infobrics.org/
50. http://brics.utoronto.ca/

51. https://www.oic-oci.org
52. www.cec.org/council
53. https://bimstec.org/
54. https://en.wikipedia.org/wiki/Human_Rights_Watch
55. https://www.nato.int/
56. https://en.wikipedia.org/wiki/Indian_Ocean_Rim_
Association
57. https://bimstec.org/
58. https://www.namazerbaijan.org/
59. https://asean.org/
60. https://en.wikipedia.org/wiki/Group_of_Seven
61. https://saarc-sec.org/
62. https://colombo-plan.org/
63. https://saarcculture.org/
64. http://www.sau.int/
65. http://www.sdfsec.org/
66. https://www.saarcenergy.org/
67. https://www.opec.org/opec_web/en/
68. https://en.wikipedia.org/wiki/G20
69. https://www.g20.org/
70. http://g20.org.tr/logo-2/index.html
71. http://www.mikta.org/
72. https://en.wikipedia.org/wiki/MIKTA
73. https://oecs.org/
74. https://www.icrc.org/
75. https://media.ifrc.org/ifrc
76. https://www.amnesty.org/en/
77. https://www.hrw.org/
78. https://borgenproject.org/history-of-the-unfpa/
79. https://caricom.org/
80. https://en.wikipedia.org/wiki/Association_of_
Caribbean_States
81. https://en.wikipedia.org/wiki/Caribbean_Community

82. http://www.acs-aec.org/
83. https://alianzapacifico.net/en/
84. http://celacinternational.org/
85. https://en.wikipedia.org/wiki/Pacific_Alliance
86. https://en.wikipedia.org/wiki/Community_of_Latin_American_and_Caribbean_States
87. https://en.wikipedia.org/wiki/ALBA
88. http://www.portalalba.org/index.php/
89. https://albainfo.org/what-is-the-alba/
90. https://www.nti.org/

## மாதிரி வினாக்கள்

➤ சரியான மிகப் பொருத்தமான விடை

01. ஐக்கிய நாடுகள் தினம்

1. செப்டம்பர் 24 2. ஒக்டோபர் 24

3. நவம்பர் 24 4. டிசம்பர் 26 5. ஜனவரி 26

02. ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்துவ நாடுகள்

1. ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, ரஷ்யா, பிரான்ஸ், சீனா

2. ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, ரஷ்யா, பிரான்ஸ், எகிப்து

3. ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, ரஷ்யா, ஜேர்மனி, இத்தாலி

4. ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, ரஷ்யா, இந்தியா, ஜப்பான்

5. ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, ரஷ்யா, சீனா, பிரேசில்

03. ஐ.நா. சபையின் பிரதான கட்டமைப்பில் உள்ளடங்காதது

1. பொதுச் சபை

2. பாதுகாப்புச் சபை

3. பொருளாதார, சமூக சபை

4. நம்பிக்கைப் பொறுப்புச் சபை

5. சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்

04. ஐ.நா. சபையின் அங்கத்துவ நாடுகளின் எண்ணிக்கை

1. 188 2. 190 3. 193 4. 195 5. 197

*05.* ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பதவிக்காலம்

*1. 2* ஆண்டுகள் *2. 3* ஆண்டுகள்

*3. 4* ஆண்டுகள் *4. 5* ஆண்டுகள்

*5. 6* ஆண்டுகள்

*06.* சர்வதேச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை

*1. 5* *2. 10* *3. 15* *4. 20* *5. 25*

*07.* ஐ.நா. அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் (UNHCR) அலுவலகம் அமைந்துள்ள நகரம்

*1.* ஹேக் *2.* ஜெனீவா *3.* டோக்கியோ

*4.* நியூயோர்க் *5.* பாரிஸ்

*08.* உலக வங்கியின் பணிகளுள் ஒன்றல்லாதது

*1.* கடனாக நிதி வழங்குதல்

*2.* முதலீடுகளை ஒருங்கிணைத்தல்

*3.* பொருளாதார, தொழில்நுட்ப ஆலோசனை வழங்குதல்

*4.* விவசாயத்துறையில் ஆய்வுகளை மேற்கொள்ளல்

*5.* மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்

*09.* உலக வங்கித் தொகுதியில் உள்ளடங்காதது

*1.* சர்வதேச அபிவிருத்தி சங்கம் (IDA)

*2.* சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் (IFC)

*3.* பல்தரப்பு முதலீட்டு உத்தரவாத முகவரகம் (MIGA)

*4.* சர்வதேச நாணய நிதியம் (IMF)

5. சர்வதேச புனருத்தானத்துக்கும் அபிவிருத்திக்குமான வங்கி (IBRD)

10. தென்னாசிய பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பின் (SAARC) குறிக்கோள்களுள் ஒன்றல்லாதது

1. தென்னாசிய மக்களின் வாழ்க்கை நலனை மேம்படுத்தல்
2. தென்னாசிய நாடுகள் கூட்டாகத் தம்மை நம்பியிருப்பதை வலுப்படுத்தல்
3. பிராந்திய பொருளாதார வளர்ச்சி, சமூக முன்னேற்றம், கலாசார அபிவிருத்தியைத் துரிதப்படுத்தல்
4. வளர்முக நாடுகளுடன் கூட்டுறவை பலப்படுத்துதல்
5. தென்னாசிய கூட்டுப் பாதுகாப்புக்குப் பங்களிப்புச் செலுத்துதல்

11. பொதுநலவாய அமைப்பின் (Commonwealth) பணிகளில் அடங்காதது

1. விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவுப் பரிமாற்றம்
2. புலமைப்பரிசில் மூலமான உயர்கல்வி, ஆராய்ச்சி
3. மின்சக்தி மற்றும் வனவள மேம்பாடு
4. யுத்தப் பாதிப்புக்குள்ளான இடங்களின் மீள் கட்டுமானம்
5. அரசியல், பொருளாதார, சமூக, கலாசார ஒத்துழைப்பு

12. ஐரோப்பிய யூனியன் (EU) அங்கத்துவ நாடுகளின் எண்ணிக்கை

1. 11 2. 14 3. 16 4. 19 5. 27

13. ஐரோப்பிய யூனியன் தனிச்சந்தை (Single Market) மற்றும் யூரோ (EURO) தனி நாணயம் அமுலிலுள்ள நாடுகளின் எண்ணிக்கை

*1. 11 2. 14 3. 16 4. 19 5. 27*

*14.* SAARC அமைப்பு உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டு முதலாவது உச்சி மாநாடு நடைபெற்ற இடமும் வருடமும்

*1. கொழும்பு 1984 2. டாக்கா 1985*

*3. பெங்களூர் 1986 4. காத்மண்ட் 1987*

*5. இஸ்லாமாபாத் 1988*

*15.* தென்கிழக்காசிய நாடுகளின் சங்கத்தில் (ASEAN) அங்கத்துவம் வகிக்கும் நாடுகளின் எண்ணிக்கை

*1. 10 2. 12 3. 14 4. 16 5. 18*

*16.* ASEAN அமைப்பில் அங்கத்துவம் வகிக்காத நாடுகள்

*1. இந்தோனேசியா, தாய்லாந்து, புரூனை*

*2. கம்போடியா, லாவோஸ்*

*3. மலேசியா, சிங்கப்பூர்*

*4. சீனா, கிழக்குத் திமோர்*

*5. பிலிப்பைன்ஸ், வியட்நாம், மியன்மார்*

*17.* ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை அங்கத்துவம் பெற்ற திகதி

*1. 1945 நவம்பர் 14 2. 1945 டிசம்பர் 24*

*3. 1955 ஒக்டோபர் 24 4. 1955 டிசம்பர் 14*

*5. 1965 ஜனவரி 01*

*18.* ஐரோப்பிய யூனியனில் அங்கத்துவம் வகிக்காத ஐரோப்பிய நாடு

*1. சுவீடன் 2. சுவிட்சர்லாந்து*

3. கிறீஸ் 4. நெதர்லாந்து

5. போர்த்துக்கல்

19. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ICRC) தாபிக்கப்பட்ட நாடு

1. இத்தாலி 2. சுவிடன்

3. சுவிட்சர்லாந்து 4. பிரான்ஸ் 5. பிரித்தானியா

20. சர்வதேச மன்னிப்புச் சபையின் (Amnesty International) குறிக்கோள்களுள் ஒன்றல்லாதது

1. யுத்தத்தில் பாதிக்கப்படுவோரை மீள்குடியமர்த்தல்
2. மனித உரிமை மீறப்படுவதற்கெதிராகக் குரல் கொடுத்தல்
3. பின்தங்கிய பாதிக்கப்படும் பிரிவினரின் உரிமைகளுக்கு அழுத்தங் கொடுத்தல்
4. சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் சட்ட ரீதியான நடத்துகையை உறுதிப்படுத்தல்
5. மனித உரிமை மீறப்படுவது குறித்து ஊடகங்களின் கவனயீர்ப்பை அதிகப்படுத்தல்

**சரியான மிகப் பொருத்தமான விடையளிக்க.**

21. 1948 - 1978 காலப்பகுதியில் இலங்கையின் பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சராக இருந்தவரின் பதவிப் பெயர் யாது?

22. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தாபகர் யார்?

23. SAARC அமைப்பின் தந்தை எனப்படுபவர் யார்?

24. ஐரோப்பிய தினம் எது? (மாதம், திகதி)

25. ஐக்கிய நாடுகள் சபையின் தலைமை காரியாலயம் எந்த நகரில் அமைந்துள்ளது?

26. UNESCO தாபனத்தின் தலைமைக் காரியாலயம் எந்த நாட்டில் அமைந்துள்ளது?

27. ஐக்கிய நாடுகள் சபையின் தற்போதைய செயலாளர் நாயகம் யார்?

28. SAARC அமைப்பில் இறுதியாக அங்கத்துவம் பெற்ற நாடு எது?

29. SAARC உச்சி மாநாடு இறுதியாக நடைபெற்ற நாடு எது?

30. ECHO என்பது எந்தப் பிராந்திய அமைப்பின் உதவித் திட்டம்?

31. பொதுநலவாய அமைப்பின் தலைமை பதவியை வகிக்கும் நாடு எது?

32. ஐ.நா. சபையின் வரவு செலவுத் திட்டத்திற்கு ஆகக் கூடுதலாக நிதி வழங்கும் முதலாவது நாடு எது?

33. ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழகம் அமைந்துள்ள நகரம் எது?

34. சர்வதேச ரீதியாக சிறுவர்களின் நலனைப் பேண நிறுவப் பட்ட ஐ.நா. அமைப்பு எது?

35. SAPTA, SAFTA என்பவற்றுடன் தொடர்புடைய பிராந்திய அமைப்பு எது?

36. ASEAN அமைப்பு எந்த நாட்டில் தாபிக்கப்பட்டது?

37. பொருளாதார, சமூக சபையில் (ECOSOC) அங்கத்துவம் வகிக் கும் ஐ.நா. அங்கத்துவ நாடுகள் எத்தனை?

38. SAARC அமைப்பின் செயலகம் எந்த நாட்டில் அமைந்துள் ளது?

39. ஐ.நா. சபையின் உத்தியோகபூர்வ மொழிகள் எத்தனை?

40. கொழும்புத்திட்டம் (Colombo Plan) தாபிக்கப்பட்ட நாடு எது?

*41.* அணிசேரா இயக்க (NAM) முன்னோடிகளுள் ஒருவரது பெயர் தருக.

*42.* ஐரோப்பாவின் தந்தை (Father of Europe) என அழைக்கப் படுபவர் யார்?

*43. 1946* ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு மாற்றீடாக *2006* இல் தாபிக்கப்பட்ட பேரவையின் பெயர் என்ன?

*44.* GATT எனும் அமைப்புக்கு மாற்றீடாக அமைக்கப்பட்ட ஐ.நா. தாபனத்தின் பெயர் என்ன?

*45.* NATO இராணுவக் கூட்டமைப்புக்கு எதிராக அமைக்கப்பட்ட இராணுவக் கூட்டமைப்பு எது?

*46.* Bretton Woods twins என அழைக்கப்படும் உலகின் பிரதான இரு நிதி நிறுவனங்களும் எவை?

*47.* BENELUX என்பதன் மூலம் அழைக்கப்டும் *3* ஐரோப்பிய நாடு களும் எவை?

*48.* Swaziland நாட்டின் புதிய பெயர் என்ன?

*49.* Schengen Area என்பதன் மூலம் அறியப்படும் வீசா (Visa) முறைமையில் உள்ளடங்கும் ஐரோப்பிய நாடுகள் எத்தனை?

*50.* Belize எனும் மத்திய அமெரிக்க நாடு முன்னர் எப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டது?

## நூலாசிரியர்



முகுசீன் றயீசுத்தீன், மன்னார்- சிலாவத்துறையை பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சர்வதேச உறவுகள், அரசியல் விஞ்ஞானம், புவியியல் ஆகிய பாடங்களில் கலை இளமானிப் பட்டத்தையும் (BA) இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவையும் (PGDE) கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கல்வி முதுமானிப் பட்டத்தையும் (MEd.) பெற்றுள்ளார். அரசியல் விஞ்ஞான பாட ஆசிரியரும் அகில இலங்கை சமாதான நீதவானுமான இவர், முசலி பிரதேச சபையின் உப தவிசாளர் பதவியில் தற்போது அமர்ந்துள்ளார்.

'சர்வதேச, பிராந்திய அமைப்புகள்' எனும் இந்நூல் இவரது 3 ஆவது நூலாகும். ஏற்கனவே 'இலங்கையின் அரசியல் முறைமை' எனும் நூலின் 2 பதிப்புகளையும் 'ஒப்பீட்டு அரசாங்கமும் அரசியலும்' எனும் நூலையும் இவர் எழுதி வெளியிட்டுள்ளார். கொழும்புப் பல்கலைக்கழகத்தில் எனது மாணவராக இருந்த இவர் தொடர்ந்தும் இவ்வாறான பயன்மிகு பணியினை மேற்கொள்ள வேண்டுமென வாழ்த்துகிறேன்.

கலாநிதி பரீனா றுசைக்

**Dr. Fareena Ruzaik**
Senior Lecturer
Department of Geography
Secretary / ERCSSH / FoA
University of Colombo

விலை: 600.00

வெளியீடு
முசலி வாசகர் வட்டம்
**Readers Circle of Musali (RCM)**

ISBN 978-955-7555-04-1